பொய்
சிவசங்கரி

CHENNAI-

பதிப்புரை

'சமூக எழுத்தாளர்' திருமதி சிவசங்கரி அவர்கள் எழுதியுள்ள 'பொய்' எனும் சமூக நாவலை வானதி பதிப்பகம் பெருமையுடன் வெளியிடுகிறது.

அவர்கள் எழுதும் புதினங்களின் கதாபாத்திரங்களின் வாயிலாக மனிதர்தம் வெளிமுகங்களை மட்டுமே வாசகர்க்குக் காட்டாமல், உள்முக அலைபாய்ச்சலையும், பொய்முகம் காட்டும் போக்கையும் கூட்டிக் காட்டுவதை வாசகர்கள் நன்கறிவர்.

நாவாசிரியரின் பெருமையும் புகழும் ஓங்கி வளர்வதற்கு முக்கியமான காரணிகளாக அமைந்துள்ளவை ஆசிரியரின் எழுத்துக்களில் சமூக அக்கறையும் மனிதநேய மாண்புகளும் பெண்ணிய உயர்வு குறித்த சிந்தனைகளும் என்றால் மிகையன்று.

எந்த ஒரு நாவலின் கதாபாத்திரங்கள் வாசகர் நெஞ்சத்தில் நீங்காத இடத்தைப் பிடிக்கிறார்களோ, அந்த நாவல் வெற்றி பெறுவது உறுதி. அப்படிப்பட்ட பாத்திரங்கள் படைக்கும் ஆற்றலில் திருமதி சிவசங்கரி அவர்கள் கைதேர்ந்தவர்.

இந்த நாவலில் வரும் கிரிதர் என்பவன் இந்திய மண்ணில் துர்கா எனும் மனைவியோடு வாழ்ந்தபோது மெய் முகம் காட்டி, அந்நிய மண்ணில் பணி பயிற்சியின் நிமித்தம் சென்றபின் அவளுக்குப் பொய்முகம் காட்டி, அவளை ஏமாற்றுவதுதான

வீண்டா என்ற அமெரிக்கப் பெண்ணை மணந்து கொண்டு துர்க்காவை ஏமாற்றுவதுதான— மூலக் கரு.

தன் இரண்டு பிள்ளைகள் "அப்பா எப்போ வருவார்?" என்று கேட்ட கேள்விக்கு "வருவார் வருவார்" என்று சமாளித்துக் கொண்டிருந்த துர்காவுக்கு, கிரிதரிடமிருந்து வந்த கடிதம் பேரிடியாய் இறங்குகிறது. அதனைத் தாங்கிக் கொண்டு பிள்ளைகளை அழைத்துக் கொண்டு கணவன் வாழும் நாட்டிற்கே செல்கிறாள்.

கணவனை நேரில் பார்த்து, "என்னோட வாழ வாங்க"ன்னு உங்களைக் கெஞ்சுவேன்னு நினைச்சீங்க... நீங்க வரவே மாட்டீங்கன்னு நான் சொன்னா... நா பொய் சொல்றதாதான் இவங்க நினைப்பாங்க. 'அம்மா பொய் சொல்றா'ன்ற எண்ணம் பதிஞ்சிட்டா, அப்புறம் என்னிக்கும் என்னை மன்னிக்க மாட்டாங்க..."

— என்று பொய்முகக் கணவனுக்குப் புத்தி புகட்டிவிட்டு தன் பிள்ளைகளுக்குத் தான் மெய்யானவள் என்பதை நிரூபித்த திருப்தியுடன் வெளியேறுகிறாள், இரண்டு குழந்தைகளுடன். இந்த இடத்தில் மகாகவி பாரதியின் புதுமைப் பெண்ணை நாம் நேரில் பார்த்தது போன்றதொரு பிரமை ஏற்படுகிறது.

நல்லதோர் கருத்தை அடிப்படையாக வைத்து ஆசிரியர் புனைந்துள்ள இந்நாவலை வானதி பதிப்பகத்தில் வெளியிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

திருமதி சிவசங்கரிக்கு என் நன்றியும் வாழ்த்துக்களும் உரித்தாகும்.

ஏ. திருநாவுக்கரச
வானதி பதிப்பகம்

பொய்

(1)

"அழுதியா?"

"ம்ஹூம்..."

"எங்க நிமிர்ந்து என்னைப் பாரு..."

ஏறிட்டவளின் கண்களில் சிவப்புக் கோடு போட்டிருக்க, கிரிதர் அவளைத் தன்னிடம் இழுத்து அணைத்துக்கொண்டான.

"நீ இப்படிக் கலங்கி நிக்கறப்போ, புறப்பட மனசே வாலை, துர்கா... உன்னையும் பசங்களையும் பிரிஞ்சிருக்கறது எனக்கு மட்டும் சாதியம்னு நினைக்கறியா? ம்? நீ வெளிப்படையா அழறே. நா காட்டிக்கலை... அதான்."

பிடியை இறுக்கியவன், குனிந்து அவள் வலிட்டில் முத்தமிட்டான்.

"பேசாம எம்.டி.க்கு போன் பண்ணி, 'சார், மன்னிச்சக்கங்க... நா போகலை'ன்னு சொல்லிடட்டுமா?"

நிஜமாவே அவள்தையுடன் அவன் பேச, துர்கா சட்டென்று நிமிர்ந்தாள். அழகாக, அறுதல் கூறும் விதமாய் புன்னகைத்தாள். எம்பி, நுனி விரல்களால் நின்று அவன் தலையில் லேசாக முட்டி, 'அ..ச..டு' என்று சிலாக்குரலில் முணுமுணுத்தாள்.

"இல்லே, துர்கா- சீரியஸாத்தான் சொல்றேன்... இப்படி உங்களைப் பிரிஞ்சு அயல்நாட்டுக்குப் போயாவது..."

அவன் தொடர்ந்து பேசமுடியாதபடி துர்கா விரலை உதடுகள் மேல் வைத்து அடக்கினாள்.

"புறப்படற சமயத்துல குழந்தைத்தனமா என்ன பேச்சு இது, கிரி..."

"பின்னே? நாலு நாளா நீ எப்படியோ இருக்கறதை நா பார்க்கலைன்னு நினைச்சியா? புறப்படற நாள் கிட்ட வரவர, எனக்குள்ள உண்டாயிருக்கற தவிப்பு! எப்படிடா உன்னையும் பசங்களையும் விட்டுட்டு... ஆறு மாசம்... கடவுளே! என்னால நிச்சயம் முடியாது, துர்கா..."

"யாராவது கேட்டா சிரிக்கப்போறாங்க, கிரி! பினேனுக்கு இன்னும் ரெண்டு மணிநேரம்கூட இல்லே, இப்பப்போயி..."

"சிரிக்கட்டும், கவலையில்லே... எல் வீதனை எனக்கு..."

துர்கா அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

சட்டை பட்டனை விரல்களால் திருகி நிமிண்டியவாறு தீவிரமான குரலில் பேசினாள்.

"யாருக்காக இத்தனை அவஸ்தை, கிரி? எனக்காகவும், நம்ம பசங்களுக்காகவும்தானே? டிரையினிங் முடிஞ்ச திரும்பிவந்தா, லொட்டுனு வொர்க்ஸ் மானேஜர் பதவி உயர்வு கிடைக்கப்போறது... இன்னும் பெரிய சம்பளம், பெரிய வீடு, ஆபீஸ் கார், மத்த சௌகரியங்கள்... ம்ம்... மனமனலனு உயர்ந்துலிட்டே போகக்கூடிய வாழ்க்கைத்

தரம்... இதையெல்லாம் நினைச்சு பல்லைக் கடிச்சிகிட்டா ஆறு மாசம் நிமிஷமா ஓடிடாதா?"

அவள் முகவாயில் விரலைக் கொடுத்து கிரி முகத்தை நிமிர்த்தினான்.

"ஆறு மாசம்? நிமிஷமா ஓடிடும்? எங்க, என்னைப் பார்த்துச் சொல்லு... உனக்கு அப்படித்தான் இருக்குமா?"

அவள் பதில் கூறுமுன், "அம்மா..." என்று அழைத்தபடி ஜக்கு ஓடிவந்தான், முகம் முழுவதும் பயத்துடன்... தொடர்ந்து விசு, எக்கச்சக்க குறும்புடன்...

"அப்பா, இந்த விசுவப் பாருங்கப்பா... நா தூங்கினப்புறம் என்னை விட்டுட்டு நீங்க அவனை மட்டும் ஏரோபோர்ட்டுக்குக் கூட்டிட்டுப் போகப்போறீங்களாம்... சொல்றாம்பபா..."

கண்களில் நீர் கரைகட்டி நிற்க, பயத்துடன் விளைய மகனை கிரிதர் தூக்கிக்கொண்டான்.

"சசே, அப்படி அப்பா பண்ணுவேளா, ராஜா?"

சந்தேகத்தோடு அம்மாவை ஏறிட்டவன், "நிஜம்மாவாம்மா?" என்றான்.

துர்கா சிரித்துக்கொண்டே தலையாட்டினாள்.

"பின்னே, விசு சொல்றானோம்மா?"

"சுமமா! உன்னை சீண்டறான்! என்னடாது விசு, தம்பிய ஏன் வீணா பயமுறுத்தறே?"

"பின்னே? இவன் தூங்குமூஞ்சி ஆச்சே! மணி எட்டுகூட ஆகலை, தூக்கம் வருதுங்கறான்! அப்ப சரி,

தூங்குடா, உன்னை விட்டுட்டு நாங்கள்லாம் ஏர்போர்ட் போறோம்னு சொன்னேன்..."

மகா பெரியமனுஷத்தனத்துடன் விக பேச, கிரிதர் அவன் தலையில் செல்லமாகத் தட்டினான்.

சின்னப்பிள்ளையுடன் கிரிதர் கட்டிலில் உட்கார, தூக்கமும் மூத்தவனை அணைத்தபடி அருகில் அமர்ந்தாள்.

"அப்பா, நா கொடுத்த லிஸ்டை பத்திரமா வெச்சிருக்கீங்களா?"

"ம்."

"என்னதுப்பா?"

"அதுவும்தான்."

"கார் மறக்காதிங்கப்பா... கையிலே கண்ட்ரோல் வெச்சிகிட்டு பட்டனை அமுக்கினா, ரூம்...ம்..னு ஓடுமே... ஜிரோட அப்பா அவனுக்கு அமெரிக்காலேந்து வாங்கிட்டு வந்தாரே, அதே மாதிரி..."

"அய்..போயும் போயும் காரா வேணும் உனக்கு? எனக்கு ராக்கெட்... தோட்டத்துல செட் அப் பண்ணி 'ரெடி, தரீ, டு, ஒன், ஜீரோ'ன்னு சொல்லி ஸ்விட்சைப் போட்டா ஜூம்னு மேலே பறக்கும் தெரியுமா? நான்தான் ராகேஷ் ஷர்மாவாம். ஜம்முனு ராக்கெட் ஓட்டுவேனாம்..."

இரண்டு கைகளையும் அகல விரித்துக்கொண்டு, ஒரேயடியாய் விக அளக்க, ஜக்கு வாயைப் பிளந்தான்.

"மேலே பறக்குமா? நீ ராகேஷ் ஷர்மா மாதிரி ஓட்டுவியா?"

"மீன்ஸ்?"

ஜக்கு நிமிர்ந்து அப்பாவைப் பார்த்தான்.

"எனக்குக் கார் வேணாம்பா... விக மாதிரியே ராக்கெட்பா..."

"ஏய், நாந்தானே முதல்ல கேட்டேன்? ராக்கெட் எனக்குத்தான... அவனுக்குக் காரே வாங்கிட்டு வாங்கப்பா."

"இல்லப்பா... எனக்கு..."

சண்டை போட ஆரம்பித்த பிள்ளைகளை இறுக அணைத்து ஆளுக்கொரு முத்தம் கொடுத்த துர்கா, "ஓகே, தட்ஸ் இனஃப்! ரெண்டு பேருக்கும் எல்லாம் உண்டு! இப்ப வெளில ஓடுங்க... அப்பா புறப்படணும்... நாழியாச்சு..." என, இரண்டும், "இல்லே, எனக்குத்தான்... உனக்குக் கிடையாது..." என்றபடி வெளியில போனதும், கணவனை ஏறிட்டு மென்மையாய் சிரித்தாள்.

"இவங்களை விட்டுட்டு ஆறு மாசம் எப்படி இருக்கப் போறேன், துர்கா? 'மனசு இருந்தா கண்டிப்பா முடியும், நா இல்லியா'ன்னு தயவுபண்ணி உடனே சொல்லிடாதே. உன் நிலைமை வேற. உனக்கு அட்லீஸ்ட் பசங்களாவது இருக்காங்க... எனக்கு?"

கொஞ்சம் விளையாட்டாகவும் கொஞ்சம் நிதானமாகவும் கிரி பேசியதும் துர்கா மீண்டும் சிரித்தாள்.

"ஆரம்பிச்சிட்டீங்களா? இத்தனை கஷ்டமா இருக்கும்னு நினைச்சா முதல்லியே 'ஐயா சாமி, நமக்கெல்லாம் இந்த வெளிநாட்டு ட்ரிப் சரிப்பட்டு வராது. எனக்குப் பதவிஉயர்வு வேணாம், மண்ணாங்கட்டியும் வேணாம்! பொண்டாட்டி, குழந்தைங்கதான் வேணும்'னு பளிச்சின்னு எம்டி. கிட்ட சொல்லியிருக்கலாமே! பாவம்

ஸ்ரீனிவாசன். அவருக்காவது இந்த சான்ஸ் கிடைச்சிருக்கு. மில்லே? மனுஷன் கூடைப் பழமும் கையுமா எம்.டி. வீட்டுக்கு எத்தனை நடை நடந்திருப்பார்?"

கண்களைச் சிமிட்டிக்கொண்டு, தொய்ந்து உட்கார்ந்திருப்பவனை உசுப்பும் என்கிற எதிர்பார்ப்புடன் துர்கா பேசியதற்குப் பலன் இருக்கவே செய்தது.

பேசியவனை கிரிதர் பாய்ந்து தன் பக்கம் இழுத்தான்.

"இதென்ன புதுக்கதை! குழந்தையும் கிள்ளிட்டு, தொட்டிலையும் ஆட்டற கதையா? 'இங்லாண்டுக்குப் போற சந்தர்ப்பத்தை மிஸ் பண்ணாதீங்க... அதிருஷ்டம் வாழ்க்கையில ரெண்டு முறை வராதும்பாங்க... பல்லைக் கடிச்சிகிட்டுப் போயிட்டு வந்திட்டா, அப்பறம் ஆயுசுக்கும் நாம ஒஹோன்னு இருக்கலாம்'னு விடாம பிரெய்ன் வாஷ் பண்ணி, டிரையினிங்குக்கு ஒத்துக்கவெச்சதும் இல்லாம, சுழுதை... உன்னை..."

"சொன்னேன்தான்... ஆனா, பொண்டாட்டிய விட்டு ஆறு மாசம் போறதுக்கு இந்த அழுகை அழுவீங்கன்னு தெரிஞ்சிருந்தா கண்டிப்பா சொல்லியிருக்க மாட்டேம்பா!"

"ஆமா, நா பொண்டாட்டிதாசன்தான்... திருப்தி தானே?"

"மகா திருப்தி! இப்ப இளம்பறீங்களா? ஃப்ளைட்டுக்கு நாழியாச்சு..."

வேதனையும் பரிதவிப்பும், தொஞ்சலும் கெஞ்சலுமாக மாறியதில், நிறைய சிரித்து, கொஞ்சம் கலங்கி, அயர்ந்து நாடுசுகுச செல்ல அவனும், கணவனை அனுப்ப அவளும் தயாராகி வாசலுக்கு வரவும், துர்காவின் அப்பா

சுப்ரமணியம் டாக்ஸி ஒன்றில் வந்திறங்கவும் சரியாக இருந்தது.

"ரெடியா, மாப்பிள்ளை? பொட்டியெல்லாம் எடுத்து வண்டில வெச்சிடலாமா?"

"ம்ம்... அந்த பர்ஸ்ட் கேஸை மட்டும் என் கையில குடுத்துடுங்க... பாக்கியெலலாம் டிக்கியில வெச்சிடலாம்..."

பரபரவென்று ஆளுக்கு ஒன்றாய் எடுத்துவந்து டிக்கியிலும், மேல காரியரிலுமாக வைத்து முடிப்பதற்குள் விசுவும் ஜக்குவும் டாக்ஸியில் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள்.

"தாத்தா, நீங்களும் ஏர்போர்ட்டுக்கு வரீங்களா?"

"பின்னே? உங்கப்பா ஜம்முன்னு ப்ளேன்ல போறதை நா மட்டும் பார்க்கவேணாமா?"

பெருமிதத்தோடு பேரன்களிடம் சொன்னவர், கிரியின் பக்கம் திரும்பி, "கிளம்புங்க, மாப்பிள்ளை... சாமிய கும்பிட்டுக கிளம்புங்க..." என்றார்.

"மாமா, ஒரு நிமிஷம் உள்ள வரீங்களா?"

"என்ன விஷயம்? சரி, வரேன் இருங்க... பசங்களா, சாமான்களப் பாத்துக்கங்க..."

யோசனையோடு உள்ளே நடந்தவர் கூடத்தில் நழுழுத்ததும், சட்டென்று திரும்பிய கிரி அவர் கையைப் பிடித்துக்கொண்டான்.

"மாமா..."

"....."

"மாமா, நீங்களும் அத்தையும் இருக்கீங்கன்னு தெம்புலதான் நா துர்காவையும் குழந்தைங்களையும் விட்டுட்டுப் போறேன்... சரியா ஆறே மாசத்துல திரும்பி வந்துடுவேன்னாலும்..."

சுப்ரமணியம் மருமகனை ஆதரவாய் முதுகில் தட்டிக்கொடுத்தார்.

"தைரியமா போயிட்டுவாங்க... நாங்க இருக்கோம். இவங்க கண்கலங்காம பாத்துக்க வேண்டியது எங்க பொறுப்பு! நீங்க நிம்மதியா ட்ரைய்னிங் எடுத்திட்டு திரும்பிவாங்க..."

கிரிதர் தயக்கமாய் துர்காவைப் பார்க்க, அவர்களைத் தனிமையில் விட்டுவிட்டு சுப்ரமணியம் வாசலுக்கு விரைந்தார்.

"துர்கா..."

"ம்ம்..."

"வரட்டுமா?"

லேசாக சிரித்தவன், "நானுந்தானே ஏர்போர்ட்டுக்கு வரேன்?" என்றான்.

ஒரு கையால் அவன் தோளை அணைத்து, மற்றதினால் அவன் முகத்தைத் தன்பக்கமாகத் திருப்பி வாயில் மென்மையாக முத்தமிட்டவன், அவள் கையோடு தன் கையைப் பிணைத்துக்கொண்டே மெதுவாய் வாசலுக்கு வந்தான்.

"அடயா, அப்பா... நீங்க என் பக்கத்துலதான உக்காந்துப் பீங்க?"

"போடா... என் பக்கத்துலதான்!"

"அம்மா, நீங்க சொல்லுங்கம்மா... அப்பா யாருகிட்ட உக்காருவார்?"

மாற்றிமாற்றிப் பேசிய குழந்தைகளை விலக்கி, பின் சீட்டில் இருவருக்கும் நடுவில் கிரிதரும், குழந்தைகளுக்கு மறுபுறம் துர்காவும் அமர்ந்துகொள்ள, வீட்டைப் பூட்டிவிட்டு வந்த சுப்ரமணியம் முன்சீட்டில் உட்கார்ந்ததும் டாக்ஸி புறப்பட்டது.

சற்றுமுன் கணவனின் நெருக்கம் தந்த நெகிழ்வில் அமர்ந்திருந்தவளின் தோளை, நடுவிலிருந்த ஜக்குவையும் தாண்டி கிரியின் கை அழுத்தமாகப் பற்றிய நிமிஷத்தில், தன் அத்தனை தைரியங்களும் அறுறுப்போவதை உணர முடிய, அதைத் தடுக்கும் பாவனையுடன் துர்கா பார்வையை அவசரமாய் ஜன்னலுக்கு வெளியில் வீச முற்பட்டாள்.

(2)

"ப்ளேன் ஒருமணிநேரம் லேட்டாத்தான் புறப்படும் போல இருக்கு, துர்கா..."

"யாரு சொன்னாங்க?"

"அங்க கவுண்டர்ல பேசிக்கறாங்க..."

"அப்படின்னா அறிவிச்சிருப்பாங்களே?"

அவர்கள் சந்தேகப்பட்டுக்கொண்டிருக்கையிலேயே, பம்பாய் போகும் விமானம் தவிர்க்கவியலாத காரணங்களால் கிளம்பக் கூடுதலாக ஒருமணிநேரம் ஆகும் என்கிற அறிவிப்பு வந்தது.

கணவனோடு இருக்கும் நேரத்தில் ஒருமணி அதிகரித்திருப்பது லேசான சந்தோஷத்தைத் தர, துர்கா அருகேயிருந்த நாற்காலி ஒன்றில் சாயந்து உட்கார்ந்து கொண்டாள்.

ஏழு வருஷ இன்பமான தாம்பத்திய வாழ்க்கைக்குப் பிறகும், கணவனின் இந்தத் தாற்காலிகப் பிரிவு தன்னைக் கலங்கவைத்திருப்பதையும், எதிர்பாராமல் இடைத்திருக்கும் இந்த ஒருமணி தன்னை சந்தோஷப்படுத்தியிருப்பதையும் நினைத்து சிரிப்பு வந்தது.

ஏழு வருஷத்தில் எப்போதாவது, எதற்காவது பிரிந்திருக்கிறோமா?

இல்லை... அநேகமாய் ஒருநாள்கூட இல்லை என்றே சொல்லவேண்டும்.

பிறந்தகமும் இதே சென்னையாகவே அமைந்துபோய் விட்டதால், மூட்டை முடிசுகளைக் கட்டிக்கொண்டு கண்கலங்க, 'உடம்பைப் பார்த்துக்கங்க, தவறாம சனிக் கிழமை எண்ணெய் தேய்ச்சுக்கங்க' என்று பிரியாவிடை பெற்று தாய்வீட்டுக்குப் போகும் சந்தர்ப்பங்களும் இல்லை.

அப்படியே போன நாட்களிலும், வால் மாதிரி பின்னோடு கிரிதர்...

விசு பிறந்தபோது, தலைப்பிரசவம் என்று அம்மா வற்புறுத்தியும் கேட்காமல் பதினைந்தே நாட்களில் அம்மாவையும் கூட்டிக்கொண்டு தன் வீட்டுக்கே வந்தாயிற்று.

முதல் பிரசவத்துக்காவது பரவாயில்லை, பெரியவர் களுக்கு பயந்துகொண்டு பதினைந்து நாட்கள் பிரிந்திருந்தோம் என்று போய்பண்ணினார்கள்.

ஜக்கு பிறந்தபோது அதுகூட இல்லை.

பிறந்தகத்துக்குக் கூப்பிட்டுக்கூப்பிட்டு அலுத்துப் போன அம்மா, 'நீ கேக்கமாட்டியோ!' என்று சிரித்துக் கொண்டே சொல்லியவாறு தானே வந்துவிட்டாள் இங்கே.

— உள்ளூர்லயே இருக்கேன்னுதான பேரு- ஒரு நாலு நாள் வந்து பிறந்தவீட்டுல தங்கறியா? வெளியூர்ல கட்டிக் குடுத்திருந்தா எல்லார் வீட்டுப் பொண்ணுங்க மாதிரி வருஷம் தபாலாம் அம்மா வீட்டுக்குப் போறேன்னு ஒரு மாசம் வந்து தங்குவேயில்லே?

சிரிப்பும் அலுப்புமாய் அம்மா பேசுவதை வெட்கத்தோடு கேட்டுக்கொள்வாள்.

அப்படி ஒரு நாளைகூடப் பிரியாமல் இருந்ததுதான் தப்போ? அடிக்கடி விட்டுவிட்டுப் பிரிந்திருந்தால், இந்த சாதாரண ஆறுமாசப் பிரிவு இத்தனை கலக்கியிருக்காதோ?

பிரிவுகூட வேண்டாம்- ஒரு சின்னக் கோபம், தாபம்? மனஸ்தாபம், ஒன்றுமில்லை.

'உன்னோட பெரிய எழுவாப்போச்சு... எப்பத்தான் நீ ஒழியப்போறியோ! நீ ஒழிஞ்சாதான் வாழ்க்கைல எனக்கு நிம்மதி, சந்தோஷம் எல்லாம்! தரித்திரம்!' என்று பாத்திரம் உருளும் சத்தத்தோடு தினம் அடுத்தவீட்டிலிருந்து பேச்சு கேட்குமே!

அதுமாதிரி நாங்களும் சண்டை போட்டுக்கொண்டே இருந்திருந்தால், ஒருவேளை இந்தப் பிரிவு நிம்மதியாக இருந்திருக்குமோ?

இது எதுவும் இல்லாமல், சதா பேசுகிற, சிரிப்பும், கேலியும், கிண்டலுமாய்...

கல்யாணமான புதிதில் இருந்த அத்தனை சந்தோஷமும், ஏழு வருஷங்களுக்குப் பிறகும் சற்றும் குறையாமல், விசு ஜக்கு இருவரும் பிறந்து இவர்களோடு சேர்ந்துகொண்டதில் இன்னும் அதிகமாகிப்போய்...

ஆறு மாசம்... ஆறு மாசம்!

எப்படி இருக்கப்போகிறேன்!

"தூர்கா..."

"....."

"து..ர்...கா!"

"ம்ம்? என்ன, கிரி?"

இடுப்பில் கைகளைக் கட்டிக்கொண்டு நின்றிருந்த கிரிதர் தலையைச் சாயத்து சிரித்தான்.

"என்ன தூர்கா இது? எங்க ஞாபகம்? ம்ம்!"

"....."

"வீட்டுல எனக்கு அவ்வளவு தைரியம் சொல்லிட்டு இப்ப நீயே... கண்ணுல தண்ணி பாரு, துடைச்சிக்கோ கமான், சியர் அப்! பசங்களோட போய் ஒரு ரவுண்டு அடிச்சிட்டு வரலாம், வா..."

அவள் தோளைத் தட்டியெழுப்பி, கையைப் பற்றிக்கொண்டு இரண்டடி முன்னே நடந்தான்.

அவசரமாய் தன்னைத் தேற்றிக்கொண்டு அவன் பின்னே நடந்தவள், விசுவும் ஜக்குவும் அங்கிருந்த கடைகளைப் பார்த்துக்கொண்டு நின்றிருப்பதை உணர்ந்து கணவன் பக்கம் திரும்பினாள்.

"ஏன் கிரி, இங்க ஐஸ்க்ரீம், கியல்க்ரீம் ஏதாவது இப்ப கிடைக்குமா? பசங்களுக்கு வாங்கித்தரலாமே?"

கிரி அவளருகில் குனிந்தான். "ஐஸ்க்ரீம் கிடைக்கு மான்னு தெரியாது... கில்க்ரீம் தாராளமா கிடைக்கும்! இப்பவே, இங்கயே குடுத்துடட்டுமா, இல்லே ஒதுக்குப்புறமா போகலாமா? வசதி எப்படி?"

கணவனின் குறும்புப்பேச்சு ஒருவிதக் கிளர்ச்சியைத் தூண்டிவிட, தூர்கா அவன் கையை அழுந்தக் கிள்ளினாள். 'ச்சீ!' என்றாள். 'வருஷம் ஏழாகியும் பேச்சைப்பாரு!' என்று அவனுக்கு மட்டும் கேட்கும் விதமாய் முணுமுணுத்தாள்.

எல்லோருமாய் ரெஸ்ட்டாரென்டில் நுழைந்து நாற்காலிகளில் அமர்ந்தார்கள்.

"எனக்கு ஐஸ்க்ரீம்..."

"எனக்கும்..."

"உங்களுக்கு, மாமா?"

"ஐஸ்க்ரீமா? இந்த நேரத்துலயா!"

"ஒண்ணும் ஆகாது, மாமா... ஐஸ்க்ரீம் சாப்பிடறதுக் கெல்லாம் நேரங்காலம் பார்க்கக்கூடாது... கம்மா சாப்பிடுங்க..."

அவன் பேச்சில் நம்பிக்கையில்லாமல் சுப்ரமணியம் வேண்டாம் என்று தலையசைத்தார். "என்னமோ பயமாத் தான் இருக்கு... வேளைகெட்ட வேளைல இதெல்லாம் சாப்பிட்டா உடம்புக்கு ஒத்துக்குமோ என்னவோ! முன்ன மாதிரியா, ஜுரம் கிரம் வந்தாலும் பாயை விரிக்கவிட்டுப் படுத்துக்கிடக்க? இப்ப பெரிய பொறுப்பை இல்ல

என்கிட்ட ஒப்பவைச்சுட்டுப் போறீங்க? நா படுத்துக்கிட்டா அப்பறம் இவங்களை யாரு சமாளிச்சுக்கறது!"

மிகுந்த தீவிரமாய் அவர் பேசியதைக் கேட்டுச் சிரித்த கிரிஜா, விசுவும் ஜக்குவும் ஆளுக்கொரு பக்கமாய் இழுத்தார்கள்.

"ஏம்ப்பா, இங்லாண்ட்ல ஐஸ்க்ரீம் கிடைக்குமில்லே?"

"போடா, இவனுக்கு ஒண்ணுமே தெரியலை! அங்கல்லாம் இன்னும் பெரீ...ஸ்...ஸா திஸுகுதினுசா எவ்ளவு வெரைட்டி கிடைக்கும் தெரியுமா! இல்லேப்பா?"

கிரிதர் சிரித்தான். "தெரியாதுப்பா... நா இப்பத்தானே அங்க முதமுதல்ல போப்போறேன்? போனதும் ஐஸ்க்ரீம் சாப்பிட்டுட்டு எப்படியிருக்குன்னு லெட்டர் எழுதறேன், என்ன?"

ஜக்கு, "எப்பப்பா அங்க போய்ச்சேருவீங்க? கார்த்தாலயா?" என, விசு மறுபடியும் முகத்தைச் சுளித்துக் கொண்டான். "ஐயே, அசடு! கார்த்தாலயே எப்படிடா போகமுடியும்? முதல்ல பம்பாய்... அப்பறம் ஜம்போவுல ஏறிக்கிட்டு இங்லாண்ட்... ரெண்டு நாளாகும், இல்லேப்பா?"

டேண்டாட்டியைப் பார்த்தவாறு அமர்ந்திருந்த கிரிதர், ஏதோ ஞாபகத்துடன் "ம்..." என, ஜக்குவுக்கு அடுத்த சந்தேகம் வந்துவிட்டது.

"அப்பறம் எப்பப்பா திரும்பி வருவீங்க?"

"....."

"அப்...பா..."

"ம்?"

"திரும்பி எப்பப்பா வருவீங்க?"

"ஆறே மாசத்துல வந்துடுவேன், கண்ணா..."

"ஆறு மாசம்னா? எப்போ?"

"இது என்ன மாசம், சொல்லு?"

ஒரு நிமிஷம் யோசித்தவன், "ஆகஸ்ட்" என்றான்.

"ஆறு மாசம் கழிச்சு வருவேன்னா, எந்த மாசம்னு நீயே சொல்லு பார்ப்போம்!"

ஜக்கு விரல் விட்டு மாசங்களை அடுக்கத் தொடங்குவதற்குள், விசு முந்திக்கொண்டு, "ஃபிப்ரவரி" என்றான்.

"ஐயே, விசு தப்பாச் சொல்றான்! எனக்கு மார்ச்தானே வர்றது?"

"எங்கே, சத்தமா சொல்லு பார்க்கலாம்..."

"செப்டம்பர், அக்டோபர், டிசம்பர், ஜனவரி, ஃபிப்ரவரி, மார்..."

"ஸில்லி... மக்கு ஜக்கு! ஜக்கு மக்கு! அக்டோபருக்கு அப்பறம் நவம்பர் யாரு சொல்வாங்களாம்? தாத்தாவா?"

மறுபடியும் என்னிப்பார்த்த ஜக்கு, தப்பைப் புரிந்து கொண்டு, விசுவின் கேலி பொறுக்காமல் அழத் துவங்கினாள்.

"உஷ்... இங்கல்லாம் அழக்கூடாது, ராஜா... ஏய், விசு, தம்பிய அப்படியெல்லாம் சீண்டாதே! எங்க, என்னை நிமிர்ந்து பாருங்க... உங்கிட்ட இப்ப நா ஒரு முக்கியமான விஷயம் சொல்லப்போறேன்..."

கூலாவைத் துடைத்துக்கொண்டு ஜக்குவும் விசுவும், உடலை நிமிர்ந்து திவிரமானார்கள்.

"நா இப்ப ஊருக்குப் போயிட்டு, ஃபிப்ரவரி மாசம் வந்துடுவேனாம்... அதுவரைக்கும் ரெண்டு பேரும் சண்டை போடக்கூடாது! அம்மாவப் படுத்தக்கூடாது! ஸ்கூலுக்கு ஒழுங்கா போகணும்... சாப்பிட, படிக்கன்னு எதுக்கும் அம்மாவத் தொந்தரவு செய்யாம, நல்ல பசங்களா இருக்கணும்... என்ன, செய்வீங்களா?"

கோரஸாக இருவரும் "ம்ம்" என்று தலையாட்ட, கிரிதர் கண்ணைச் சிமிட்டிக்கொண்டு, "ப்ராமிஸா?" என, விசு கண்களை இடுக்கிக்கொண்டு கேட்டான், "நீங்க கண்டிப்பா ஆறு மாசத்துல வந்துடுவீங்களாப்பா?"

"கண்டிப்பா!"

"ப்ராமிஸா?"

"ப்ராமிஸா!"

"அப்ப நாங்களும் அம்மாவ ப்ராமிஸா படுத்தாம சமர்த்தா இருக்கோம்!"

பேசி முடிப்பதற்குள் வெட்கம் ஆளைப் பிடிக்க, அம்மா பின்னால் ஒளிந்துகொண்டவன், திடுமென ஏதோ நினைவுக்கு வர, தலையை மட்டும் ஓணான் போல நீட்டி வினவினான், "ஃபிப்ரவரில கண்டிப்பா வந்துடுவீங்களாப்பா?"

"அதான் ப்ராமிஸா வந்துடுவேன்னு சொல்றேனில்லே அப்பறமும் சந்தேகப்பட்டா?"

"இல்லேப்பா, எனக்கு ஏப்ரல்ல பர்த்டே வருதே அதுக்காகத்தான்..."

"உன் பர்த்டேக்கு நிச்சயமா இங்கதான் இருப்பேன்..."

அண்ணனுக்குப் போட்டியாக ஜக்குவும், "எனக்கு எப்பம்மா பர்த்டே வருது?" என, துர்கா, "டிசம்பர்..." என்றாள்.

"ஹ்ம்ம், சீஸன... இவ பர்த்டே இவனுக்கே தெரிய மேமாளா..." என்று ஆரம்பித்த விசு, உடனே நாக்கைக் கடித்துக்கொண்டான். பிறகு, "ஸாரிப்பா, இனிமே கேலி பண்ணமாட்டேன்..." என்றான்.

தன் பிறந்தநாளுக்கு அப்பா இங்கே இருக்கமாட்டார் என்பது புரிய, ஜக்கு லேசாக விசும்ப முற்பட்டான்.

"என் பர்த்டேக்கு மட்டும்... அப்பா..."

"இங்க இல்லாட்டி என்ன, ஜக்கு? நா அங்கேயிருந்து உனக்குப் போஸ்ட்ல பொம்மையெல்லாம் அனுப்பறேன், பாரு... கிரீட்டிங் கார்டு போடறேன்..."

"நிஜம்மா?"

"நிஜம்மா!"

சந்தேகமாய் அம்மாவை நிமிர்ந்து பார்த்தவன், "நிஜம்மா போடுவாராம்மா?" என, துர்கா புன்னகையோடு லேசாய் அவன் கன்னத்தில் தட்டி, "போடுவாருப்பா..." என்றாள்.

"இவன் ஒருத்தன், எதுக்கெடுத்தாலும் அம்மா ஒரு வாட்டி சொல்லணும்... அப்பத்தான் நம்புவான்! இதுக்குக் கூட... இரு இரு, மைக்ல என்னவோ சொல்றாங்களே!"

பிளேன் கிளம்பும் சரியான நேரத்தை அறிவிப்பு சொல்ல, எல்லோருமாய் கிளம்பி செக்யூரிடி செக்—அப்பு நுழைவாசல் அருகில் போனார்கள்.

முதலில் மாமனாரிடம், "வரேன் மாமா..." என்று சொல்லிவிட்டு கிரிதர் மனைவியின் பக்கம் திரும்பினான்.

கெஞ்சலாய், "வரேன், துர்கா..." என்றவன், தயக்கமாய் அவளை நேருக்கு நேர் பார்த்தான்.

சற்றே கலங்கின மாதிரி இருந்த அந்தக் கண்களை விட்டு சட்டென்று பார்வையை அகற்றி, கீழே குனிந்தாள்.

"விசுவுக்கு ஒண்ணு, ஜக்குவுக்கு ஒண்ணு..." என்று சொல்லிக்கொண்டே ஆளுக்கொரு முத்தம் கொடுத்தவள், மாமனார் அருகில் நிற்பதை லட்சியம் செய்யாமல் நிமிர்ந்து, "துர்காவுக்கும் ஒண்ணு!" என்று அவள் கன்னத்திலும் ஒன்று கொடுத்து, அவள் கையைப் பிடித்து அழுத்திவிட்டு சடக்கென்று உள்பக்கம் திரும்பி, மற்ற பயணிகளோடு சேர்ந்துகொண்டான்.

பின்னர், "அங்க பாருடா, ஜக்கு... போன வாரம் டி.வியில ஒரு படம் காட்டினாங்களே? அதுல நடிச்ச நடிகை போறாங்க, பாரு..." என்ற விசுவையும், அவன் காட்டிய திசையில் பார்த்த ஜக்குவையும் அழைத்துக் கொண்டு, "வாங்கப்பா, அங்க போய் தள்ளி நின்னுக்கலாம்..." என்று குரல் கொடுத்துவிட்டு நகர்ந்தான் துர்கா.

குழந்தைகளை இரண்டு பக்கமும் பிடித்துக்கொண்ட சுப்ரமணியம், மகளின் வேதனை புரிந்த திணுசில் அவள் பின் நடந்தார்.

எத்தனை முயன்றும் அடக்கமாட்டாமல் எழுந்த துக்கத்தில் தொண்டை வலி கண்டு, கண்களில் பட்ர்ந்த நீர் இமைகளிலில் முத்தாயத் திரண்டதில், சில மிநிஷங்களில் வெயிர் விளக்குகள் மினுக்கப் புறப்பட்ட அந்த பாபாய் விமானத்தைத் தெளிவாகப் பார்க்கக்கூட

முடியாமல் துர்காவின் பார்வை மசமசத்துத்தால் போயிற்று.

(3)

அந்த வெள்ளிக்கிழமை மாலை அலுவலகம் முடிந்து, பஸ் பிடித்து வீடு வந்த துர்கா, ஹால் சோபாவில் உட்கார்ந்து அடையாளோடு பேசிக்கொண்டிருந்த ராமையாவைப் பார்த்து எப்போதும்போலப் புன்னகைத்தான்.

சுப்ரமணியத்துடன் ஒன்றாக வேலைபார்த்தவர் ராமையா.

ஓய்வுபெற்று நான்கு வருஷங்கள் ஆனபிறகும்கூட, பொழுது போகாத நேரங்களில் இவரைத் தேடிவந்து, "அப்பறம் என்னாச்சு அந்த செக்ஷன் விவகாரம்?" என்று எதையாவது அலசிக்கொண்டிருப்பார்.

இப்படி இவர் வருவது வாரத்திற்குக் குறைந்தது இரண்டு மூன்று முறையாவது நிகழும் சமாசாரமாக இருந்ததில், அன்றைக்கும் அவரை சாதாரணமாகப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு உள்ளே போக முயன்றவன், "வா, துர்கா... அப்பாகிட்ட விவரமா சொல்லியிருக்கேன், கேட்டுக்கம்மா..." என்று அவர் சொன்னதும் நின்றாள்.

சின்னக் கேலிக்குறியோடு தன்னை ஏறிட்ட வளை, லேசான சிரிப்புடன் சுப்ரமணியம் வரவேற்றார்.

"ஒண்ணுமில்லே, துர்கா... நீ உள்ள போய் காபி சாப்பிடு... அம்மா சொல்வாங்க எலவாம்..." என்றவர், உள்நோக்கி, "அகிலா..." என்று குரல் கொடுத்தார்.

ஒன்றும்புரியாத குழப்பத்தோடு நகரத் தொடங்கிய வளுக்கு, உள்ளேயிருந்து வந்த அகிலாவின் முகத்தைப் பார்த்ததுமே புரிந்துபோயிற்று.

என்னுடைய திருமண விஷயத்தில் சுபமான ஆரம்பம் ஏதாவது தென்பட்டிருக்கவேண்டும்...

அதுதான் அம்மாவின் முகத்திலும் இத்தனை சிரிப்பு.

சில மாசங்களாகவே அகிலாவும் சுப்ரமணியமும் பேப்பரில் வரும் விளம்பரங்களைப் பார்ப்பதும், தெரிந்தவர் களிடம் சொல்வதும், ஜோஸ்யர் வீட்டுக்கு நடை யாய் நடப்பதுமாய் இருப்பது துர்காவுக்குத் தெரிந்தேயிருந்தது.

போன வருஷம் இவள் பிளஸ்ஸியை முடித்த கையோடு இந்த ஏற்பாடுகளைச் செய்யத் துவங்கினவர்களை இவள்தான் தடுத்துவைத்திருந்தாள்.

— இப்பத்தானேப்பா படிப்பு முடிஞ்சிருக்கு? அட்லீஸ்ட் ஒரு வருஷமாவது வேலை பார்க்கறேனே...

— எதுக்கும்மா வேலையெல்லாம்? நீ சம்பாதிச்சுதான் உனக்குக் கல்யாணம் பண்ணணுமா? இப்பவே வரன் பார்க்கத் துவங்கினாத்தான், ஒரு வருஷத்திலயாவது முடியும்...

— அப்பா, ப்ளீஸ்ப்பா... இப்ப துவங்கறதை அடுத்த வருஷம் செய்யுங்களேன்... ஒரே ஒரு வருஷம் என் ஆசைக்காக, ப்ளீஸ்...

அன்றைக்கு அப்பாவிடம் சம்மதம் பெற்று, ஒரு கெமிக்கல் கம்பெனியில் இளார்க்காக வேலைக்குச் சேர்ந்து, போன ஏப்ரலில் ஒரு வருஷம் முடிந்துவிட, காத்திருந்தது போதும் என்று அப்பா தன் பொறுப்பைக் கவனிக்க ஆரம்பித்துவிட்டார்.

தங்களின் ஒரே பெண்ணுக்கு நல்ல இடமாக அமைய வேணுமே என்ற தவிப்பில் அப்பாவும் அம்மாவுமாய் செய்யும் முயற்சிகளைப்பற்றி ஏறகனவே அறிந்திருந்தால் தான், இன்றைக்கு அம்மாவின் சந்தோஷத்தைப் பார்த்ததும் அது தன் திருமண விஷயமாகத்தான இருக்கவேண்டும் என்கிற உணர்ச்சத்துக்கு துர்காவால் வரமுடிந்தது.

முகம் கழுவக்கூட மறந்தவளாய், அம்மா கொடுத்த காபியை வாங்கிக் குடித்தவள், குரலில் குறும்பு தொனிக்க, "என்னம்மா, எந்தப் பையனை மாட்டிவைக்கப்போறீங்க?" என்றாள்.

அகிலா ஆச்சர்யமாய் பார்த்தார்.

"பையனா? அதப்பத்திதான் ராமையா மாமா சொல்றார்னு உனக்கு எப்படித் தெரியும்?"

"தெரியாம என்ன? ஒரு மாசத்துக்கப்பறம் உங்க முகத்துல வந்திருக்கற சிரிப்புதான் எல்லாத்தையும் சொல்லுதே!"

லேசான வெட்கத்தோடு அகிலா ஆரம்பித்தார்.

"நாங்க பார்த்ததுல எதுவுமே சரியாயில்லே, துர்கா... ராமையா மாமா போனவாரம் இங்க வந்திருந்தப்போ உன ஜாதகத்தை வாங்கிட்டுப் போயிருந்தார். பொருத்தம் சரியாயிருக்குன்னு ஒரு வரனைப்பத்தி இப்பத்தான் அப்பாகிட்ட பேசிமுடிச்சார்..."

"....."

"பையன் யாருன்னு சொன்னா உனக்கு வேடிக்கையா இருக்கும்..."

"யாராம்?"

"அடுத்த தெருவுலயே இருக்கறவராம்... நாம கோவிலுக்குப் போறப்பகூட அந்த வீட்டை நிறைய தரம் பார்த்திருக்கோம்... இங்க வர்றப்பல்லாம் மனோரஞ்சிதப்பூ வாசனை ஜம்முனு அடிக்குதும்மா'னு நீகூட சொல்லியே நினைவிருக்கா துர்கா?"

"ம்ம்..."

"அந்த வீட்டுப் பையன்தானாம். ராமையா மாமாவுக்கு தூரத்துச் சொந்தமாம். அவர் சொல்ற விவரமெல்லாம் பார்த்தா ரொம்ப நல்ல எடமாத்தான் தெரியுது..."

"——————"

"என்ஜினியரிங் படிச்சிட்டு நல்ல கம்பெனில வேலையா இருக்காராம்... அப்பா இல்லே, அம்மாவும் அண்ணனும்தான். அண்ணன்கூடக் குடும்பத்தோட அமெரிக்காவுல செட்டில் ஆயிட்டதாலும், இங்க சொந்த வீட்டுல ஒரு போர்ஷனை வாடகைக்கு விட்டுட்டு இன்னொண்ணுல இன்னப்புள்ளை மட்டும் தங்கிக்கிட்டு இருக்கார்ளும், அம்மா கிராமத்தோட நிலத்தப் பார்த்துகிட்டு..."

அவளை முடிக்குமுன் உள்ளே வந்த கப்ரமணியம், "அம்மா எல்லாம் சொன்னாங்களா, துர்கா? எங்களுக்குப் பிடிச்சிருக்கு... உனக்கு? ராமையா கிட்ட சொல்லி அவங்களைப் பெண்பார்க்க வரச்சொல்லவா? இப்ப வீட்டுக்குப் போறப்பவே ராமையா சொல்லிட்டுப்

போயிடுவான்... என்ன?" என, துர்கா ஒரு நிமிஷமும் யோசிக்காமல் உடனே சரி என்றாள்.

இனிமையாகவும், அன்பாகவும், அமைதியாகவும் தாம்பத்தியம் நடத்தி, தன்னை இயல்பாய் வளர்த்து, எந்தவிதமான குறையோ அல்லது குதர்க்க எண்ணமோ இல்லாமல் வாழ்க்கையை அனுபவித்துக்கொண்டிருக்கிற இவர்கள் நிதானமாக யோசித்துச் செய்யும் எதிலும் தவறே இருக்கமுடியாது என்பதாலும்,

தன் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து, படிப்பு வேலை என்ற எதிலும் தன் விருப்பத்துக்கு இணங்கி, இன்னும் தன் அனுமதி கேட்டு நிற்பவர்களை மேலும் தாமதப்படுத்துவது தவறு என்பதாலும்தான் துர்கா உடனே தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்.

அவள் சரி என்று தலையாட்டின விநாடியிலிருந்தே அவளது கல்யாண யோகம் ஆரம்பமாகியிருக்கவேண்டும்...

பின்னே, போன சுருக்கில் ராமையா திரும்பிவந்து, "அவுங்க இப்பவே வர்றேங்கறாங்க... இன்னிக்கு வெள்ளிக் கிழமை நல்லநாள்தானே?" என்றதும்,

பெண்பார்த்தலுக்கான எந்த ஏற்பாடும் செயப்பட வில்லையே என்று இவர்கள் கலையப் பிரசந்து கொண்டிருந்த நேரத்திலேயே கிரிதரன் துர்காவைப் பார்த்து விட்டுப் போனதும் எப்படி அத்தனை சீக்கிரத்தில் நிகழ்ந்திருக்க முடியும்?

"என்ன அவசரம், ராமையா? ரெண்டு நாளாவது கிடைச்சா ஏதாவது பண்ணலாமில்லே?" என்று கப்ர மணியம் கேட்டதும், "நானும் சொல்லிப்பார்த்துட்டேம்மா...

வார ஞாயித்துக்கிழமை விடிகாலைல புறப்பட்டு அந்தம்மா கிராமத்துக்குப் போயிடுவாங்களாம்... திரும்பவும் ஒருதரம் வரணும்னா ரொம்பாயிருக்குமாம். நாளைக்கு வெச்சிக்க ரம்னா, சனிக்கிழமை — முடியாது. அதால இன்னிக்கே பார்த்துடலாம்னு சொன்னாங்க. இருட்டினப்பறம் எதுவும் சாப்பிட மாட்டாங்களாம்... அதனால அவங்களுக்கு வெறும் பாலும், பையனுக்குக் காபியும் மட்டும் குடுத்தாப் போதும், வேற பலகாரமெல்லாம் வேணாங்கறாங்க... நீங்க துர்காவை ரெடியா இருக்கச் சொல்லுங்க, நா போய் அவங்களைக் கூட்டிட்டு வந்துடறேன்..." என்று ராமையர் அவசரமாய் சொல்லிவிட்டுப் போன பிறகு, வேறு ஒன்றும் பேசாமல் வாயை மூடிக்கொண்டார்.

சொஜ்ஜி, பஜ்ஜி, இத்யாதிகள், புரோக்கர், உறவு மனிதர்கள், மாப்பிள்ளை வீட்டாருக்கு டாக்ஸி செலவு — என்று எதுவுமே இலலாமல், இரவு எட்டு மணி சுமாருக்கு கிரிதரும் அவன் தாயும் நடந்தே வந்து இவளைப் பார்த்ததும், துர்கா பரபரத்துத்தான்போனாள்.

வந்தவர்களை வரவேற்று சுப்ரமணியமும் அகிலாவும் பேசிக்கொண்டிருக்கையிலேயே, உள்ளறைக்குள் வெகு சுவாதீனமாய் நுழைந்து, சின்ன சரமாக நூலால் கோர்த்திருந்த மல்லோரஞ்சிதப் பூக்களை இவள் கையில் கொடுத்து, லேசான புன்னகையோடு, "பூவைத் தலையில வெச்சிகிட்டு நீயும் கூடத்துக்கு வாம்மா..." என்று கிரிதரின் தாய் செல்லம்மா சொன்னபோது, அந்தப் பரபரப்பு இன்னமும் கூடிப்போயிற்று.

கூடத்தில் வந்து நின்றவளிடம் ராமையர் கிரிதரை அறிமுகப்படுத்தினார்.

சற்றே தலையைத் தூக்கி அவனை நிமிர்ந்து பார்த்த வளுக்குள், அவனை இதற்கு முன்பே இரண்டு மூன்று முறை தெருவில், இங்கே அங்கே என்று சந்தித்திருக்கிற நினைவு வர, மனசு கொஞ்சம் நிம்மதியானாற்போல் இருந்தது.

கிரிதர் எளிமையாய், மிக எளிமையாய் இருந்தான்.

அனாவசியமான அலங்காரமோ, வெளளையடித்த பாதிரியான பவுடரோ, மூகலைச் சுளிக்கவைக்கும் சென்ட் வாசனையோ, ஆர்ப்பாட்டமான பேசசோ இல்லாமல் அமைதியாக அமர்ந்திருந்தான்.

சம்பிரதாயமான வார்த்தைகளும், கெக்கேபிக்கே பேச்சுக்களும் இலலாமலிருந்ததில், பெண்பார்க்கிற உணர்வு சற்றும் தோன்றாமல், வழக்கமாய் வரும் விருந்தாளிகளோடு சகஜமாக இருப்பதாகவே துர்கா உணர்ந்தாள்.

கிரிதரனின் முகத்தில் குடிபோட்ட சந்தோஷமே அவன் மனசைக் காட்டிக்கொடுக்க, செல்லம்மா மெல்ல பேச்சை ஆரம்பித்தார்.

"எங்களுக்கு துர்காவப் பிடிச்சிருக்கு... உங்களுக்கும பிடிச்சிருந்தா மேக்கொண்டு இப்பவே பேசி முடிச்சிடலாம்..."

சந்தோஷத்தில் பேச்சு வராமல் சுபரமணியம் வெறுமே தலையாட்டினார்.

"எங்க குடும்பத்தப் பத்தியெல்லாம் ராமையர் சொல்லியிருப்பார்னு நினைக்கறேன்..."

"ம்ம்... சொன்னார்..."

ராமையா குறுக்கிட்டு, "எல்லாம் விவரமா சொல்லி விட்டேம்மா... நீங்க மத்த விஷயங்களப்பத்திப் பேசுங்க" என,

செல்லம்மா நம்பிக்கையில்லாதவராக மறுபடி, "என் மூத்த மகனப்பத்தி சொல்லிட்டீங்களா?" என்றபோது சுப்ரமணியம் சந்தேகத்தோடு புருவங்களை உயர்த்தினார்.

என்னவாக இருக்கும்? அந்த அம்மாள் ஏதோ சொல்லவருவதை ராமையா தடுக்கிறாரா?

அவசரம்அவசரமாக, "சொல்லிட்டேம்மா... உங்க மூத்த மகன் குடும்பத்தோட அமெரிக்காவுல செட்டில் ஆயிட்டதா அப்பவே சொல்லிட்டேனே..." என்ற ராமையாவை அலட்சியம் செய்து அவரே தொடர்ந்தார்.

"ராமையா சொன்னது இருக்கட்டும்... எதுக்கும் நானே ஒருதரம் முழுசும் சொல்லிட்டா, பின்னால நீங்க வருத்தப்பட வேணாம்..."

"....."

"என் மூத்த மகன் மேல்படிப்புக்காக அமெரிக்காவுக்குப் போனப்ப, அங்கயே ஒரு பெண்ணைக் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டான்..."

"....."

"இது நடந்து பத்து வருஷம் போல இப்ப ஆயிடுச்சுன்னாலும், உண்மைய மறைக்காம சொல்லிடறது நல்லதில்லையா? எங்களக் கேக்காம அவன் கல்யாணம் பண்ணிக்கிட்டது முதல்ல வருத்தமாதான் இருந்தது... இவங்கப்பா இறந்தப்பகூட அவனுக்குத் தகவல் சொல்லாமத்தான் கோவமா இருந்தோம்... ஆனா, எல்லாம்

முடிஞ்சு இத்தன வருஷம் ஆயிட்டப்பறம், எங்கயோ சந்தோஷமா இருந்தா சரின்னு மனச தேத்திக்கிட்டோம்..."

"....."

"கிரிக்கு வான் பார்க்க ஆரம்பிச்சப்ப, இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டு ரெண்டு மூணு இடத்துல பொண் குடுக்கவே தயங்கினாங்க... ஜாதி, குலமாது எதுவுமே இல்லாம வெள்ளைக்காரியக் கட்டிக்கிட்டவனுக்கு வீட்டு சம்பந்தம் வேணாம்'னு ஒதுக்கிட்டதை உங்ககிட்ட நா மறைக்க விரும்பலே... உங்களுக்கு அந்த மாதிரி சம்பிரதாய மெல்லாம் பார்க்கணுமுன்னா, நாங்க சந்தோஷமா விலகிக்கறோம். பொய் சொல்லிட்டுக் கூடப்பட்டதைவிட, உண்மையை ஒத்துக்கிட்டு பேச்சை ஆரம்பிக்கறது நல்லதுன்னு எனக்குப் படுது..."

என்னவோ ஏதோ என்று பயந்துபோயிருந்த சுப்ரமணியம், விஷயம் இவ்வளவுதானா என்கிற நிம்மதியான பெருமூச்சோடு சம்பந்தியை ஏறிட்டார்.

"சாதாரணமா குலம், கோத்திரம் பார்த்துதான் பொண்ணைக் குடுக்கணும்னு நாங்க நினைச்சிருந்தாலும், அண்ணன் பண்ணிட்ட காரியத்துக்காக தம்பிய நிச்சயமா ஒதுக்கிட மாட்டோம்... வெள்ளைக்காரியா இருந்தா என்னம்மா? அவனும் பெண்தானே? இனிக்கு அவங்க சந்தோஷமா குடும்பம் நடத்தறாங்களா... நமக்கு அதானே வேணும்?"

நயக்கம் நிறைந்த நீங்கினவராக நிமிர்ந்த நிதரின் தாய், சுப்ரமணியத்தை நம்பாததுபோல் பார்க்க, அவர் மென்மையாகச் சிரித்தார்.

"உங்க சம்பந்தம் கிடைக்கிறதை நாங்க எங்க பாக்கியமாவே நினைக்கறோம். காலம் மாறிட்டு நிலைமை புரிஞ்சுக்கிட்டு விஷயத்தை ஒரு பெரிய சுத்தமா எடுத்துக்காதது நல்லதுலே எனக்குத் தோணுது... என் பொண்ணை உங்க மகனுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தபிறகும் உங்க வீட்டுல இப்படி ஒரு விஷயம் நடந்துருக்கு, அப்ப நா என்னால செய்ய முடியும்? இனிமே என் பொண்ணை அங்க வாழ விட மாட்டேன்னு பிறந்த வீட்டுக்கு அழைச்சிட்டு வந்து முடியுமா? சொல்லுங்க..."

மேற்கொண்டு அவர்கள் பேசியது எதுவுமே மனதில் பதியாமல் தூர்கா மலைத்துப்போய் உட்கார்ந்திருந்தாள்.

சாதாரண விஷயத்தைக்கூட பொய் சற்றும் சலிக்காமல் மிகத்தெளிவாகப் பேசிவிட்டு, "நா வர்றேன்... கல்யாணத்துக்குத் தேதி குறிச்சிட்டு எனக்குக் கடுதாசி போடுங்க. வேற ஏதாவது சேக்காளுமனா கிராதால் இங்கதானே இருக்கான் அவனாண்ட சேதி சொல்லுங்க..." என்று சுப்ரமணியத்திடமும் அதிலாவிடமும் சொல்லிவிட்டு, "நாங்க வர்றோம், தூர்கா கிராதரப் பாத்துக்க!" எனறு குறும்பாக இவளிடமும் விடை பெற்றுக்கொண்டு சபபந்தி போன நாழிகையில் தூர்காவுக்கு கிராதரை விட அதிகமாக மாமியாரைப் பார்த்துப்போவதில் ஆசாபாசமென்ன!

(4)

"ஹலோ..."

தான் வீடு தள்ளி இருந்த தூரல் பெய்யிலும் ஒரு சாலையைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு நடந்த தூர்கா திடுக்கிட்டு நின்றாள். எதிரில் கிராதர் நின்றிருந்தான்.

"அ? ஹலோ..."

மேலே என்ன பேசுவது என்று புரியாமல் சிறிது நேரம் மௌனமாக இருந்தபின், தூர்காதான் முதலில் ஆரம்பித்தாள் "தூரலுக்குப் போகலியா?"

"நம்ம போய்கிட்டே இருக்கேன்... வழியில உங்களைப் பார்த்தேன், அதான்..."

இரண்டு வார்த்தை பேசுவதற்குள் ஆயிரம் தரம் சுற்றுமுற்றும் அவன் பார்ப்பதைக் கண்டதும் தூர்காவுக்கு சிரிக்கத் தோன்றியது அடக்கிக்கொண்டாள்.

பயமா?

என்ன பயம்? என்ன தயக்கம்?

ரொம்பவும் கூச்ச சுபாவம் போலிருக்கிறது...

பார்க்கப்போனால் தானாகவே வெட்கப்பட வேண்டும்?

என்னதான் கல்யாணம் நிச்சயமாகிவிட்டது என்றாலும் இன்னும் கிட்டத்தட்ட இரண்டு வாரத்துக்குள் இன்னொரு கட்டும் தாலி தன் கழுத்தில் ஏறிவிடும் என்றாலும்...

அன்று பெண்பார்க்க வந்ததற்குப் பிறகு இந்த நான்கு நாட்களில் இன்றுதானே சந்திக்க நேர்ந்திருக்கிறது... ஒருவேளை அதனால்தான் கூச்சப்படுகிறாரோ?

பெரியவர்கள் பார்த்து எல்லாவற்றையும் முடிவுசெய்து, 'உனக்கு இவனதான்' என்று தீர்மானமாக முத்திரை குத்திவிட்ட பிறகும் இப்படித் தெருவில் எதேச்சையாய் நிகழ்ந்த சந்திப்பினால் பரபரத்துப்போயிருப்பவனை மேலும் தர்மசங்கடத்துக்கு உள்ளாக்கவேண்டாம் என்ற

நினைப்போடு, "நா வரேன்..." என்று சொல்லிக்கொண்டு புறப்பட்ட துர்காவிடம் கிரிதர் தயக்கமாய், "ஒருநிமிஷம் வந்து... நீங்க..." என்று ஆரம்பிக்க, நின்றாள்.

"என் பேர் துர்கா..."

"ஸாரி, துர்கா..."

"_____"

"ஒரு விஷயம் கேக்கலாமா?"

என்ன என்பது போல நெற்றியைச் சுருக்கினாள் துர்கா.

"இன்னிக்கு சாயந்தரமா என்கூடக் கொஞ்சம் வெளில வருவீங்களா?"

"_____"

"ப்ளீஸ், எனக்குக் கொஞ்சம் பேசணும்... நா வந்து உங்க வீட்டுல கேக்கட்டுமா?"

"மம்..."

"என்னைத் தப்பா நினைச்சிடுவாங்களா?"

"அ... அதெல்லாம் இல்லே... நீங்களே அப்பாகிட்ட பேசிக்கங்க... நா வரேன்..."

முதல் முறையாய் அலனோடு பேசியதில் ஏற்பட்டதை விட, 'என்னோடு வெளியே வருகிறாயா?' என்று அவனாகவே கேட்டதில் அதிக பரவசத்துக்குள்ளானாள் துர்கா.

ஓட்டமும் நடையுமாய் வீட்டுக்கு வந்து பெற்றவர்களிடம் விஷயத்தைச் சொல்லி, ஆர்வமாய் அவர்கள்

முகத்தைப் பார்த்தவளுக்கு, அப்பாவின் முகத்தில் தென்பட்ட புன்சிரிப்பு இன்னும் கொஞ்சம் தெம்பைக் கொடுத்தது.

"இவ்வளவுதானேம்மா? போயிட்டுத்தான் வாயேன்... இந்தக் காலத்துல ஒருத்தரோட ஒருத்தர் பேசிப் பழகிட்டு, அதுக்குப் பிறகுதான் கல்யாணத்தைப் பத்தியே யோசிக்கறாங்க! உங்களுக்குத்தான் நிச்சயதார்த்தமே ஆயிடிச்சே, ஒண்ணு ரெண்டு தரம் சாதாரணமா வெளிய போயிட்டு வர்றதுல தப்பே இல்லே..."

"_____"

"ஆனா, துர்கா நீ படிச்சவ... உனக்கு நா அதிகமா சொல்லவேணாம்... நாகரிகமா நடந்துக்கங்க, அவ்வளவு தான்..."

ஆர்ப்பாட்டமில்லாமல் பச்சைக்கொடி காட்டியவர், மாலை நான்கு மணி சுமாருக்கு கிரிதர் வந்ததும், ஒன்றுமே தெரியாதவர் போல அவளை வரவேற்று, காபி டிபன் இத்யாதிகளுக்குப் பிறகு வெகு சகஜமாக, "துர்கா, மாப்பிள்ளையோட கொஞ்சம் வெளிய வேணா போயிட்டு வாயேம்மா..." என்று தானே ஆரம்பித்து, "ரொம்ப இருட்டறதுக்குள்ள வந்துடுங்க..." என்று அனுப்பியும் வைத்தார்.

வாழ்க்கையிலேயே முதல் தடவையாய ஒரு ஆணுடன் சரிசமமாக நடந்துபோவதில் துர்கா சற்றே சங்கடமாகத் தான் உணர்ந்தாள்.

"துர்கா, இப்படியே பீச் வரைக்கும் நடந்தே போகலாமா?" என்று கிரிதர் கேட்க, தாம் தலையாட்டி அவ

சமயத்தைத் தெரிவித்தவள் மெதுவாக நடக்கத் துவங்கினாள்.

வெயில் இன்னும் மறையவில்லை.

கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு வெகு நிதானமாக கிரிதர் நடந்துகொண்டிருந்தான். இடை யிடையே ஓரிரு முறை இவள் பக்கம் திரும்பி லேசாய் புன்னகைத்தவன், உடனே தலையைக் குனிந்துகொண்டான்.

ஓரடி இடைவெளி விட்டுத் தள்ளியே நடந்து வந்தவர்கள், காந்தி சிலை அருகேயிருந்த புல்வெளியிலேயே உட்கார்ந்துகொண்டார்கள்.

வெயில் மறைவதற்கு முன்பே வந்து, பலூன் — பந்து — விளையாட்டுச் சாமான்களோடு விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளையும், கண்டக்டர்களையும் ஜன்க்ரீம்காரர்களையும் வேடிக்கைபார்த்துவிட்டு, திடுமென நினைத்துக்கொண்ட மாதிரி கிரிதர் பேசினான்— "உங்கப்பா உங்களை..."

"உன்னை..."

"உ... உன்னை என்னோட அனுப்பமாட்டேன்னு சொல்லிடுவாரோன்னு பயந்துகிட்டு இருந்தேன்..."

"....."

"நா கேக்கறதுக்கு முன்னாடியே அவராவே போயிட்டு வாங்கனேன்னு சொன்னது ரொம்ப ஆச்சர்யமா இருந்தது."

"....."

கைக்குட்டையால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டு அவன் மறுபடி பேசியபோது குரல் இகுகிகப்பா வெளிப்பட்டது.

"நா... எனக்குப் பெண்கள் கிட்டப் பேசி..."

"....."

"வீட்டுல அக்கா தங்கைன்னுகூட யாரும் பெண்கள் இல்ல. ததால... அவனவனா பழக்கமிலலே... ஆபீஸ்லேயும் டைபிஸ்டான ஆபரேட்டரைத் தவிர மத்த எல்லாரும் ஆம்பிளைங்கதான்... அந்தமாவும் வயசானவங்க..."

"....."

"நீயும் என்னைப் போலதானே, துக்கா? அண்ணன் தம்பின்னு யாருமே இல்லியா?"

"ம்..."

"அப்ப, நாம்ப ரெண்டு பேருமே ஒரே மாதிரிதான்... ஒதைதப்பிள்ளையா, கூடப் பேசிச்சிரிக்க விளையாடக்கூட யாருமே இல்லாம..."

"ஏன், உங்களுக்குத்தான் அண்ணல் இருந்தாரே?"

"இருந்தார்தான்... ஆனா, எனக்கும் அவருக்கும் பத்து வயசு வித்தியாசம். நா சின்னவனா இருந்தப்பவே அவர மேல்படிப்புக்காக அமெரிக்கா போயிட்டார். அம்மா சொல்லியிருக்காங்க, அவர் ரொம்ப புத்திசாலியாம்... எப்பவும் படிச்சகிட்டே இருப்பாராம். என்னோட அதிகமா பேசினதாக்கூட எனக்கு நினைப்பில்லே."

"கல்யாணம் ஆனதுக்கப்பறம் இந்தியாவுக்கு அவர் வரவேயில்லியா?"

"ம்ஹூம்... அம்மாவும் அப்பாவும் ரொம்பக் கோவப் பட்டாங்கன்னு அவர் அங்கயே தங்கிட்டார். ரொம்ப வருஷம் அம்மா லெட்டர்கூடப் போடாம இருந்து.

இப்பத்தான மனச மாறி ரெண்டு வருஷமா அவர் லெட்டருக்கு பதில எழுதுன்னு என்கிட்ட சொல்லி யிருக்காங்க. அதுகூட, தானா எழுத மாட்டாங்க. இப்பல்லாம் ரொம்ப மாறிட்டாங்கன்னாலும், தனிமோட பூஜை, கோவில் எல்லாம் குறைச்சிக்கவே இல்லே..."

"கிராமத்துலதான் எப்பவும் இருப்பாங்களா?"

"ம். நம்ப கல்யாணத்துக்கு அப்பறமும் அங்கயேதான் தங்கப்போறதா சொல்லிட்டுப் போயிருக்காங்க... அப்பா கடைசிக் காலத்துல இருந்த வீடுன்னு ரொம்ப சுத்தமா வெச்சிகிட்டு, அதை விட்டுட்டு எங்கயும் வரமாட்டாங்க."

"....."

"இந்த மெட்ராஸ் வீட்டுல இத்தனை வருஷமா நா மட்டும்தான் இருக்கேன். இப்ப... இப்பதான் நீ வரப்போறே."

"....."

"தனியா இருக்கறது ரொம்பக் கஷ்டம், துர்கா... சினிமா டிராமான்னு எத்தனைதான் வெளிய சுத்தினாலும், வீட்டுக்கு வரப்பவே அலுப்பும் வந்துடும்! நமக்குன்னு யாருதான் இருக்காங்க இந்த வீட்டுலனனு சலிச்சுகிட்டே தான் தினமும் வருவேன்... இனிமே நீ... நீதான எனக்கு..."

உணர்ச்சிகளின் வேகத்தில் வார்த்தைகள் குழறலாக வெளிவர, அவன் தொடர்ந்து தனது தனிமை பற்றியும், உணர்வுகளையும் ரசனைகளையும் பகிர்ந்துகொள்ள யாருமே இல்லாமலிருந்த வாழ்க்கை பற்றியும் பேசி, துர்காவின் வரவு தன் வாழ்க்கைக்கு நிச்சயமாய் சுவாரஸ்யத்தைத் தரும் என்றதும் துர்கா நெகிழ்ந்து போனான்.

தனியே வெளியே போகலாமா என்று கேட்டு சினிமாவுக்கோ, மற்ற தனிமையான இடங்களுக்கோ அழைத்துசெல்வானோ — முதலில் சாதாரணமாகப் பேசி பின் மெதுவாகக் கையைப பிடிப்பதில் ஆரம்பித்து முத்தமிடுவதில் முடிபபானோ — என்று பயந்துகொண்டே வந்தவளுக்கு, தன் அருகிலகூட அமராமல் இரண்டடி தள்ளி அமர்ந்துகொண்டு, தபபிததவறி தன விரலகூட இவள மீது படடுவிடாமல் ரொமு ஜாக்கிரதையாக, மரியாதையாக அவன் பேசிய விதம் ரொமபப் பிடித்திருந்தது.

இருட்ட ஆரமபித்து சிறிது நேரத்திற்குளளாகவே கிளம்பி, மறுபடி நடந்தே வீட்டில் இவனை விட்டுவிட்டுத திரும்பியவளைப் பற்றின உயரந்த எண்ணத்தை சுபர மணியத்திடமும் அலலாவிடமும சொனன துர்கா, அவர்களின் சம்மதத்தோடு அடுத்துவநத நாட்களிலும் கிரிதரோடு வெளியில செலல ஆரம்பிததாள.

நல்ல நான் பார்த்து புடவை, நகைகளை வாங்கச் செல்லும்போதும், கலயாணதுக்கு வேண்டிய மற்ற ஏறபாடுகளைக் கவனிக்கும்போதும் கிரிதர் அவர்களோடு சென்று எல்லாவற்றிலும் கலந்துகொண்டு, அந்த ஜூன் ஆறாம் தேதி துர்காவின் கழுத்தில மூனறு முடிசசுகளைப் போடுவதற்குள்ளாக அந்தக குடும்பத்தில் ஒருவனாகிப் போனான.

ஆனால், கூச்சம் மறைந்து இவர்களில் ஒருவனாகிப் போனவன், திருமணமான பின் முதலிரவில், அப்பொழுது தான் புதுசாகப் பேசப்போகிற தினுசில சகஜமாகப் பேசமுடியாமல் தயங்கினது துர்காவுக்கு ஆசசரியத்தையே தந்தது.

தயங்கித்தயங்கி பேசி, மின் மெதுவாக பதிலொரு மணிக்கு அவள் கை வளையல்களை முன்னும் பின்னும் தள்ளிவிடத் துவங்கியவன், ஒருநிலுசாய் தன்னை தைரியப படுத்திக்கொண்டு மேலும் ஒருமணிநேரம் சென்ற பிறகே அவளை முதல் முதலாக மென்மையாக முத்தமிட்டான்.

இப்படி அதீத கூச்சத்தோடு பழக ஆரம்பித்தாலும், அவர்களது முதல் திருமண ஆண்டு நிறைவுக்குள் விக் கைப்பிள்ளையாய் மடியில் தவழ்ந்தபோது, அடையாளமே புரியாதபடி கேலியும் முரட்டுத்தனமுமாய் கிரிதர் மாறிப் போனதும் நிஜம். அந்த நம்பமுடியாத மாற்றம் எப்படி நிகழ்ந்தது என்று புள்ளிகுத்தத் தெரியாமல் இன்றைக்கும் துர்கா ஆச்சர்யித்துப்போவதும் நிஜம்!

(5)

"வேலையெல்லாம் ஆச்சா இல்லியா? எத்தனை நேரம், துர்கா..."

"இதோ ஆச்சு, கிரி... ரெண்டு நிமிஷம்..."

"சரிதான் போ... ரெண்டு நிமிஷம், ரெண்டு நிமிஷம்னு சொல்லியே அரைமணிநேரமா காக்க வெக்கறியே..."

"ஐயோ கிரி, யாராவது கேட்டா சிரிக்கப்போறாங்க மணி எட்டரைகூட ஆகலை, அதுக்குள்ள படுக்கக் கூப்பிட்டா எப்படி!"

"சிரிக்கட்டும், ஐ டோன்ட் பாதர்! நா ஒருத்தன் இங்க போராடிசகிட்டு உக்காந்திருக்கறது பார்க்கறவங்களுக்குப் புரியுமா?"

"போராடிக்குதா... ஏன்?"

"ஏனா? நீ பாட்டுக்கு சாவகாசமா அடுப்பை அலம்பித் துடைச்சிட்டு இரு, நா கொட்டுக்கொட்டுனு வேலையில்லாம... ஏன் துர்கா, இந்த அடுப்பையெல்லாம் வாரத்துக்கு ஒருதரம் சுத்தம் பண்ணினா போதாதா? இதுக்கு ஒரு அரை மணி.."

"தினம் சுத்தம் பண்ணினாதானே பளிச்சின்னு இருக்கும்! பணத்தைக் கொட்டி சாமான வாங்கறது பெரிசில்லே... அதை அழகா வெச்சிக்க வேணாமா? உங்களுக்கு போராடிச்சா ஹால்ல விக படுத்திட்டிருக்காளே, அவனுக்கு விளையாட்டு காட்டிகிட்டு இருங்களேன்.."

"எல்லாம் விளையாடியாச்சு. அவன் அப்பவே தூங்கிப் போயிட்டான்! இருபத்து நாலு மணிநேரத்துல இருபத்தி மூணு மணிநேரம் தூங்கறான்... அவனோட என்ன விளையாடறது? சரியான தூங்குமூஞ்சி!"

"என்ன கிரி இது... ரெண்டு மாசக் குழந்தை தூங்காம என்ன பண்ணும்? எழுந்து நின்னு, உங்களோட டென்னிஸா விளையாடும்? அசடு!"

"ஆமாம்மா, நா அசடுதான்... நீங்கதான் ரொம்ப சமத்தாச்சே, சீக்கிரமா வேலைய முடிச்சிட்டு வாது! ஏதுடா புருஷன்காரன் போராடிச்சுட்டு உக்காந்திருக்கானே, சுருக்க போய் ரெண்டு வார்த்தை பேசலாம், படுப் போம்னு தோணாது... என்னைக் கேவி பண்ண வந்துட்டாங்க!"

"அப்பப்பா... முணுமுணுக்கறதைப் பாரு! எனக்கு ஒரே சந்தேகம், கிரி..."

"என்ன!"

"நீங்க போன ஜன்மத்துல தவளையா பொறந்து திருப்பீங்களோ?"

"ஏன்?"

"இல்லே, எப்பப்பாரு சளக்கு...புளக்குன்னு ஏதாவது முணுமுணுத்துகிட்டே இருக்கிங்களே..."

"....."

"சரே, கோச்சுக்கிட்டீங்களா? ஸாரி... சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன்! வாங்க, நிஜமாவே இப்ப எல்லா வேலையும் முடிச்சாச்சு... கூடத்துக்குப் போகலாமா?"

"நா வரலை..."

"ஏன்?"

"இங்க யாரும் தவளைகூட எல்லாம் பேச வேணாம் படுக்க வேணாம்..."

"கடவுளே!"

"இப்ப எதுக்கு அவரைப்போய் தொந்தரவு பண்றே? பாவம், அவராவது பெண்டாட்டிகூட..."

"போதும் கிரி, ப்ளீஸ்... வாங்களேன்..."

"நா வரவைன்னா, வரலை! அவ்வளவுதான்!"

"ஐயோ, தெரியாத்தனமா ஒரு குழந்தையப் போய் எனக்குக் கல்யாணம் பண்ணிவெச்சிட்டாங்களே இப்படி"

"முதல்ல தவளை, இப்ப குழந்தையா? யாரு குழந்தைன்னு பார்த்துடலாம், வா..."

"ஐயோ, கிரி... விடுங்க... எறக்கி விட்டுடுங்க... அம்மா, இப்படியா 'பொத்துள்ளு' கீழ போடுவாங்க? முறடு... சரியாள முறடு!"

"அப்படித்தான போடுவேன்... குழந்தைன்னு சொன்னே இலலே? சரி, இன்னிக்கு பீடா கீடா ஒன்னும் கிடையாதா? அம்மா லிப்ஸ்டிக் போட்டுக்கறதா இல்லையா?"

"லிப்ஸ்டிகா? இந்த ராத்திரி நேரத்துலயா?"

"ம்ம்... இப்பத்தான் போட்டுக்கணும்! ரெண்டு வெத்தலை எடுத்து, சுண்ணாம்பு தடவி..."

"அட, வெத்தலை போட்டுக்கறதையா அப்படிச் சொலறீங்க! இனனிக்கு அதெல்லாம் ஒன்னும் கிடையாது..."

"கிடையாதா? ஏன்? 'பிள்ளை பெத்தவங்க நிறைய வெத்தலை போட்டுக்கணும், உடம்புக்கு நல்லதுன்னு உங்கம்மா அன்னிக்கு சொனனாங்களே, மறந்திட்டியா?"

"மறக்கலை... ஆனா, இனிமே நிறுத்திடப்போறேன்..."

"என்ன துர்கா, காரணத்தைச் சொல்லாம..."

"காரணமா? தினம் வெத்தலை போட்டு வாய் செவப்பா இருந்தா, உங்களுக்கு குஷி ரொம்பவுமதான் அதிகமாயிடுது..."

"ப்ச்... இதான பெரிய விஷயமா! குஷி அதிகமானா நா உன்னை என்ன பண்றேன்? நாம்பாட்டுக்கு உன பக்கத்துல சமத்தாதானே படுத்துக்கறேன்?'

"ம்ம்? அந்தப் பழக்கம்தான் வேணாம்னு அம்மா சொல்றாங்க..."

"அம்மாவா? அட ராமா, அவங்ககிட்ட நீ போய் என்ன சொன்னே? புதுசுபுதுசா சட்டமெல்லாம் போடாதுக்கு?"

"நா ஒண்ணுமே சொல்லவேணாம்... அவங்கதான் இனம் இங்க வந்து பார்க்கறாங்களே, கிரி! இன்னிக்குக்கூட கேவியா சொல்லிட்டுப் போறாங்க 'இதுக்குதான் பிரசவம் முடிஞ்ச ஆறு மாசம் பொறந்த வீட்டுலயே இருக்கணும்னு சொல்றது- இந்தக் காலத்துல நீங்கள்ளாம் எங்க பெரியவங்க சொல்றதக் கேக்கறீங்கள்ளு..."

"ஏன்? என்ன கேக்காமப் போயிட்டமாம்? உன்னை நா நல்லா பார்த்துக்கலையா, ரெஸ்ட்ல இருக்கச் சொல்லலையா, இல்லே குழந்தையத்தான் கொஞ்சலையா? எனக்கு குடிமுழுகிப்போச்சாம்? முன்னையவிட இப்ப நல்ல தனதளன்னுதானே இருக்கே?"

"அதான் தப்பாம்.. 'பின்னை பெத்தவங்க இப்ப நல்லா சாப்பிட்டு, உடம்பைக் கவனிச்சிக்கிட்டு, பார்க்க ரொம்ப அழகா இருப்பாங்க இப்பவே புருஷன் வீட்டுல கொண்டு போய் விட்டுட்டா ஆபத்துதான்'ளு சொல்றாங்க..."

"எனக்க ஆபத்து? இப்பதான் புருஷன் கூட இருக்கணும். வாடி வதங்கி கொத்தவரங்காய் சைஸ்ல இருக்கறப்போவா புருஷன் வீட்டுக்கு அனுப்புவாங்க? உங்கம்மாவுக்கு ஒண்ணுமே தெரியலை, துர்கா! என்ன பெரிய ஆபத்து வந்துடும் இப்ப?"

"சொல்லட்டுமா?"

"சொல்லேன்..."

"மம? இனனொரு பிள்ளை வந்துடும்..."

"ப்பூ அவ்வளவுதானே? என்னமோன்னு நினைச்சேன்! வரட்டுமே, நிறைய குழந்தைங்க இருந்தாத்தான வீடு கலகலன்னு இருக்கும்!"

"நிறையனனா?"

"என்ன, ஒரு ஏழெட்டு இருக்கடுமே!"

"அம்மாடி! வீடு தாங்குமா?"

"தாங்காம என்ன? என்னை மாதிரி ஒத்தையா வளர்ந்தாதான பிள்ளைங்க அருமை தெரியும்! ஏன் துர்கா, நீயும் என்னனப் போலத்தானே? உனக்கு மட்டும் நிறைய குழந்தைங்கன்னா பிடிக்காதா?"

"பிடிக்கும்தான்.. ஆனா..."

"என்ன ஆனா? செலவு நிறைய ஆகும்னு கவலைப்பட்டியா? கடவுள் புண்ணியத்துல அதுக்கெல்லாம் பணமில்லே.. நமக்கு என்ன குறைச்சல்? சொந்த வீடு இருக்கு... இது நமக்குத்தான்னு நிச்சயமாயிடுச்சு! அமெரிக்காவுலேருந்து அண்ணன் வந்து பங்கு கேக்கப் போறாரா என்ன? சாப்பாட்டுக்கு அம்மா ராமத்து லேருந்து அரிசி அனுப்பிடறாங்க அங்கயிங்க போயி டுலை ஒரு ஸ்கூட்டர் இருக்கு... எனக்கும் நல்ல சம்பளம்.. போறாததுக்கு நீ வேற இன்னும் வேலைய விடாம வெச்சிருக்கே..."

"பட்டியல் போட்டது போதும், கிரி. நமக்கு எதாவது இல்லைன்னு நா சொன்னேனா?"

"பின்னே? ஏழெட்டு என்ன, பத்து பதினைஞ்சுகூடப் பெத்துக்கலாம்!"

"பெத்துக்கலாம்தான்... ஆனா..."

"பார், மறுபடி என்ன ஆனா? சீக்கிரமா சொல்லு..."

"சொன்னா சிரிக்க மாட்டீங்களே?"

"சிரிக்கறதா? எதுக்கு?"

"அடுத்த குழந்தை இப்பவே உண்டாயிட்டா, மசக்கை, முதல் குழந்தைய சரியா கவனிக்க முடியல்லே, உடம்பு சோர்வா இருக்குன்னு ஏதாவது சொல்லிட்டு நா அம்மா வீட்டுக்குப் போயிடுவேன... அப்பறம் பிரசவ சமயத்துல ஒரு ரெண்டு மாசம் மறுபடி அங்கயே டேரா..."

"போயேன்... போனா என்... இருஇரு, என்ன சொன்னே? அங்கயே போய்த் தங்கிடறதா? அடப்பாவி என் கதி என்ன ஆறது?"

"என்ன ஆகும்? நீங்க நல்லபிள்ளையா இங்கயே இருந்து வீட்டைக் கவனிச்சுக்கங்க..."

"இங்கே? தனியா?"

"ம்ம்..."

"ஐயோ, நம்மால முடியாதுப்பா! இந்த தரம் பதினைஞ்சு நாள் தனியா இருக்கறதுக்குள்ளயே வாழ்க்கையே வெறுத்துப்போச்சு! மறுபடி தனியாவா? என்ன, விளையாடறியா துர்கா?"

"நிஜம்மாதான் சொல்றேன், கிரி... பிரசவம்னா தனியா இருந்துதானே ஆகணும்? நீங்களும் என்கூட ஆஸ்பத்திரி சுவரையே இருப்பீங்களா?"

"வாஸ்தவம்தான்... என்னால உன்னைப் பிரிஞ்சு இருக்கவும் முடியாது! நீயும் இல்லாம, குழந்தையும் இல்லாம... கடவுளே! நினைச்சுப் பார்க்கவே பிடிக்கலை எனக்கு! வேணாம் துர்கா, அடுத்த குழந்தை நாலைஞ்சு வருஷம் கழிச்சே வரட்டும்... இப்ப என்ன அவசரம்?"

"ஐயே, அசடு! ஏன் கிரி, தனியா இருக்க இத்தனை பயப்படறீங்க! நா ஒருவேள செத்துப்போயிட்டா?"

"ஸ்டாப் இட்! இப்ப என்ன பேச்சு இது! ச்சே!"

"போச்சுடா! சும்மா ஒரு இதுக்குக் கேட்டா, சீரியஸ்ஸா எடுத்துக்கறீங்களே! பிராக்டிகலா யோசிச்சுப் பாருங்க... நா போயிட்டா நீங்க என்ன செய்வீங்க?"

"ம்ம்? ஜம்முனு பாயசம் வெச்சு சாப்பிடுவேன்!"

"அப்பறம்?"

"உன் தலை! தொணதொணன்னு வேண்டாததப் பேசாதே!"

"தொணதொணன்னு? வேண்டாததை? யாரு, நானா?"

"பின்னே, நானா?"

"ஆஹா... நாந்தான்! நாந்தான் உங்களை வேலை செய்ய விடாம இழுத்துக்கிட்டு வந்து, இப்படிப் பேசிக் கிட்டிருக்கேன்... நாந்தான் பத்துக் குழந்தை வேணும்னு சொன்னேன்... நாந்தான்..."

"ஹேய், நிறுத்து... அடுக்கிக்கிட்டே போகாதே! நானே தான் இதெல்லாம் செஞ்சேன்... இப்ப நானேதான் தொணதொணன்னு பேசறேன்... போதுமா?"

"கோவத்தைப் பாரு! மூஞ்சிய உம்முனு வெச்சுக்கிட்டு சின்னக் குழந்தையாட்டம்! வேடிக்கையா இருக்கு, கிரி.

உங்களைப் பார்க்க! ஆமா, அன்னிக்கு முதமுதல்ல நாம சந்திச்சமே, அது ஞாபகம் இருக்கா?"

"எது? பொண்ணுபார்க்க வந்தேனே, அதுவா?"

"ம்ஹூம்... அதுக்கப்பறம். நாங்கூட போஸ்ட் பண்ணிட்டு இருந்தேன். நீங்க ஆபீஸுக்குப் போயிட்டிருந்தீங்களே?"

"ம்ம்... அதுக்கென்ன?"

"ஒண்ணுமில்லே... இப்ப இவ்வளவு பேசறீங்களே, அன்னிக்கு என்கிட்ட ஒரு ஹலோ சொல்லிட்டு என்ன முழி முழிச்சீங்க! வெறும பேசக்கூட அத்தனை பயமா?"

"அ... நீ சலியா சொல்லிட்டே... என்னை மாதிரி வளர்ந்திருந்தா இல்லே தெரியும்? நா எது பண்ணினாலும் தப்பும்பாங்க அம்மா..."

"ச்சே, அத்தைய அப்படியெல்லாம் சொல்லாதீங்க... பாவம், ரொம்ப நலலவங்க! மாமியார் மாதிரியா என்கிட்ட நடந்துக்கறாங்க? நேர வர்றப்பவும் சரி, லெட்டர்லயும் சரி, எத்தனை அன்பா நடந்துக்கறாங்க... பக்கம்பக்கமா விசாரிக்கறாங்க! மாசம் தப்பாம ஊர்லேருந்து அரிசி, பருப்பு, பலகாரம்னு மூட்டை கட்டி அனுப்பி... ஏ, அப்பா! எத்தன ஆசையா இருக்காங்க! நீங்க வீணா அவங்களக் குத்தம் சொல்றீங்களே, கிரி..."

"தப்பா ஒண்ணும் சொல்லலை, துர்கா... அம்மா நல்லவங்கதான். ஆனா, கண்டிப்பு ஜாஸ்தி. அதுவும் அண்ணன் அந்த மாதிரி செஞ்சிட்டப்பறம், நானாவது ஒழுங்கா இருக்கணும்னு காலேஜ் நாள்ல எக்கச்சக்க டைரக்டா இருந்திருக்காங்க, தெரியுமா? ஒரு புள்ளதவ

படிச்சா தப்பு, லீப்ரெண்ட்ஸ் கூட விளையாடப் போனா தப்பு, பாட்டு கேட்டா தப்பு! சும்மா படிபடின்னு சொல்லிச்சொல்லியே, இப்ப எனக்கு வேற எதைப்பத்தியும் தெரியாமயே போயிடுச்சு!"

"அப்ப முடியாட்டி என்ன, கிரி! இப்ப அந்த மாதிரி பழக்கங்களை வளர்த்துக்கங்களேன்! யார் தடுக்கறாங்க? நல்ல பத்திரிகைங்க நிறைய வாங்குங்க, ஸ்போர்ட்ஸ் ஐட்டம் எதுலயாவது மெம்பராகி விளையாடுங்க! டேப ரெகார்டர் இருக்கு நம்மகிட்ட... நல்ல காஸட்டா வாங்கிப் போட்டுக் கேக்கப் பழகிக்கங்களேன்!"

"போ துர்கா... இத்தனை வயசுக்கு மேல அந்தப் பழக்கமெல்லாம் வராது! இனிமே பழகிக்கறதும் கஷ்டம்! பழகிக்கிட்டுத்தான் என்ன செய்யப்போறேன்! இப்ப என்ன பொழுது போகாமயா கஷ்டப்படறேன்? அதான் நீயும் வீகவும் இருக்கீங்களே!"

"அதுக்கில்லே... இந்த மாதிரி நல்ல பழக்கங்களை வெச்சுகிட்டா, தனியா இருக்கறதப்பத்தி கவலைப்பட வேணாமே! இது எதுவுமே இல்லாமப்போனாத்தான், எங்களை விட்டு ஒரு நிமிஷம் பிரியறதுகூட கஷ்டமாப் போயிடும்..."

"பிரிஞ்சாத்தானே?"

"நீங்க என்ன குழந்தையா, கிரி? மனுஷனுக்கன்னா எப்பவாவது எதுக்காவது பிரிஞ்சுதானே ஆகணும்! வேற ஒண்ணும் வேணாம், ஒரு ஆபீஸ் டூர்... இல்லே..."

"ஒரு மண்ணாங்கட்டியும் இடையாது! நாம எப்பவும் பிரியப்போறதே இல்லே... நீ இப்ப பேசாம இருக்கியா! ப்ளீஸ்..."

"திரும்பவும் கோச்சுக்கறீங்களே, கிரி..."

"சரி, பேசினது போதும். தூங்கற நேரத்துல எதுக்கு இத்தப் பேச்செல்லாம்? விளக்கை அணைச்சுடவா?"

"ம்ம். எங்க படுக்கப்போறீங்க? விக பக்கத்துலதானே?"

"நானா? விக பக்கத்துலயா? அதுக்கு வேற ஆளைப் பாரும்மா..."

பேசியபடியே அருகில் நின்றவனை அணைத்து கிரிதர் படுக்கையில் சாய, பொங்கிக்கொண்டு எழுந்த தூர்காவின் சந்தோஷமான சிரிப்பு, விளக்கை அணைத்த பிறகும் ரொம்ப நேரத்துக்கு அந்த அறையை அழகாக வியாபித்திருந்தது.

(6)

தூர்கா ஆட்டோவிலிருந்து இறங்கி, மீட்டர் பணத்தைக் கொடுத்து முடிப்பதற்குள், விசுவும் ஜக்குவும் அவளைச் சூழ்ந்துகொண்டார்கள்.

"அப்பா எங்கேம்மா? நீ மட்டும் தனியா வரியே?"

"அப்பாவுக்குக் கொஞ்சம் வேலையிருக்காம்.. ஒருமணி நேரத்துல வந்துடுவார். நீங்க போய் விளையாடுங்க."

குழந்தைகளின் சப்தம் கேட்டு உள்ளேயிருந்து வந்த அனோ வியப்புடன் புருவங்களை உயர்த்தினார்.

"என்ன தூர்கா, மாப்பிள்ளை வரலியா? அவருக்கும் சனிக்கிழமை அரைநாள்தானே?"

"யூஸ். அரைநாள்தாம்மா... ஆனா இன்னிக்கு என்னமோ மீட்டிங் இருக்கறதா போன் பண்ணிச் சொன்னார்."

"அப்போ உங்க சினிமாப் ப்ரோக்ராம் என்னாச்சு?"

"அது நிச்சயம் உண்டு. ஒருமணி நேரத்துல வந்துடுவேன், நீ முள்ளாவ போய் குழந்தைகளைத் தயார் பண்ணுனு சொன்னார். விசுவையும் ஜக்குவையும் நா அழைச்சிட்டுப் போகட்டுமா?"

"மம். அவங்களுக்கு டிபன்கூடக் குடுத்துட்டேன். நீ வந்து டிரெஸ் பண்ணவேண்டியதுதான் பாக்கி. ஏதாவது சாப்பிட்டியா இப்ப?"

"வேண்டாம்மா.. அவரும் வந்துடட்டும். நா அங்கயே சாப்பிட்டுக்கறேன்."

அம்மாலிடம் சொல்லிக்கொண்டு வாசலுக்கு வந்தவள், அடுத்தவீட்டுப் பையன்களோடு விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகளை அழைத்துக்கொண்டு நடக்கத் துவங்கினாள்.

இன்று ஒரு ஆங்கிலப்படத்துக்குப் போவதாக இரண்டு நாட்களுக்கு முன்பே தீர்மானம் பண்ணியாகிவிட்டது.

ஒவ்வொரு சனிக்கிழமையும், கிரி, தூர்கா இரண்டு பேருக்குமே அலுவலகம் அரைநாள்தான் என்பதாலும், குழந்தைகளோடு வெளியில் செல்ல அந்த ஒருநாள் பகல்பொழுதுதான் வசதியாக இருக்கிறது என்பதாலும் — சனிக்கிழமை தவறாமல் சினிமா, பார்க் என்று செல்வது வழக்கமாகியிருந்தது.

மதியம் வரை தாத்தா பாட்டியுடன் இருத்திவிட்டு, இவர்கள் ஆபீஸிலிருந்து வந்ததும் எல்லோருமாய் கிளம்பிப் போவார்கள்.

இன்றும், வீட்டுக்குப் போனதும் குழந்தைகளைக் கிளப்பிவிட்டுத் தயாராக இருந்தால், கிரி வந்ததும் சாப்பிட்டுவிட்டுக் கிளம்ப சரியாக இருக்கும்.

படம் மூன்று மணிக்கு ஆரம்பித்துவிடும் என்பது நினைவுக்கு வர, துர்கா மணிக்கட்டைத் திருப்பி கடிகாரத்தைப் பார்த்தாள்... ஒன்றரை.

அவசரம்அவசரமாகப் பூட்டைத் திறந்து உள்ளே நுழைந்தவள், கைப்பையை மேஜைமேல் வைத்துவிட்டுக் குளியலறைக்குச் சென்று குழந்தைகளுக்குக் கை, கால், முகம் துடைத்துவிட்டுத் தானும் முகத்தைக் கழுவிக்கொண்டாள்.

"அம்மா..."

"என்ன ஐக்கு?"

"இன்னிக்கு சினிமாக்குப் போறோமா?"

"ம்."

"பின்னே, அப்பா இன்னும் வரலியே? லேட்டாப் போனா சினிமா ஆரம்பிச்சிடாதா?"

"இல்லேப்பா... அதுக்குள்ள அப்பா வந்துடுவார். நீங்க டிரெஸ் பண்ணிக்கிட்டுத் தயாரா இருங்க. வெளிய மண்ணுக்குப் போயிடாதீங்க. அப்பறம் டிரெஸ்லெல்லாம் அழுக்காயிடும்..."

குழந்தைகள் வாசலுக்குச் சென்றபின், புடவையைத் தூக்கிச் செருகிக்கொண்டு சமையலறைக்குள் நுழைந்தாள்.

காலையில் செய்துவைத்திருந்தவற்றை எடுத்து, அடுப்பை மூட்டி சூடு பண்ணி, டேபிளில் கொண்டு வைத்தாள். தயாராய் தட்டுகளையும் வைத்துவிட்டு, வாசலுக்குச் சென்று கிரி வருகிறானா என்று ஒருமுறை நெருங்கோடி வரை பார்வையை நீட்டினாள்.

இல்லை, ஸ்கூட்டர் எதுவும் கண்ணில் படவில்லை.

அவன் வருவதற்குள் தானும் தயாராகிவிடலாம் என்ற நினைப்புடன் உள்ளே வந்து, உடை மாற்றி, கூடத்தில் வந்தமர்ந்தாள்.

காலையில் வந்திருந்த பேப்பரைப் பிரித்துவைத்துப் படிக்க ஆரம்பிக்கையில், கிரியின் ஸ்கூட்டர் சப்தம் கேட்டது.

அப்பா, அப்பா என்று பின்னாலேயே ஓடிவந்த குழந்தைகளை லட்சியம் பண்ணாமல், பெட்டியை சோபாவில் விசிறிவிட்டு சோர்வாய் சாய்ந்து உட்கார்ந்த வனை துர்கா ஆச்சர்யமாய் ஏறிட்டாள். குழந்தைகளை மறுபடி வாசலுக்கு அனுப்பிவிட்டு அவனருகில் வந்து அமர்ந்தவள், மெதுவாய், "என்ன கிரி, உடம்பு இருக்கா?" என்றாள்.

"....."

"சரி வாங்க, சாப்பிட்டுக்கிட்டே பேசலாம். பசியோட இருப்பீங்க..."

"எனக்கு சாப்பாடு வேணாம்... நீ போய் சாப்பிடு."

"ஏன் கிரி, பசிக்கலையா? காலைல மூணு இட்லி சாப்பிட்டதுதானே? இல்லே, மீட்டிங்ல ஏதாவது சாப்பிட்டீங்களா என்ன?"

"சும்மா தொணதொணக்காத, துர்கா... வேணாமளா விடேன்..."

அவன் கோபத்துக்குக் காரணம் புரியாமல் விழித்தாள். "சரி, சாப்பாடு வேணாம்... போய் டிரெஸ்ஸாவது மாத்திக்கிட்டு வாங்களேன்... சினிமாவுக்கு நேரமாச்சில்ல?"

"சினிமாவா? இனிமேக்கு ஒரு எழவும் வேணாம்!"

"வேணாமா? டிக்கெட்கூட ஏற்கனவே ரிசர்வ் பண்ணிட்டமே... வேஸ்டாயிடாதா?"

"தொலையட்டும்!"

"என்ன கிரி, என்னாச்சு உங்களுக்கு? உடம்பு கிடம்பு சரியில்லையா என்ன?" என்றவள், கரிசனத்தோடு அவன் நெற்றியில் கை வைத்துப்பார்த்தாள்.

சூடு ஏதுமில்லை.

என்ன விஷயம்?

"தலை வலிக்கறதா, கிரி?"

"துர்கா... கொஞ்ச நேரம் சும்மா இருக்கமாட்டியா?" அதட்டலாய் வந்த குரல் அவளை அதிரவைத்தது.

இத்தனை கோபம் வருகிற அளவுக்கு விஷயம் என்னவாக இருக்கும்?

"ஓகே, நா உங்களைத் தொந்தரவு பண்ணலை.. ஆனா, குழந்தைங்க ரெண்டும் காலையிலேருந்து சினிமாசினிமான்னு ஆசையா இருக்காங்க... இப்போ போகலைன்னா அவங்க ஏமாந்து போயிடுவாங்களே! என்ன பண்ணலாம்?"

"ஏதாவது சொல்லி சமாளியேன்.. ம்ம்.. எனக்கு உடம்பு சரியில்லைன்னு சொல்லு, போ..."

"நிஜமாவே நா போய் சொன்னா, நம்ப மாட்டாங்க... அவங்களைக் கூப்பிடறேன், நீங்களே சொல்லிடுங்க..." என்றவள், குழந்தைகளைக் கூப்பிட, கிரி முகத்தைச் சுளித்தான்.

"என்ன துர்கா? நீயே சொல்லக்கூடாதா?" என்றவன், ஏ.சி.யைக் ஓடிவந்து நின்ற விசு, ஜக்குவிடம், "இன்னிக்கு

எனக்கு உடம்பு சரியில்லை.. அதனால, சினிமாவுக்கு அடுத்த வாரம் போகலாம்..." என்று பட்டென்று சொல்லி விட்டு, துர்காவின் பக்கம் திரும்பி, 'திருப்தியா?' என்ற கேள்வியோடு பார்த்தான்.

ஏமாற்றத்தில் சிணுங்கிக்கொண்டே குழந்தைகள் போனதும், கிரியைத் தனியே விட்டுவிட்டு உள்ளே வந்தவள், தானும் சாப்பிடாமல் உடை மாற்றிகொண்டு படுக்கையறைக்கு வந்தாள்.

632528

கட்டிலில் படுத்திருந்தவளுக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்த கிரி, மெதுவாய், "துர்கா..." என்றான்.

"ம்..."

894.8113
SIV

"கோவமா?"

"....."

"ஸாரி துர்கா... ரொம்ப கோவிச்சுக்கிட்டேன், இல்லே? வெரி ஸாரி..."

"....."

"என்ன பண்றது, துர்கா... நா சொல்றதைக் கேட்டா உனக்குக்கூட மூட் அப்செட் ஆயிடும் பார்..."

துர்கா எழுந்து உட்கார்ந்தாள்.

"எனி ப்ராப்ளம்?"

"ஆமா... இன்னிக்குக் காலைல எம்.டி என்னைக் கூப்பிட்ட னுப்பினார்... ஆபீஸ் முடிஞ்சதும் அவரைனி இருக்க முடியுமான்னு கேட்டார். ஆனா என்ன விஷயமனு சொல்லலை..."

"ம்..."

"ஒரு மணிக்கு வேலைய முடிச்சிட்டு அவர் ரூமுக்குப் போனேன்... கிரிச்சுக்கிட்டே, பீடிகை எதுவுமில்லாம, 'ஒரு ஆறு மாசம் இங்லாண்ட் போறீங்களா, கிரி?'ன்னு கேட்டார்..."

இங்கிலாந்தா?

கிரியா?

வாவ்!

துர்கா சட்டென்று முனனால் சாய்ந்தாள். கண நேரத்தில் முகத்தில் சிரிப்பு பூத்துக்குலுங்கியது.

"என்ன கிரி, திடீர்னு எதுக்கு இப்ப வெளிநாட்டுக்குப் போகணுமாம்?"

"வேற எதுக்கு? அங்க இருக்கற பெரிய இண்டஸ்ட்ரியல் ஸீபாக்டரி ஒண்ணுல நா டிரையினிங் எடுத்துக்கணுமாம்..."

"எடுத்து?"

"மண்ணாங்கட்டி!"

"சலிச்சுக்காம சொல்லுங்க... ப்ளீஸ்... டிரையினிங் எடுத்தா உங்களுக்குப் ப்ரமோஷன் ஏதாவது உண்டா?"

"மம்... வொர்க்ஸ் மானேஜரா ப்ரமோட் பண்ணுவாங்களாம். அங்க இங்லாண்ட்ல கதறுக்கிட்டதை வெச்சு எங்க ஸீபாக்டரில இம்ப்ரூவ்மெண்ட் காட்டிட்டா, ஆறாம் மாசமே அடுத்த ப்ரமோஷனும் உண்டாம்..."

"ரியலி கரேட், கிரி! இதையா பிரச்சினைன்னு சொன்னீங்க? நல்ல தமாஷ போங்க! அப்பறம்?"

"டிரையினிங் முடிஞ்சு வந்ததுமே, கம்பெனி செலவுல நமக்குப் பெரிய பங்களாவா குடுப்பாங்களாம்... அப்பறம் கார், மத்த சலுகைகள. இத்தியாதி, இத்தியாதி... எல்லாம் உண்டாம்..."

துர்கா சின்னக்குழந்தையாய் கைகளைத் தட்டிக் கொண்டு சிரித்தாள்.

"வாவ்! இதுக்காக சந்தோஷப்படாம ஏன் கோவிச்சுக்கறீங்க, கிரி?"

"உனக்கு சந்தோஷமா, துர்கா?"

"பின்னே? எதிர்பாராம இவ்வளவு பெரிய வாய்ப்பு வர்றதுன்னா சும்மாவா? உங்களை மட்டும்தானே அனுப்பப்போறாங்க? இல்லே, இன்னும் வேற யாராவது வர்றாங்களா?"

"வேற யாரும் இல்லே... நா மட்டும்தான்..."

"திடீர்னு எப்படி உங்களை மட்டும் செலக்ட் பண்ணினாங்க? ஆபீஸ்ல வேற யாருக்காவது இதப்பத்தி தெரியுமா, கிரி?"

"ம்... ரெண்டு மாசம் முன்னாடியே இதப்பத்தி பேச்சு வந்திருக்கு... சீனியர்ங்கற முறைல ஸ்ரீநிவாசன் சார்தான் போகப்போறார்னு எல்லாரும் நினைச்சோம்... அவரும் விடாம எம்டிய காக்கா பிடிச்சுக்கிட்டே இருப்பார்..."

"இப்போ அவரை அனுப்பாம, உங்களை ஏன் போகச் சொல்றாங்க?"

"எல்லாம் காரணமாத்தான்... அவருக்கு இப்பவே வயசு ஐம்பதுக்கு மேல ஆயிட்டதால, இன்னும் ஒரு வருஷங்கள்ல

ரிடையர் ஆயிடுவார். இந்த சமயத்துல போய் அவருக்கு டிரையினிங் குடுத்து, இத்தனை பணம் செலவழிக்கறதுல அர்த்தமில்லேன்னு டைரக்டர்ஸ் நினைக்கறாங்களாம். அதனால அவருக்கு அடுத்தபடியா இருந்த என்னை செலக்ட் பண்ணியிருக்காங்க. எனக்கு இன்னும் கிட்டத்தட்ட இருவது இருவத்தஞ்சு வருஷ சர்வீஸ் இருக்கே!"

அவன் சொல்வதைத் நிறுத்த வாய் மூடாமல் கேட்டுக்கொண்டிருந்த துர்கா, சந்தோஷம் தாங்காத பரபரப்போடு அவனை நெருங்கி ஓட்டி உட்கார்ந்தாள். அவன் கைகளை எடுத்துத் தன் கையில் வைத்தவள், நிமிர்ந்து அவன் தலையில் செல்லமாக முட்டினாள்.

"எவ்வளவு நல்ல விஷயம் இது, கிரி! இதுக்குப் போயா அப்செட் ஆகியிருக்கீங்க?"

பதிலேதும் சொல்லாமல் அமர்ந்திருந்தவனின் தலைமுடிக்குள் விரலை விட்டுக் கோதினவள், மீண்டும், "சொல்லுங்க... ஏன், இந்த ட்ரிப் உங்களுக்குப் பிடிக்கலையா?" என்றாள்.

"இல்லை... பிடிக்கலை!"

"ஏன்?"

"ஏன்னா? என்னமோ பிடிக்கலை..."

"கமான் கிரி... இவ்வளவு பெரிய சந்தர்ப்பம் வந்திருக்கு. ஆபீஸ்ல அத்தனை பேர் இருக்கும்போது உங்களை மட்டும் குறிப்பிட்டுத் தேர்ந்தெடுத்திருக்காங்க. திரும்பி வந்தப்பறம் பெரிய வேலை, நல்ல வசதியான வாழ்க்கைன்னு என்னென்னமோ காத்துக்கிட்டிருக்கு! என்ன கிரி..."

"எல்லாம் சரிதான், துர்கா... ஆனா..."

"ஆனா?"

"ஆறு மாசம் இங்லாண்ட்ல இருக்கணும்?"

"இருந்தா என்ன?"

"என்னவா? நா மட்டும் தனியாப் போகணும், துர்கா!"

"தனியாப் போகாம? ஆபீஸ் டிரைனிங்குக்கு குடும்பத்தோடவா போவாங்க?"

சட்டென்று கிரி நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"ஏன் துர்கா, குடும்பத்தோட போயிட்டா என்ன?"

துர்கா அவனைத் தீவிரமாகப் பார்த்தாள்.

"விளையாடாதிங்க, கிரி..."

"நிஜம்மா சொல்றேன், துர்கா... பசங்களை இங்க விட்டுட்டு, நீ என்கூட வந்துடு..."

"ஐயோ, நீங்க தங்கறதுக்கு மட்டும்தான் வசதி பண்ணிக் குடுப்பாங்க... ஆறு மாசமகூடப் பிரிஞ்சிருக்க முடியாம நானும் வந்து நின்னா, சாப்பாட்டுக்கு, மத்த செலவுக்கெல்லாம் என்ன பண்றது? அத விடுங்க, என் வேலை என்னாகறது?"

"பெரியய்ய வேலை! ராஜினாமா பண்ணிட்டு வந்துடு."

"பிராக்டிகலா யோசிச்சுப்பாருங்க, கிரி. எனக்கும் நல்ல வேலை, சம்பளம் எல்லாம் இருக்கு. கூடியசீக்கிரம் என்னை மானேஜ்மெண்ட் காடர்ல சேர்த்துக்கறதா வேற ஒரு பேச்சு இருக்கு. இப்படிப்போய் நா வேலைய விட்டுட்டு

உங்களோட வந்துட்டா, அப்பறம் என்ன பண்றது? இந்தியாவுக்குத் திரும்பி வந்தப்பறம் வேற நல்ல வேலை கிடைக்குமா?"

அசுவாரஸ்யமாய் 'ப்ச்' என்றவன், "பின்னே என்ன தான் பண்ணலாம், சொல்லு! நா தனியா அங்க போக மாட்டேன்... உங்களையெல்லாம் விட்டுட்டு எல்லாம் இருக்கமுடியாது! நா போகலைன்னு எம்.டி. கிட்ட சொல்லிடட்டுமா?" என்றான்.

"சின்னக் குழந்தை மாதிரி பேசாதீங்க! வாழ்க்கைல இந்த மாதிரி நல்ல சந்தர்ப்பங்கள் அடிக்கடி வராதுன்னு எல்லாரும் சொல்வாங்க... நமக்கு அப்படி ஒண்ணு வந்திருக்கறப்ப, கப்புன்னு பிடிச்சுக்கிட்டு மேலமேல நம்மள உசத்திக்கப் பார்க்கவேணாமா? அத விட்டு, எனக்கு ஒண்ணும் வேணாம்னு சொல்றதா புத்திசாலித்தனம்?"

"சரி, அசட்டுத்தனம்னே வெச்சிப்போம்... நீ என்ன சொன்னாலும் நா போகப்போறதில்லே..."

"என்ன கிரி இது, ஒரு ஆறு மாசம்... ஆறே ஆறு மாசம் போறதுக்கு இந்தப் பாடு படுத்தறீங்களே! நீங்க பல்லைக் கடிச்சிக்கிட்டுப் போயிட்டு வந்துட்டா, அப்பறம் ஆயுசுக்கும் நமக்குத்தானே நல்லது?"

கிரிதர் அலுப்புடன் தலைகாணியில் சாய்ந்து கொண்டான். நீளமாய் பெருமூச்சு விட்டான்.

"நா வேணாம்னு சொன்னா கேக்கறியா? ஆனாலும் உனக்குப் பிடிவாதம் அதிகம், துர்கா..."

"பிடிவாதமா? யாருக்கு, எனக்கா, இல்லே உங்களுக்கா? முயலுக்கு மூணே கால்னு சொல்லி அழுத்தமா பிடிவாதம் பிடிக்கற குணம் யாருக்கு?"

"....."

"எப்பவும் உங்க பிடிவாதத்துக்கு நானே விட்டுக் குடுத்திருக்கேன்... இந்தத் தரம், ஒரே ஒரு தரம்... எனக்காக நீங்க விட்டுக்குடுங்களேன்... ப்ளீஸ், கிரி..."

அன்றைக்கு, 'சரி, போய்த் தொலையறேன்' என்று எரிந்துவிழுந்தாலும், அடுத்துவந்த நாட்களில் தொடர்ந்து இதையே பேசி, விவாதித்து, 'மாட்டேன்' என்று தீவிரமாய் மீண்டும் மறுத்துத் தயங்கியவனை, விடாமல் வற்புறுத்தி ஒவ்வொரு தரமும் சம்மதிக்கவைத்து, அடுத்த மாதத்தில் ஒருநாள் விமானத்தில் ஏற்றிவிடுவதற்குள் துர்கா இளைத்தான் போனாள்.

(7)

பஸ்ஸிலிருந்து இறங்க முற்படுகையில், பின்பக்கமாய் இடுப்புப் பிரதேசத்தை யாரோ தடவிகொடுப்பது புரிய, துர்கா சரக்கென்று திரும்பினாள்.

மிக நெருக்கமாய் சன்னமாள மீசையும், அசட்டுச் சிரிப்புமாய் நின்றிருந்த ஆள், அவனின் நேர்ப்பார்வையை சந்திக்கத் திராணியில்லாதவன் போல, அவசரமாய் தலையைக் குனிந்துகொண்டான்.

பத்து நொடிகளுக்கு அப்படியே நின்று, அவனை அழுத்தமாய் பார்வையால் எரித்து, நிதானமாய் நான்கு பேர்களுக்குக் கேட் கும் தொனியில், 'பாஸ்டர்ட்' என்று வைது, நின்ற நிலையிலேயே அவனைக் கூனிக்குறுக வைத்த பின்னர், கீழே இறங்கினாள்.

அலுப்பாக இருந்தது.

கிரி இல்லாத வீட்டுக்குப் போகவேண்டுமே என்கிற நினைப்பு வயிற்றில் சங்கடமாக உருண்டது.

இன்னும் முழுசாக இரண்டு மாசங்கள்கூடப் பூர்த்தி யாகவில்லை. அதற்குள் இப்படியொரு சலிப்பும் ஏக்கமும் ஆளை ஆக்ரமித்துச் செயலிழக்கவைத்தால், மீதமுள்ள நான்கு மாசங்களையும் எப்படிக் கழிக்கப் போகிறோம்?

மெதுவாக நடந்தாள்.

"பூ வேணுமாம்மா? ஜாதிப்பூ முழம் அம்பது காசு தான்... வாங்கிட்டுப்போம்மா..."

இப்படி அடர்த்தியாகக் கட்டப்பட்டிருந்த ஜாதிச் சாத்தைப் பார்த்துவிட்டால் கிரிதருக்குள் உற்சாகம் ஏகத்துக்குப் புகுந்துவிடும்.

நான்கு முழங்களாவது வாங்கி, தலையில் தானே வைக்கிறேன் என்றும், நிமிஷத்துக்கு ஒருமுறை 'ப்பா... என்ன வாசனை! கிட்ட வா...' என்று முகர்ந்துபார்க்கும் சாக்கில் அருகில் இழுத்து அணைத்தும்...

அந்த நெருக்கமும் பேச்சும் இல்லாமல்தானே இப்போது மனசு இப்படி ஏங்கித்தவிக்கிறது!

தெருமுனை திரும்பும்போது மூலைக்கடையில் பச்சென்று கீரைக்கட்டுக்களை அடுக்கியிருப்பது பார்வை வீச்சில் பட, துர்கா நின்றாள்.

இரண்டு நாட்களுக்கு ஒரு தரமாவது கிரிக்குக் கீரை வேண்டும்.

கீரை மசியல், பருப்புப் போட்டுக் கடைந்த பொரியல், புளிக்கீரை... இப்படி.

— இந்தக் கீரையில என்ன இருக்கு, கிரி? வழவ ழான்னு... ஒரு ருசியா, வாசனையா...

இவள் சீண்டினால் அவன் முகத்தைத் தீவிரமாக வைத்துக்கொண்டு பதில் கூறுவான்.

— என்ன இப்படிச் சொல்லிட்டே துர்கா? இதோட டேஸ்டே அலாதிதானே? எவ்வளவு சத்து நிறைஞ்சது தெரியுமா? இரும்புச்சத்து எக்கச்சக்கம்... வைட்டமின்ஸுக்கும் குறைச்சலில்லே... அடிக்கடி சாப்பிட்டா கண் நோயே வராமத் தடுக்கலாமாம். அப்பறம், இந்த முருங்கக்கீரை இருக்கு பாரு, அதைச் சாப்பிட்டா...

— ஹேயப், போதும்... முருங்கக்கீரை பிரதாபம் போதும்...

வாயில் விரல்களை வைத்துப் பொத்தியதும், ஆர்த் தழுவிச் சிரித்ததும...

கிரி ஊருக்குப் போய்விட்ட நாளாய், 'அவருக்குப் பிடித்ததை அவரில்லாதபோது ஏன் சமைக்கவேண்டும்' என்கிற மாதிரி கீரையே வாங்கவில்லை.

அம்மா அப்பாவின் தேவைக்கு மட்டும் இரண்டு கட்டுகளைத் தேர்ந்தெடுத்தபோது, இத்தனை சின்ன சமாச்சாரங்களில்கூட கிரியை மறந்து தள்ளால் இருக்க முடியாதது ஒருவிதப் பெருமையைத் தர, காசைக் கொடுத்துவிட்டு நகர்ந்தான்.

அம்மா வீட்டில், வழக்கம்போல இவள் வருகைக்காகக் குழந்தைகள் வாசலிலேயே காத்திருந்தார்கள்.

இரண்டு வீடு தள்ளி வரும்போதே ஓடிவந்து, லீசு கைப்பையையும், ஜக்கு கீரைக்கட்டுக்களையும் வாங்கிக் கொண்டார்கள்.

"ஏமமா, இன்னிக்கு இவ்ளோ லேட்?"

"லாரி கண்ணா, ஆபீஸ்ல கொஞ்சம் வேலை இருந்தது... முடிச்சிட்டு வர நாழியாயிட்டது."

"பீச்சுக்குப் போகலாம்னு சொல்லியிருந்தீங்களே, மறந்திட்டீங்களா?"

"மறக்கவியே..."

"அப்ப, பீச்சுக்குப் போறோமா?"

"அம்மா என்னிக்காவது ஒண்ணு சொல்லிட்டுச் செய்யாம இருந்திருக்கேனா?"

சட்டென்று குஷி பிறந்துவிட, நான்கே எட்டில் விசு கேட்டைத் திறந்துகொண்டு வராந்தாவில் உட்கார்ந்திருந்த சுப்பாமணியத்திடம் ஓடினான்.

"தாத்தா, நாங்க பீச்சுக்குப் போகப்போறோமே!"

"இத்தனை நாழிக்கு மேலியா?"

அருகில் வந்துநின்ற மகளிடம் மீண்டும் அவர் அதையே கேட்க, துர்கா புன்னகைத்தாள்.

"எத்தனை நாழிப்பா? ஆறரைதானே ஆறது!"

"ஆனாலும்... இருட்டிப்போச்சேம்மா? பீச்சைப் பார்க்காதவங்களா இவங்க, இப்பப் போயே தீரணும்னு துடிக்கு?"

"கூட்டிட்டுப் போறேன்னு சொல்லிட்டேம்ப்பா..."

"அதுகளாச்சு! நாளைக்குக் கூட்டிட்டுப் போறது..."

துர்கா மீண்டும் புன்னகைத்தாள். ப்ளீஸ், புரிந்து கொள்ளுங்கள் என்கிற பார்வையுடன் அவரை ஏறிட்டாள்.

"டாக்ஸியில போய் பத்து நிமிஷம் மனவல உக்காந்துட்டு உடனே வந்துடறோம்ப்பா... அவங்ககிட்ட பராமிஸ் பண்ணிட்டேனே..."

இனியும் இவளோடு தர்க்கிப்பதில் பலனில்லை என்பது புரிய, சுப்ரமணியம் திரும்பி உள்கட்டைப் பார்த்துக் குரல்கொடுத்தார். "அகிலா... சட்டுனு துர்காவுக்குக் காபியக் கல... பீச்சுக்குப் பசங்களைக் கூட்டிட்டுப் போயிட்டுவந்துடலாம்..."

ஐந்து நிமிஷங்களில முகம் கழுவி, காபி சாப்பிட்டு விட்டு துர்கா வருவதற்குள், தலை வாரி சட்டையை மாட்டிக்கொண்டு சுப்ரமணியம் தயாராக, அனைவரும் சந்தோஷமும் சிரிப்புமாய இளம்பிளார்கள்.

டாகஸி ஒன்றைப் பிடித்து திட்டமிட்டபடி மெரினாவுக்குச் சென்று, அரை மணி போல மணலில உட்கார்ந்து, குழந்தைகளுக்கு ஆளுக்கொரு சாக்கோ பாரை வாங்கித் தந்தபின் வெயிட்டிங்கில் நின்ற டாக்ஸியிலேயே வீடுதிரும்பியபோது மணி ஏழேமுக்கால் என்றது.

அம்மா சமைத்து வைத்திருந்த சாப்பாட்டைச் சாப்பிட்டு, உள்காரியத்தில் கொஞ்சம் உதவி பண்ணியதும், பிள்ளைகளுடன் துர்கா தன் வீட்டுக்குப் புறப்பட்டாள்.

"துணைக்கு வரட்டுமா, துர்கா?"

"வேணாம்ப்பா... தெருவுல இன்னும் ஜனநடமாட்டம் இருக்கு... தவிர, ரெண்டு ஆம்பிளைப் பசங்க எனக்குத் துணையா வராங்க... அப்பறம் என்ன?"

சிரித்து விடைபெற்றவாறே அவள் படியிறங்கினதும் ரொம்ப பெரிய மனிதர்கள் மாதிரி விசுவும் ஜகதீஷும் அவளுடைய பக்கங்களில் பாதுகாப்பாய் நடந்தார்கள்.

சிதர் ஊருக்குப் புறப்படும் முன்னரே, பிள்ளை களோடு துர்கா தங்கள் வீட்டிலேயே தொடர்ந்து இருக்கப்போவது தீர்மானிக்கப்பட்ட சமாச்சாரம்தான்.

— நா ஊருக்குப் போற ஆறு மாசமும் உங்கப்பா வீட்டுக்குப் போயிடறியா, துர்கா?

— போயிட்டு?

— இந்த வீட்டைப் பூட்டி வெச்சிடலாம்... மாடிக் குடித்தனக்காரர்களை விட்டு வீட்டைப் பாதுகாப்பா பார்த்துக்கச் சொல்லலாம்...

மோசனையுடன் சில நிமிஷங்களுக்கு அமர்ந்திருந்த தலன், 'ஹண்டாம்' என்று தலையசைத்தாள்.

— தனியா இருக்கவேணாமேன்னு சொல்றேன், துர்கா...

— தனியா எங்க இருக்கப்போறேன், இரி? பசங்க இருக்காங்களே!

— அவங்களுக்கு என்ன தெரியும், குழந்தைங்க... திடீர்னு ஏதோ உதவி தேவைப்பட்டுது... அவசரம்னு வெச்சிக்க... அப்ப?

— அப்படியென்ன அவசர நிலை? வயத்துல பிள்ளையா, இல்லே நீக்காளியா? ம்ஹூம், ஒண்ணுமில்லே... தவிர, அப்பப்ப அத்தை வந்துபோக நினைச்சாங்கன்னா, நம்ம வீட்டுல நாங்க இருந்தாத்தான் அவங்களுக்கு வசதியா இருக்கும...

இவள் இத்தனை கூறியும் நம்பிக்கை உண்டாகாத மாதிரி நிற்க, அவளை நெருங்கி சுழற்றில கைகளை மாலையாக்கினான்.

— எதை நினைச்சும் கவலைப்படாதீங்க, இரி... தனிக் குடித்தனம்லு பேருதானே ஒழிய, பாதி சமயம் அலங்களோடதான் இருப்போம்... ப்ளீஸ், கவலைப் படாதிங்க...

வாஸ்தவம்தானே?

தினமும் காலையில் எழுந்து வேலைக்காரியைக் கிட்டத்தில வைத்துக்கொண்டு வேலைகளைக் கவனித்து, சமைத்து, குழந்தைகளைக் கிளப்பி, தானும் புறப்பட்டால், மாலையில் பள்ளியிலிருந்து அவர்களும், அலுவலகத்தி லிருந்து இவளும் நேராக அம்மா வீட்டுக்குச் சென்று, பூனை, சில சமயங்களில இரவுச் சாப்பாட்டையும் அங்கேயே முடித்துக்கொண்டு, படுக்கத்தானே இங்கே வருகிறார்கள்?

இத்தனை அன்பான அம்மாவும் அப்பாவும் இப்படிப் பக்கத்துத் தெருவிலேயே இருந்து, இவ்வளவு கரிசனத்துட னவனிக்கக் கொடுத்துத்தான் வைத்திருக்கவேண்டும்.

"அம்மா..."

"ம்?"

"இன்னிக்கு அப்பாகிட்டயிருந்து லெட்டர் வந்திருக்கு மாம்மா?"

"வந்திருக்கலாம்..."

"போன வாரம் ரெண்டு லெட்டர் வந்தது... இந்த வாரம் இதுவரைக்கும் ஒண்ணுதானே வந்திருக்கு?"

"வேலை அதிகமா இருந்து அப்பாவுக்கு ஓழிவு இருக்காது, விசு..."

"அப்பா அனுப்பின லண்டன் பிரிட்ஜ் பிக்சர் போஸ்ட் கார்டை என் ஃப்ரெண்ட்ஸுக்குக் காட்டி, 'கடிதம் வர்றப்பவும், போறப்பவும் டணடணன்னு மணி அடிக்கும், பாலம் உயரப் போய் வழி விடும்'னு சொன்னா, 'போடா, பாலம் எங்கயாவது நகருமா?'ன்னு கேலி பண்றாங்கம்மா..."

துர்கா சிரித்தாள்.

பூட்டைத் திறக்கும்போது ஜக்கு கேட்டான்: "அடுத்த வாரம் எனக்குப் பிக்சர் போஸ்ட் கார்ட் அனுப்பறேன்னு எழுதியிருந்தாரே, அது எப்பம்மா வரும்?"

"சுருக்க வரும். நல்லதா வாங்கி அனுப்ப வேணாமா?"

கதவைத் திறந்து விளக்கைப் போட்டதும், ஜன்னலருகில் கிடந்த அந்த நீலமும் இளப்பும் பார்டர் இட்ப்பட்ட சுவர் கண்ணில் விழுந்து, மனசுக்குள் குபுக்கென்று நீரூற்று ஒன்றைக் கிளப்பியது.

நான்கு நாட்களுக்கொருதரம் பக்கம்பக்கமாய் கடிதம் எழுதவேண்டுமென்றால், தனிமை கிரியை எவ்வளவு தவிக்கவைக்கவேண்டும்?

நெகிழ்ந்துபோன இதயத்துடன் கவரைக் கையிலெடுத்து, ஜக்குவுக்காக உள்ளே வைத்திருந்த பக்கிங்ஹாம் அரண்மனை பிக்சர் போஸ்ட் கார்டை அவனிடம் நீட்டிவிட்டு, மூன்றாக மடிந்திருந்த அந்த தடிமனான தாள்களைப் பிரித்து, 'என் கண்ணம்மா...' என்கிற வரிகளைப் படிக்க முற்படுகையில், எழுத்துக்களைத் தெளிவாகப் பார்க்க முடியாதபடி துர்காவின் கண்களில் நீர்ப்பூக்கள் குட்டியாய் எட்டிப்பார்க்கவே செய்தன.

(8)

"அம்மா..."

"ம்?"

"ஜக்குவோட பர்த்டேக்கு என் ஃப்ரெண்ட் அஷோக்கைக் கூப்பிடட்டுமா?"

"எந்த அசோக், விசு?"

"அசோக் இல்லேம்மா, அஷோக்! அப்படிக் கூப்பிட்டாதான் அவனுக்குப் பிடிக்கும். என் பெஸ்ட் ஃப்ரெண்டும்மா.. நானும் அவனும் ஒரே டேபிள்லதான் உக்காருவோம், ஒண்ணா சாப்பிடுவோம். அவன்னா எனக்கு உசிரும்மா!"

படுத்துக்கொண்டிருந்த ஜக்கு விருட்டென்று எழுந்து உட்கார்ந்தான். "ஐயோ, அவனைக் கூப்பிட வேணாம்மா.. மகா மொரடன்! அவனோட சேர்ந்துகிட்டு தெனம்தெனம் என்னை ஸ்கூல்ல அழுவெக்கறதுதாம்மா இவனுக்கு வேலை..."

"நீ எதுக்கெடுத்தாலும் பாப்பா மாதிரி அழுதா, அதுக்கு நாங்க என்ன பண்றது? யூ ஆர் எ லில்லி! பேசாம இவனுக்கு டயபர் கட்டி விட்டுடுங்கம்மா.. நர்சரி ஸ்கூலுக்குப் போகட்டும்.. இவன் அதுக்குத்தான் லாயக்கு!"

"பா.. பாருங்கம்மா இந்த விசுவ.. நா ஒண்ணும் லில்லி இல்லே!"

உதடு துடிக்க அழுகையை அடக்கிக்கொண்டு ஜக்கு பேச, துர்கா முன்னால் சாய்ந்து 'ஷ்..ஷ்..' என்று அதட்டினாள்.

"அப்பா உன்கிட்ட என்ன சொல்லிட்டுப் போயிருக்கார், விசு? தம்பிய சீண்டக்கூடாது, அழவிட்டு வேடிக்கை பண்ணைக்கூடாதுனிட்டுதானே?"

"அதில்லேம்மா... இவன் வந்து..."

"வந்துமில்லே, போயுமில்லே... நோ மீன்ஸ் நோ! அப்பாவுக்கு லெட்டர் போட்டு, விசு இப்படி நடந்துக் கறான், உங்களுக்குக் குடுத்த வாக்கைக் காத்துல பறக்கவிட்டுட்டான்னு சொல்லட்டுமா?"

விசு பார்வையைத் தழைத்துக்கொண்டான். இசு சிணுங்கலாகக் கெஞ்சினான். "ஸாரிம்மா... இனிமே இப்படி நிச்சயமா பண்ணமாட்டேன்... அப்பாவுக்கு மட்டும் எழுதிடாதீங்கம்மா, ப்ளீஸ்..."

நிஜமான பயத்துடன் பேசினவனை துர்கா இழுத்து அணைத்துக்கொண்டாள்.

"ஓகே, எழுதலை... என்னைப் பாரு. உன் ஃப்ரெண்ட் யாரையோ பார்ட்டிக்குக் கூப்பிடணும்னு சொன்னியே, யார் அவன்?"

"அஷோக்கம்மா..."

"அஷோக்கைக் கூப்பிடணும், அதானே? ரைட்... கூப்பிட்டுடலாம். அப்பறம்?"

ஜக்கு நகர்ந்து வந்து அம்மாவின் மேல் சாய்ந்து கொண்டான். "என் பர்த்டே பார்ட்டிக்கு உன் ஃப்ரெண்டை ஏன் கூப்பிடணும்?"

"கூப்பிட்டா என்ன? அம்மாதான் சரின்னு சொல்லிட்டாங்களே?"

"உன் பர்த்டே பார்ட்டிக்கு மட்டும் என் ஃப்ரெண்டஸை வரவேணாம்னு சொன்னியே?"

"பின்னே? நீ படை மாதிரி கோகுல், ராஜீவ், சந்தர், மாதவன்னு நீளமா அத்தனை பேரையும் கூப்பிட்டிருப்பனா? கடைசில என் ஃப்ரெண்டஸை விட உன் ஃப்ரெண்ட்ஸ் தான் அதிகமா இருப்பாங்கன்னு வேணாம்னேன். தப்பா?"

"அப்ப உன் அஷோக்கும் என் பார்ட்டிக்கு வரவேணாம்..."

"பாருங்கம்மா இவனை..."

"அடடா, வரவர உங்களோட இதுவே பெரிய ரோதனையாப்போச்சே! எந்த விஷயத்துலயும் தர்க்கம் தானா? இப்ப சும்மா இருக்கப்போறீங்களா, இல்லியா? மணி பத்தாச்சு... பேசாமப் படுத்துக் கண்ணை மூடுங்க... ம்... ம்..."

அதட்டலாய் துர்கா பேசியதும் சட்டென்று இரண்டு பேரும் அவரவர் படுக்கைக்குத் தாவினர். நடுவில் துர்கா — அந்தப் பக்கம் விசு, இந்தப் பக்கம் ஜக்கு.

படுத்து இரண்டு நிமிஷங்கள் ஆகியிருக்கும்... ஜக்கு மெதுவாக "அம்மா..." என்றான்.

படித்துக்கொண்டிருந்த புத்தகத்திலிருந்து பார்வையை எடுக்காமல் துர்கா 'ம்' கொட்டினாள்.

"பார்ட்டிலே கேக் இருக்குமாம்மா?"

துர்கா புத்தகத்தை மார்பில் விரித்தபடி வைத்தாள். "பின்னே?"

"இல்லீல... எப்பவும் அப்பாதானே ஆபீஸ்லேருந்து வர்றப்போ கேக் வாங்கிட்டுவருவார்னு கேட்டேன்..."

"அப்பா இல்லாட்டி என்ன, ஜக்கு? அம்மா இல்லியா? உனக்குப் பிடிச்ச மாதிரி நா ஏற்கனவே கேக் ஆர்டர் பண்ணிவாச்சு..."

ஜக்கு உற்சாகம் தாங்காமல் எழுந்து உட்கார்ந்தான். "என்ன மாதிரி கேக்கும்மா? கப்பல் மாதிரியா, கார் மாதிரியா?"

"சொல்லமாட்டேன்... சர்ப்ரைஸ்!"

"ப்ளீஸ்ம்மா... ப்ளீஸ்..."

அழகான விமானம் போல ஆர்டர் கொடுத்திருக்கும் கேக்கைப் பார்த்தால் ஜக்கு எப்படிப் பூரித்துப்போவான் என்கிற சந்தோஷத்தோடு 'ம்ஹூம்' என, ஜக்கு உதட்டைப் பிதுக்கியவண்ணம் மீண்டும் படுத்தான்.

இப்போது விக நலையைத் தூக்கினான். "ஹால்ல பனூன், கலர் பேப்பர் எல்லாம் என்னிக்குக் கட்டலாம்மா?"

"புதன்கிழமை கார்த்தால..."

"எல்லாரும் வர்றதுக்குள்ள கட்ட முடியுமாம்மா?"

"முடியுமே! அன்னிக்கு நா ஆபீஸ் போகப் போறதில்லே... வீவு! வீட்டுல இருந்து அத்தனையும் கவனிச்சுடுவேன்..."

"எல்லாருக்கும் கேக் உண்டா?"

"கேக், சமோஸா, வாழைப்பழம்... அப்பறம்... அப்பறம்..."

தூண்டும் விதமாய் தூர்கா பேசி நிறுத்த, இரண்டு பிள்ளைகளும் எழுந்து உட்கார்ந்துகொண்டன.

"அப்பறம்?"

"ஐஸ்க்ரீம்!"

"ஹய், ஐஸ்க்ரீமா? ஜாலி... ஜாலி..."

எழுந்து நான்கு தரம் குதித்துவிட்டு ஜக்கு உட்கார, விக முகத்தைக் காட்டினான். "என் பர்த்டேக்கு ஐஸ்க்ரீமே குடுக்கலியேம்மா..."

"அதுக்கு பதிலா எல்லாருக்கும் கூல்ட்ரிங்க் குடுத்தோமே, விக?"

திருப்தியில்லாமல் உட்கார்ந்துவிட்டு, "என் அடுத்த பர்த்டேக்குக் கண்டிப்பா ஐஸ்க்ரீம் குடுக்கணும்... சொல்லிட்டேன்!" என்று முனகியவாறு படுத்துக்கொள்ள, அவனை சமாதானப்படுத்தும் விதமாய் இரண்டு தரம் தட்டிக்கொடுத்தவள், புத்தகத்தைக் கையிலெடுத்தாள்.

கொஞ்சம் படித்திருப்பான்... அவளோடு ஒட்டிக் கொண்ட ஜக்கு சின்னக்குரலில், "அம்மா..." என்றழைத்தான்.

"என்னப்பா?"

"அப்பா பத்தி ஏதாவது சொல்லுங்கம்மா..."

"என்ன சொல்லணும்?"

"ஏதாவது... இப்ப அப்பா அங்க என்ன பண்ணிட்டிருப்பார்?"

"மணி பத்தரையா? அப்படின்னா அங்க சாயங்காலம் அஞ்சு மணி ஆகியிருக்கும். ஆபீஸ்லேருந்து கிளம்பி டென்னிஸ் ஆடப்போயிருப்பார்..."

"ட்யூப்லு சொன்னா என் கிரெண்ட்ஸ் சிரிக்கறாங்கம்மா... எலக்ட்ரிக் டிரெயின்லு சொல்லணுமாம்..."

"அந்த நாட்டுல அதை ட்யூப்னுதான் சொல்லுவாங்க, விசு..."

"அப்பறம் என்னம்மா பண்ணுவார்?"

"மம்? தன் அறைக்கு வந்து டி.வி. பார்ப்பார். நமக்குக் கடிதாசு எழுதுவார்..."

"வெளில எங்கயும் போகமாட்டாரா?"

"அடிக்கடி போகமாட்டார்... எப்பவாவது, யாராவது கட்டாயப்படுத்தினா போவார்..."

"அங்க ரொம்பக் குளிருமாம்மா? ஸ்னோ இருக்குமோ?"

"இன்னும் ஸ்னோ வரலைன்னு அப்பா கடைசி லெட்டர்ல எழுதியிருந்தாரே!"

"நம்பளைப் பிரிஞ்சிருக்கறது அப்பாவுக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கும், இல்லே?"

"ம்ம்..."

"என் பர்த்டேக்கு அப்பா கார்டு அனுப்புவாரா?"

"கண்டிப்பா அனுப்புவார், ராஜா..."

"பொம்மை கூட அனுப்பறேன்னு சொன்னாரே! அப்பா சொன்னா நிஜமா செய்வார், இல்லேம்மா?"

துர்கா பதில் கூறாமல் பெருமையுடன் சிரித்தாள்.

"முன்ன மாதிரி அப்பா இப்பல்லாம் வாரம் ரெண்டு லெட்டர் ஏம்மா எழுதறதில்லே?"

"பா? வேலை ஜாஸ்தியா இருந்திருக்கும்... அலுத்துப் போய் சூழுக்கு வர்றப்போ லெட்டர் எழுத டயர்டா

இருக்காதா? ஆனாலும் பாவம்... முடிஞ்சப்பல்லாம் எழுதிட்டுத்தானே இருக்கார், விசு..."

ஜக்கு அம்மா முகத்தருகில் தன் முகத்தை வைத்துக் கொண்டான்.

"அப்பா எப்ப வருவார்ம்மா? எனக்கு அவரைப் பார்க்கணும் போல இருக்கு..."

"ஊருக்குப் புறப்படறப்போ அப்பா என்ன சொல்லிட்டுப் போனார்? ஞாபகம் இருக்கா?"

"ஆறு மாசத்துல வந்துடறதா சொன்னார்..."

"அப்ப வந்துடுவார்."

"ஃபிப்ரவரில கட்டாயம் வந்துடுவார், இல்லே? ஜம்போ ஜட்ல ஜம்முன்னு வந்து இறங்குவார், இல்லேம்மா?"

"வருவார், வருவார்... இப்ப கண்ணை மூடிக்கிட்டுத் தூங்கப்போறீங்களா, இல்லியா?"

"அப்பா வர்றப்போ நாம ஏர்போர்ட்டுக்குப் போய் மாலை போடலாமா? சுதீரோட அப்பாவுக்கு எல்லாரும் போட்ட மாதிரி?"

"போடலாம்... போடலாம்..."

"சிவப்பு ரோஜா மாலை... கனம்...மா... வாசனையா..."

"விசு, இப்ப நீ என்கிட்ட உதைதான் வாங்கப்போற! கண்ணை மூடு சொல்றேன், ஒரு வார்த்தை பேசினாலும் எனக்குக் கோவம் வரும்!"

விளக்கை அணைத்து ஒருவழியாய் பிள்ளைகளைத் தூங்கவைத்தவள், அவர்கள் கிரிதர் மேல் வைத்திருக்கும் பாசத்தையும், தினமும் அவரைப்பற்றிப் பேசுவதிலேயே பொழுதைக் கழிப்பதையும், அவர் திரும்பிவரப்போகும் நாளுக்காக ஆர்வத்துடன் காத்திருப்பதையும் — அவருக்குத் தெரிவித்தால் எத்தனை சந்தோஷப்படுவார் என்று கற்பனை பண்ணி, சந்தோஷித்து, அந்தச் சிரிப்பு உதட்டை விட்டு மறையாமலேயே உறக்கத்தில் அமிழத் தொடங்கினாள்.

(9)

பொருந்தி உட்கார்ந்து வேலையைக் கவனிக்க இயலாதபடி என்னவோ படுத்தியெடுத்தது.

பிறாண்டலா?

சங்கடமா?

பயமா?

நிதானமாய் யோசனை பண்ணியபோது இந்த அவஸ்தை பிறாண்டலுமில்லை, சங்கடமுமில்லை என்று நிச்சயமாய் புரிந்துகொள்ள முடிந்தது.

எதற்காக உறுத்தவேண்டும், இல்லை, வேதனைப்பட வேண்டும்?

தன் பொறுப்பை மறந்து ஒருத்தர் இருப்பதும், புண்படுத்துவதும் வேண்டுமானால், 'என்ன இப்படிப் பண்ணிவிட்டாரே!' என்று சதா பிறாண்டலாம், இல்லை, 'ஐயோ, இப்படிக்கூடவா நடந்துகொள்வது சாத்தியம்!' எனறு அடிபட்ட வலியில் துடிக்கலவக்கலாம்.

ஆனால் கிரி?

எப்போப்பட்ட ஆண்மகன் அவர்!

அவர் சம்பந்தமாக இந்த மாதிரி நினைத்துப் பார்ப்பதுகூடப் பாவமல்லவா?

அப்படியென்றால் இது பயம்தானா?

நினைத்த மாத்திரத்தில் சன்னமாக அடிவயிற்றில் ஒரு இல்லிப்பை உண்டாகுகும் பயமா?

அப்படித்தான் தோன்றியது.

இன்றோடு சரியாக இருபது நாட்கள்...

இன்றாவது வந்திருக்குமா?

வந்திருக்கும்... கட்டாயம் வந்திருக்கும்.

வராவிட்டால்...?

இருப்புக்கொள்ளாமல் துர்கா எழுந்து அலமாரியிடம் சென்று ஏதோ ஃபைலை எடுக்கும் பாவனையுடன் நின்றுகொண்டாள்.

ஜக்குவின் பிறந்தநாளுக்கு வாழ்த்து அட்டையுடன் வந்ததுதான் கடைசி.

அப்புறம் இன்றுவரை ஒன்றும் இல்லை.

இவள் வழக்கம்போல வாரம் இரண்டு தபாமல் எழுதிக்கொண்டுதான் இருக்கிறாள். 'இன்று மோர்க்குழம்பு வைத்தேன்' என்பதில் துவங்கி, 'இருபத்தி நாலு மணி நேரமும் கண்ணுக்குள்ளேயே நிற்கிறீர்கள்... எப்போது ஃபிப்ரவரி வரும் என்றிருக்கிறது' என்று காதலையும் விரகதாபத்தையும் கொட்டித்தீர்த்துவிடுவது வரை...

என்னாயிற்று?

சட்டென்று என்னவோ நினைப்பு வந்த திலுகில் துக்கா திமிர்ந்தாள்.

போஸ்ட் ஸ்டிரைக், அது இதுவென்று ஏதாவது இருக்குமோ?

அட— இதை நாள் முன்பே எண்ணாமல் போனேனே!

அப்படித்தான் இருக்கும்... அங்கெல்லாம்தான் திடும்திடுமென்று மாசக்கணக்கில் தபால் துறை வேலை நிறுத்தம் வருவது வழக்கமாயிற்றே!

பாவம் கிரி... எப்போதும்போல வாரத்திற்கு ஒன்றோ இரண்டோ எழுதிவிட்டு, இப்போது என்ன டா பண்ணு வோம் என்று முழித்துக்கொண்டிருக்கும்!

கொஞ்சம் சமாதானமடைந்தவள் மீண்டும் மேஜை முன் வந்து உடகார்ந்துகொண்டாள்.

ஆபீஸராகிவிட்டதில் இது ஒரு சௌகர்யம்... தனி அறை... எல்லார் நடுவிலும் படபடப்பையோ, கோபத்தையோ, இருப்புக்கொள்ளாமையையோ காட்டிக் கொள்ளாமல் இருக்க, பிரயத்தனப்பட்டு முகமூடியை மாட்டிக்கொண்டு, வலுக்கட்டாயமாக சிரிப்பை முகத்தில் ஒட்டவைக்க வேண்டியதில்லை.

கிரி இருந்தபோதே ஒரு அலலுடன் எதிர்பார்க்கப் பட்ட ராவு, இந்த ஆபீஸர் பதவி.

ஜீனியர் இன்னொரு மீட்டிங்ல என்னைப்பத்தி சொல்ல உயர்வா பேசினார், கிரி... 'மிஸஸ் கிரிதர் போட்டுக்கொடுத்த ப்ராஜெக்ட் நல்லவிதமாய் அமைஞ் திருக்கு! வி ஈஸ் ப்ரில்லியண்ட்!'னு வாய்விட்டுப் புகழ்ந்தார்...

— புகழறது இருக்கட்டும்... ஆபீஸர் ப்ரமோஷன் கொடுக்கப்போறது எப்போ? அதப்பத்தி ஏதாவது சொன்னாரா?

— வெளிப்படையா சொல்லலை... ஆனா, ரொம்ப நீக்கிரமே பதவிஉயர்வை எதிர்பார்க்கலாம்ன்ற மாதிரிதான் பேசினார்.

— எனக்கென்னமோ அவர் சாமர்த்தியமா பேசி, உன்னைத் தட்டிக்குடுத்து வேலை வாங்கறார்னே தோணுது! ஆறு மாசமாவே உன்னை அவர் புகழறதுக்கு ஒண்ணும் குறைச்சலில்லே... காரியத்துலதான எதையும் காணும்!

— குறைப்பட்டுக்காதிங்க, கிரி... எம்.பி.ஏ. படிச்ச ஆளுக்கு சரியா என்னை ஆபீஸர் ஆக்கறதுன்னா, வேசா?

— எம்.பி.ஏ. படிச்சா ஆச்சா? அனுபவம் வேணாமா? நீ வேலையில கெட்டிக்காரி... கம்பெனிலோட பிரச் னைகளை எதிர்பார்த்து, கச்சிதமா தீர்வுகாண்றதுல நீ எத்தனை தரம் அவங்களுக்கு உதவியிருக்கே? அந்த மூளை, திறமை இருக்கக்கொண்டுதானே போன வருஷம் உன்னை 'ஸ்பெஷல் அசிஸ்டெண்ட்டா' ப்ரமோட் பண்ணினாங்க!

— யப்பா... மனசுக்குள்ள இத்தனை பொண்டாட்டிப் பெருமையா இருக்கு?

— பின்னே? என் பொண்டாட்டி மாதிரி எவனுக்கு அமைவா? அழகா... 36—26—34— திறமையா...

— போதும், போதும்...

அவன் மார்பில் சாய்ந்து கண்களில் நீர் துளும்பும் அளவுக்கு சந்தோஷப்பட்டு சிரித்தது இப்போது ஞாபகத்துக்கு வர, துர்காவின் உதடுகள் அவளையும் மீறிக்கொண்டு விரிந்தன.

இன்று அடிவயிறறைக் கவக்கிக்கொண்டு லேசாக மிரளுவதற்கு அந்தப் பேச்சும், சிரிப்பும், எதிர்பார்ப்பும் கூடத்தானே காரணங்கள்!

இப்படி ஆசைப்பட்ட ஆபீஸர் பதவிஉயர்வு கிடைத்ததைத் தெரிவித்து எழுதிய கடிதத்திற்குக்கூட பதில் இல்லை என்றால்?

'கங்க்ராட்ஸ்' என்று தந்தி வரும் என்று எதிர் பார்த்தாள்.

ம்ஹூம், இல்லை.

'என் மனைவியின் கெட்டிக்காரத்தனம் யாருக்கு வரும், ஓவேரால்னானாம்!' என்று கொட்டிமுழக்கிக்கொண்டு கடிதம் வருமென்று எதிர்பார்த்தாள்.

மஹூம், இல்லை.

கொட்டி முழக்குவது இல்லாததோடு, வழக்கமாய் வரும் 'விரகதாப'க் கடிதமகூட இல்லையென்றால், கவலை தவிர வேறென்ன செய்யும்?

முதல் பத்து நாட்களுக்குக் குட்டியாக ஏமாற்றம் மட்டுமதானே ஒளிய வேறெந்த எண்ணமும் இல்லை.

பாவம் ஒழிந்திருக்காது.

எழுதியிருப்பார்— தபாலதுறை வேலைநிறுத்தம்.

இன்று வரும், நாளைக்குக் கட்டாயம் வரும்...

இப்படி...

ஆனால் இரண்டு வாரங்கள் முழுசாய் தாண்டின பிறகு, ஏன் வரவில்லை என்று நினைத்த மாத்திரத்தில் அடிவயிற்றில் பட்டாம்பூச்சிகளின் படபட...

அதுவும், நிமிஷத்துக்கு நாலாறு தரம் விசுவும் ஜக்குவும், 'ஏம்மா, அப்பாகிட்டயிருந்து லெட்டரே வரலை?' என்று தொணதொணப்பதில், சங்கடம் கூடித்தான் போயிவிட்டது.

பற்றாதகுறைக்கு அப்பா அம்மாவின் புருவத் தூக்கல்கள் வேறு.

— மாப்பிள்ளை கிட்டேயிருந்து கடிதாசு வந்து நாளாச்சு போலருக்கே, துர்கா?

— உடம்புக்கு ஒண்ணுமில்லாம இருக்கணுமேன்னு கவலையா இருக்கு, துர்கா...

— என்னம்மா இது, சின்னக்குழந்தையாட்டம்! சின்ன விஷயத்தப் போயி இப்படிப் பெரிசா கற்பனை பண்ணி பயப்படறே? ஒழிஞ்சிருக்காது... அதான்... வீணா கவலைப் படாதே...

ரொம்ப விவேகத்துடன் அம்மா அப்பாவுக்கு எதிரே பேசிவிட்டாலும், தாங்க முடியாமல், சாப்பாடு இறங்காமல் இவள் படும் அவஸ்தை இவளுக்குத்தான் தெரியும்!

இருபது நாட்கள்...

என்ன பண்ணுகிறார் இந்த மனுஷன், தாலு வரி எழுதமுடியாமல்!

அப்படியென்ன தலை போகிற வேலை?

சன்னமாகத் தலைதூக்கிய கோபம் வளருமுன், சற்று முன் தோன்றிய 'போஸ்டல் ஸ்டிரைக்' காரணம் மனசுக்குள் மின்னி அமுக்கிவிட, தன் பைத்தியக்காரத் தனத்தை எண்ணி துர்கா சிரித்துக்கொண்டாள்.

எதற்காக இப்படிக் குழம்புகிறேன்?

அதுதான் தபால்துறை வேலைநிறுத்தமாக இருக்கலாம் என்று தீர்மானித்தாயிற்று அல்லவா?

அரை நிமிஷம் அப்படியே உட்கார்ந்தாள.

தபாலாபீஸுக்கு போன் பண்ணிக் கேட்டால், இங்கிலாந்தில தபாலதுறை வேலைநிறுத்தமா இலலையா என்று தெரிந்துவிடாது?

மக்கு... வடிகுட்டில மக்கு! இதை ஏன் முன்பே யோசனை பண்ணவில்லை?

அவசரமாய் ரிஸீவரை எடுத்து ஆப்பரேட்டரிடம், மலுண்ட் ரோட் தபால் அலுவலகத்தில் வேலைபார்க்கும் சாந்தி என்கிற சினேகிதிக்குத் தொடர்பு கொடுக்கச் சொன்னாள்.

"சாந்தி ஸ்பீக்கிங்..."

"ஹலோ... நா துர்கா..."

"ஹல்லோ! எப்படியிருக்கே? நானே ரெண்டு நாளா உன்னோட பேசணும்னு நினைச்சிட்டிருந்தேன்..."

"கதை விடாதே..."

"இல்லே, நிஜம்மாதான்! ஆபீஸர் ஆயிட்டியாமே? ட்ரீட் இடையாதா?"

"அட! உனக்கு யார் சொன்னா?"

"நீ சொல்லாட்டா தெரியாதுன்னு நினைச்சியா?"

துர்கா சிரித்தாள்.

"சிரிச்சு மழுப்பாதே... ட்ரீட் எப்ப?"

"கிரி வந்தப்பறம்..."

"எப்ப வரார்னு ஏதாவது தெரிஞ்சிதா?"

"மஹூம்... ஆனா, ஏற்கனவே சொன்னபடி ஃபிப்ரவரிதானே வரணும்..."

"இன்னும் கொஞ்ச நாள்தானே! பரவாயில்லே, காத்திருக்கேன்..."

"சாந்தி, எனக்கு ஒரு விவரம் தெரியணும்... இங்லாண்ட்ல இப்ப போஸ்டல் ஸ்டிரைக்கா?"

"ஏன், கிரி கிட்டயிருந்து லெட்டர் வரலியா?"

"ம்... இருவது நாளாச்சு..."

"இதுக்கா கவலைப்படறே? லில்லி கால்! இரு கேட்டுச் சொல்றேன்..."

சில நொடிகள் மௌனித்து, மீண்டும் சாந்தி பேசினாள்.

"ஸ்டிரைக் இல்லே, துர்கா... சாதாரணமா லெட்டர்ஸ் வந்துட்டுதான் இருக்காம்..."

"ஓ!"

"லிஸன்... இருவது நாளா லெட்டர் வரலைனு கவலைப்படறது அசட்டுத்தனம்! சில சமயம் காரணமே இல்லாமகூட மூணு நாலு வாரம் ஆகலாம், தெரியுமா?"

"ம்ம்... தாங்க்ஸ சாந்தி... அப்பறமா பார்க்கலாம்..."

ரிஸீவரை வைத்துவிட்டு நிமிர்ந்தபோது, மறந்திருந்த தலிப்பு மீண்டும் ஏறி இருதயத்தில உட்கார்ந்துவிட்டதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

என்ன விஷயம்?

உட்கார்ந்து வேலைபண்ண முடியாது என்று தோன்ற, மானேஜரிடம் அரைநாள் லீவுக்கு அனுமதி வாங்கிக் கொண்டு கிளம்பினாள்.

ஆட்டோ பிடித்து, 'இன்றாவது கடிதம் வந்திருக்குமா' என்கிற ஆர்வத்துடன், அம்மா வீட்டுக்குப் போகாமல் நேராகத் தன வீட்டுக்குச் சென்று அவசரமாய் பூட்டைத் திறந்து உள்ளே நுழைய... இல்லை, அந்த நீலமும் சிவப்பும் பார்டர் போட்ட கடிதம் இன்றைக்கும் அவளுக்காகக் காத்திருக்கவில்லை.

என்னாயிற்று?

அம்மா சந்தேகப்படும்படி கிரிக்கு உடம்பு சரியில்லாமல் போயிருக்குமோ?

தன்னந்தனியாகக் கண்காணாத நாட்டில், ஜுரமும் தலைவலியுமாய் கிரி அவஸ்தைப்படுவதைக் கற்பனை பண்ணிப் பார்த்தபோது, கஷ்டமாக இருந்தது.

வெறும் ஜுரமாக இல்லாமல் வேறு ஏதாவதாக இருந்தால்?

வேறு ஏதாவது என்றால்?

அதனால்தான் ஒரு வரி எழுதுவதுகூட சாத்தியமில்லாமல் போயிருக்குமோ?

உடம்பு முழுக்க மாவுக்கட்டு போட்டுக்கொண்டு, முக்கி முனகியவாறு ஏதோவொரு ஆஸ்பத்திரியில் கிரி அனாதை மாதிரி படுத்திருப்பதை நினைத்துப்பார்த்தவள், உடம்பு உதறிப்போட எழுந்து நின்றாள்.

என்ன விஷயம் என்று தெரியாமல் தொடர்ந்து இந்தத் தவிப்பை அனுபவிப்பது சாத்தியமில்லை என்பது தெளிவாக, வீட்டைப் பூட்டிக்கொண்டு கைப்பையுடன் கிளம்பி, நேராகத் தபாலாபீஸுக்குச் சென்று, பணம் ஆனாலும் பரவாயில்லை என்று, 'ஏன் மூன்று வாரங்களாகக் கடிதம் இல்லை? உடம்பு சரியாக இருக்கிறீர்களா? கவலையாய் இருக்கிறது. பதில்தந்தி அடியுங்கள்' என்று விவரமாகத் தந்தி ஒன்றைக் கொடுத்த பிறகே, அவளுக்கு ஓரளவுக்கு சமாதானமாயிற்று.

(10)

'நான் சௌக்கியமாக இருக்கிறேன். ஊரில் இல்லாமலிருந்ததே கடிதம் போடாததற்குக் காரணம். விவரமான கடிதம் தொடர்கிறது — கிரி' என்று இரண்டாம் நான் மாலையில் தந்தி வர, சரியாக அதற்கும் ஐந்தாம் நாள் தபாலில் கடிதமும் வந்துசேர்ந்தது.

அப்பாடா... உடம்புக்கு ஒன்றுமில்லை. அந்த மட்டுக்கு நிம்மதி என்று தன்னை ஒருதினுசாய் ஆஸ்வாசப்படுத்திக் கொண்டு, நான்கு வாரம் கழித்து வரப்போகும் கடிதத்துக்காகக் காத்திருந்து, அன்று மாலை அலுவலகத்தி

விருந்து வீடுதிரும்பி, அவசரம்அவசரமாய் பூட்டைத் திறந்து, தரையில் கிடந்த வெளிநாட்டுக் கவரைக் கையில் எடுக்கும்போது, மனசுக்குள் குட்டியாய் ஏமாற்றம் படர்ந்தது.

வழக்கமாய் வரும் தடிமனான கடிதம் இல்லை.

ரொம்ப மெல்லிசாக, லேசாக இருந்த கவரைப் பிரித்ததும், ஏமாற்றம் இன்னும் கூடிப்போயிற்று.

ஒற்றைத்தாள்...

அதிலும் முக்கால்வாசி மட்டுமே எழுதப்பட்டிருந்த கடிதம்...

அவகாசமே இல்லாமல் எழுதின மாதிரி கோழிக்கிறுக்கலாய் ஒரு கையெழுத்து...

'அன்புள்ள துர்கா...

உன் தந்தி கிடைத்தது. வேலை மும்முரத்தில் சில நாட்களாகக் கடிதம் எழுத ஒழியாததை இத்தனை பெரிய பிரளயமாய் நீ தந்தி அடிப்பாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நான் என்ன சினேகத்துக்குத்தானா? யாரும் இல்லாத வனாந்தரத்திற்கா வந்திருக்கிறேன்? எதற்காக இத்தனை கவலைப்பட்டாய்? கடந்த மூன்று வாரங்களாய் நான் ஊரிலேயே இல்லை. மான்செஸ்டரில் இரண்டு நாட்கள் வேலை இருந்தது. பிறகு பாரீஸில் ஒரு வாரம். வந்து நிதானமாய் உனக்குக் கடிதம் எழுதலாம் எனதிருந்தேன். ஆனால் அதற்குள் உன் தந்தி வந்துவிட்டது. நீ கவலைப்பட்டது போதாதென்று வினாக்குழந்தையையும், உன் அம்மா அப்பாவையுமல்லவா கலக்கிவிட்டிருக்கிறாய் என்பதை அவர்களிடமிருந்து வந்த கடிதத்திலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது. நீ இப்படி நடந்து கொண்டது எனக்கு ஆச்சர்யமாக இருக்கிறது! அடுத்த வாரம் விவரமாக மறுபடி எழுதுகிறேன். குழந்தைகளுக்கு என் அன்பு.

உன் — கிரி.'

கடிதத்தை எழுதிமுடித்த பின் நினைத்துக்கொண்டு சேர்த்த மாதிரி, அடியில் இன்னும் நாலு வரிகள்.

'ரொம்ப நாட்களாக எதிர்பார்த்திருந்த பரமோஷன் ஒருவழியாய் உனக்குக் கிடைத்துவிட்டது குறித்து சந்தோஷிக்கிறேன். காங்ராட்ஸ் — கிரி.'

இரண்டு தரம் படித்த பின்னரும் மனசுள் ஒரு திருப்தி ஏற்படாதுபோனதோடு, பதவிஉயர்வு குறித்து ஒரு சந்தோஷமோ, இவள் பரபரத்துப்போனது குறித்து ஒரு அவஸ்தையோ இல்லாமல் ஏனோதானோ என்கிற ரீதியில் கடிதம் இருக்கிற மாதிரி தோன்ற — ஒருபக்கமாய் உட்கார்ந்து மூன்றாம் முறையாகக் கடிதத்தை அவன் படிக்க ஆரம்பித்ததும், அம்மாவே விவரம் சொல்லுவாள் என்று இதுநாழிகை பேசாதிருந்த விகடமும் ஜகுவும் அவள் கையைப் பற்றி உலுக்கினார்கள்.

"அப்பா என்ன எழுதியிருக்கார்மம்மா? உரக்கப் படியேன். எங்களை விசாரிச்சு எழுதியிருக்காரா? ஏன் இத்தனை நாளா லெட்டர் போடலியாம்? அம்மா..."

"ம்?"

"என்ன எழுதியிருக்கார்... சொல்லுங்கம்மா..."

வாய்க்கு வந்ததைச் சொல்லி துர்கா சமாளிக்கப் பார்த்தாள்.

"வந்து... வந்து... அடடா நல்லா இருக்காராம். திங்கட்-னால இல்லியாம், அதான் கடிதாசு போடலியாம்."

"வெளியூருக்குப் போயிருந்தாராம்மா?"

"ம்... பாரீஸுக்கு வேலையா போயிருந்தாராம்..."

"ஹய்! பாரீலா! அங்கதானே ஐஃபில் டவர் இருக்கும்மா? சுதீரோட அப்பா அது மேல ஏறிப் பார்த்தப்போ, ஊர் பூரா தெரிஞ்சுதாம்! நம்ம அப்பாவும் அப்படிப் பார்த்திருப்பார், இல்லே?"

"அ...? ஆமா, ஆமா..."

"அங்கேயிருந்து சுதீரோட அப்பா வீட்டுக்கு வந்தாப்பல அப்பாவும் சின்னதா ஒரு ஐஃபில் டவர் வாங்கிட்டு வருவார், இல்லே?"

"....."

"அப்பறம் வேற எங்க போனாராம்மா?"

"மான்செஸ்டர் போயிருந்தாராம்..."

"அது எங்க இருக்கு?"

விசு கடுகடுப்புடன் தம்பியை ஏறிட்டான். "சும்மா இர்றா... போர்! ரொம்பத் தெரிஞ்சாப்பல மேலமேல கேட்டுக்கிட்டு..."

அவனை அடக்கினவன், பெரியமனுஷி பாவனையுடன் அம்மா பக்கம் திரும்பினான்.

"நாங்க சமர்த்தா இருக்கோமான்னு கேட்டிருக்காராம்மா? நா பத்து நாள் முன்னால எழுதின லெட்டர் கிடைச்சிதாமா?"

"ம்..."

"என்னம்மா, சரியாவே ஒண்ணும் சொல்ல மாட்டேங்கறீங்க! எல்லாத்துக்கும் 'ம்' கொட்டினா?"

துர்கா சன்னமான எரிச்சலுடன் மகனைப் பார்த்தாள்.

"ராமாயணமாவா அப்பா கடிதாசு எழுதியிருக்கார்? நானும் உங்க கேள்விக்கெல்லாம் நீளநீளமா பதில் சொல்ல?"

வார்த்தைகள் சுருக்கென்று வந்து விழுந்தன.

என்றைக்கும் இல்லாத தினுசில் துர்கா இப்படிப் பேசியதும், மேற்கொண்டு என்ன கேட்பது என்று புரியாத மாதிரி விசு ஒரு நிமிஷம் திருதிருத்தான்.

அந்த விழிப்பும் அவஸ்தையும் மனசை தொட, துர்கா நொடிப்பொழுதில் தன்னை சுதாரித்துக்கொண்டாள்.

உள்ளுக்குள் பொங்கிய ஏமாற்றத்தை வழித்துப் போட்டாள். தலைதூக்கின எரிச்சலை மண்டையில் தட்டினாள்.

பையன்களைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"ஸாரி விசு... என்னமோ ஞாபகத்துல இருந்துது. நீ கேட்டதும் கோவம் வந்திடுச்சு... என்ன கேட்டே? அப்பா என்ன எழுதியிருக்கார்னுதானே? வந்து... ரெண்டு மூணு வாரமா அவர் ஊர்லயே இல்லியாம், ரொம்ப வேலையாம், அதான் நமக்கெல்லாம் லெட்டர் போட முடியலியாம்... உங்களையெல்லாம் காக்க வெச்சதுக்கு ரொம்ப ஸாரின்னு எழுதியிருக்கார்..."

விசு அம்மாவிடமிருந்த கடிதத்தை வாங்கிப் படிக்க முயன்று, கையெழுத்துப் புரியாமல் இருக்க, மீண்டும் அதை அவளிடமே நீட்டினான்.

"எப்ப வராரும்மா?"

அதுபற்றி ஒன்றும எழுதவில்லை என்று சொல்லவந்த துர்கா, குழந்தைகள் கண்களில் வெளிச்சம் போட்ட ஆர்வத்தை உணரமுடிய, கொஞ்சம் தயங்கினாள்.

"அ- அது வந்து- இன்னும் தெளிவாத் தெரியலியாம்... அடுத்த லெட்டர்ல சொல்றேன்னு எழுதியிருக்காருப்பா-"

ரொம்பத் தீவிரமாக அம்மா சொல்வதைக் கேட்ட விக, "கண்டிப்பா ஃபிப்ரவரிமேல வந்துடுவேன்னு சொல்லிட்டுத்தானேம்மா போனார்? ஃபிப்ரவரிக்குப் பத்து நாள் கூட இல்லியே, இன்னுமா புறப்படற நாள் நிர்மானமாகலை?" என்று விடாமல் வினவ, துர்கா அவள் பார்வையை சந்திக்கத் திராணி இல்லாமல் விழிகளைத் தழைத்தாள். பின், பேச்சை மாற்றினாள்.

"லஸ்ஸுல எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு... அதை முடிச்சிட்டு வர்ற வழியில ஆவின் மில்க் பார்ல ஐஸ்க்ரீம் சாப்பிடறதர பளான்... என்கூட யார்யார் வரப்போறீங்க?"

மூவருமாய்க் கிளம்பி, லஸ்ஸுக்குச் சென்றுவிட்டு, திட்டமிட்டபடி ஆவின் ஐஸ்க்ரீம் சாப்பிட்டார்கள்.

வீட்டுக்கு வந்து பையன்கள் செய்யவேண்டிய ஹோம்வர்க்கை முடித்து, அவர்களுக்கு சாப்பாடு போட்டு, ஜொடஜொடவென்று பாரீஸ் பற்றியும், கிரி பற்றியும் என்னென்னவோ கேள்விகள் கேட்ட தற்கு முகம் சுளிக்காமல் பதிலளித்து, ஒருவழியாய் தூங்கவைத்த பின்னர், கணவனின் கடிதத்துடன் மீண்டும் கூடத்தில் வந்து உட்கார்ந்துகொண்டாள்.

— வேலை மும்முரத்தில் சில நாட்களாகக் கடிதம் எழுத முடியாததை இத்தனை பெரிசுபண்ணி தந்தி அடிப்பாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை...

— நீ இப்படி நடந்துகொண்டது எனக்கு ஆச்சர்யமாக இருக்கிறது!

திரும்பத்திரும்ப கடிதத்தைப் படித்தபோது, மாலையில் தோன்றின மாதிரி ஏமாற்றம் உள்ளுக்குள் பூக்காமல், 'கிரி எழுதியிருப்பது சரிதானோ, நான்தான் ஒன்றுமில்லாததற்கு தலாட்டா பண்ணிவிட்டேனோ?' என்கிற சந்தேகம் எழுந்தது.

வெளிநாட்டுக்குப் பயிற்சிக்காகப் போயிருப்பது விளையாடும் சமாச்சாரமா என்ன?

ஆறுமாச காலத்துக்குள் எக்கச்சக்கமாய உழைத்தால் தானே ஒருவிதத் தனிச்சிறப்புடன் பயிற்சியை முடித்துக் கொண்டு தாய்நாடு திரும்ப முடியும்!

அப்படி வந்தால்தானே, அனுப்பின கம்பெனிக்குப் பெருமை!

எனர் சுற்றிப்பார்க்கவா கிரி அங்கு போயிருக்கிறார் — தினமும் பொழுதோடு அறைக்கு வந்து பக்கம்பக்கமாய் 'உங்களைப் பிரிந்திருப்பது எனக்கு நரகவேதனையாய இருக்கிறது' என்று புலம்பி எழுத!

மான்செஸ்டர், பாரீஸ் என்று ராப்பகலாய் அலைந்து கொண்டிருந்தபோது, ஏற்கனவே அவருக்குள் 'என்ன இப்படிக் கடிதம் எழுதக்கூட முடியாமல் அல்லாடிக் கொண்டிருக்கிறோம்!' என்கிற அவஸ்தை நிறையவே இருந்திருக்கும்... கூடவே, இங்கிருந்து நாங்களெல்லாம் 'என கடிதமே எழுதவில்லை? உடம்பு சரியில்லையா?' என்ற கலவரத்தோடு எழுதி அதை மனதிலிட்டது போதாது என்று தந்தி வேறு அடித்து...

சீச்சே! ஏன் நான் அத்தனை பதட்டப்பட்டுவிட்டேன்? இன்னும் கொஞ்சம் நிதானித்திருக்க வேண்டுமோ?

'ஸாரி துர்கா, மூன்று வாரமாய் ஊரில் இல்லாததால் நிம்மதியாய் உட்கார்ந்து உனக்குக் கடிதம் எழுதக்கூட ஒழியவில்லை...' என்று கிரி எழுதியதும், 'அதனாலென்ன, கிரி.. நீங்கள் பிஸியாக இருக்கிறீர்கள் என்பதைக்கூடவா என்னால் புரிந்துகொள்ள முடியாது? ப்ளீஸ் ரிலாக்ஸ்!' என்று நான் பதில் போட்டிருந்தால், அது சமர்த்துக் காரியம்...

அதை விட்டுவிட்டு...

என்ன இது குழந்தைத்தனமாய், வேண்டாதவற்றைக் கற்பனைபண்ணிக்கொண்டு, நானும் அவஸ்தைப்பட்டு, அவர் குற்றஉணர்வையும் அதிகமாக்கி...

சீச்சே! ஏன் இத்தனை வடிகட்டின முட்டாளாக நடந்துகொண்டுவிட்டேன்?

யோசிக்கயோசிக்க, 'பாவம் கிரி' என்கிற எண்ணமும், அனாவசியமாய் ஒன்றுமேயில்லாததைப் பெரிசுபண்ணி நான்கு பேர் சவனத்துக்குக் கொண்டுவரும்படி செய்து விட்டோம் என்கிற தவிப்பும் அதிகமாக, அப்போதே உட்கார்ந்து தன் தவறுக்கு உருகுகிற தினுசில் நீளமாக ஒரு கடிதம் எழுதினாள்.

'நீங்கள சொல்வது ரொம்ப சரி... நான் ரொம்பவும் தான அசட்டுத்தனமாக நடந்துகொண்டுவிட்டேன் என் அகோரகுடுக்கைத்தனத்தை நினைத்தால் எனக்கே வெட்கமாக இருக்கிறது. ஏன் அப்படி நடந்துகொண்டேன் என்று புரிஞ்சிடலாம். இனிமேல் நிச்சயமாய் இன்னொரு தரம் இப்படிப ஸைத்தியக்காரத்தனமாய் நடந்துகொள்ள மாட்டேன்

என்று மட்டும் நிர்மானமாய் புரிகிறது. ஐம் ஸாரி, கிரி. அவசரப்பட்டு உங்களைப புரிந்துகொளளாமல புண்படுத்தியதற்கு ஐம் ஸாரி அகெய்ன் அண்ட் அகெய்ன்.'

மனசில் இருப்பதைக் கொட்டிவிட்டு, தெளிவான மனசுடன் படுக்கச்சென்ற துர்கா, அடுத்துவந்த வாரங்களில் பழையபடி கிரிதரிடமிருந்து கடிதம் வாராவாரம் வராத போது அதனால் பாதிக்கப்படாததோடு, குழந்தைகளும் பெற்றவர்களும 'என்னம்மா இப்படி?' என்று கண்கள் அகல கேட்டபோதெல்லாம், 'அவருக்கு அங்க என்ன வேலைப் பளுவோ! விடுமுறைக்கா போயிருக்கார், வேலைவெட்டி இல்லாம தினமும் லெட்டர் எழுத?' என்று பரிந்து பேசி, அவர்கள் மேலே ஏதும் பேசவிடாதபடியே செய்தாள்.

ஆனால், ஃபிப்ரவரி மாத நடுவில், 'இன்னும் பத்து நாட்களில் வந்துவிடுவேன்' என்கிற சேதி வரும் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்த சமயத்தில், 'பயிற்சி நீடிக்கப பட்டுவிட்டது. இன்னும் மூன்று மாசங்கள் ஆகலாம் நான ஊர்திரும்ப' என்ற விவரத்தோடு கடிதம் ஒன்று வர, 'என்னம்மா இது?' என்று விசும்ப முற்பட்ட பிள்ளை களையும், ஏமாற்றத்தில் கும்பிப்போனத் தன் மனசையும தேற்றுவதற்குள் அவள் ரொம்பவும்தான் தினறிப்போனாள

(11)

"அம்மா..."

"....."

"அ...ம்...மா..."

அடுப்படியில் வேலையாய இருந்த துர்கா திரும்பினாள். வலதுகையை உயர்த்தி, நெற்றியில் துளிர்த்த வியர்வைத்துளிகளை ரவிக்கையில் துடைத்தாள்.

"என்ன விசு?"

ஏதோ பேச விரும்புபவன் தயங்குவது புரிய, "என்னப்பா?" என்றாள் மீண்டும்.

விசுவின் கண்களில் எக்கச்சக்க யோசனை புதுவகைகளில் சன்னமாய முடிச்சு.

"உங்ககிட்ட ஒண்ணு கேக்கணும்..."

"கேளேன்..."

"அப்பா ஊருக்குப் புறப்படறப்போ என்ன சொல்லிட்டுப் போனார்?"

எது சம்பந்தமாகப் பேசவருகிறான் என்று புரியாததால், துர்கா பதிலுக்கு, "என்ன சொல்லிட்டுப் போனார்?" என்றாள்.

"ஃபிப்ரவரியில கண்டிப்பா வந்துடறேன்னுதானே?"

துர்கா அடுப்பிலிருந்த பாலைக் கிளறும் சாக்கில் திரும்பி நின்றுகொண்டாள்.

திரும்பவும் இந்தப் பேச்சை எடுத்துவிட்டானா!

ஃபிப்ரவரியில் வருவதாகச் சொன்னவர், ஏன் வரவில்லை என்று விடாமல் நூறு தரம் கேட்டு, ஒருதினுசாய் அதற்குக் காரணத்தை விளக்கி, ஏறுக்கொளவைத்தாகிவிட்டது என்று இருக்கையில், மீண்டும் இந்த கேள்வியா?

"சொல்லுங்கம்மா..."

தர்மசங்கடமான நிலை உருவாகுமுன் அதைத் தவிர்க்கவேண்டி, துர்கா வேண்டுமென்றே அதட்டலாய் பேசினாள்.

"இதைக் கேக்கறதை நீயும் ஆயிரம் தடவை கேட்டாச்சு, நானும் பதில் சொல்லியாச்சு! திரும்பத்திரும்ப புரிஞ்சுக்காம, சின்னக்குழந்தையா கேட்டதையே கேட்டா எனக்குக் கோவம் வரும், விசு..."

"இல்லேம்மா... வரேன்னு சொல்லிட்டு..."

அவன் முடிக்கும் முன் துர்கா குறுக்கிட்டாள்.

"வரேன்னு சொன்னார் என்ன? வாழ்நாள் முழுக்க நினைச்சு அப்படிச் சொன்னாரா... அங்க போனபிறகுதானே வேலைப் பளு அதிகமாகி, இன்னும் சில மாசங்கள் இருக்கணும்னது புரிஞ்சுது? நிலைமையை விளக்கியும் நீ கேட்டதையே கேட்டுகிட்டுத் தொணதொணத்தா எப்படி, விசு? நீ என்ன குழந்தையா? ஜகதகூடப் பரவாயில்ல, ஒருதரம் சொன்னதும் ஒப்புக்கிட்டான்..."

கொதித்துவிட்ட பாலை இறக்கி வைத்துவிட்டு துர்கா பிரஷர் குக்கரில் தண்ணீர் ஊற்றி அடுப்பில் ஏற்றினாள்.

ஒரு டம்ளர் அரிசி எடுத்து, களைந்து, கல் இலையில் அரிந்து பாத்திரத்தில் போட்டு, நீர் ஊற்றி, குக்கரை மூடி, பின்னரும் விசு அங்கேயே நிற்பது புரிய, ஈரக்கையைத் துடைத்துக்கொண்டு அவனருகில் வந்தாள்.

நிலைமுடியை விரலகளால் கோதிவிட்டாள். பின், கழுத்தில் கையைக் கொடுத்து தனமோடு சேர்த்து அணைத்துக்கொண்டாள்.

என்னவோ வருத்தத்தை நெஞ்சு நிறைய நிரப்பிக் கொண்டு மகன் நிற்கிற மாதிரி தோன்ற, "என்ன விசு?" என்றாள் தணிந்த குரலில்.

"ஒண்ணுமில்லே..."

"ஸ்கூல்ல ஃப்ரெண்ட்ஸோட ஏதாவது சண்டையா? டீச்சர் திட்டினாங்களா?"

"ம்ஹூம்..."

"வயத்த வலிக்குதா? ஏன் எப்படியோ இருக்கே?"

"ஒண்ணுமில்லே..."

"வாசலுக்குப் போய் ஜக்குவோட விளையாடறது தானே? எங்க அவன்?"

"அவன் பக்கத்து வீட்டுல கிரிக்கெட் விளையாடிட்டிருக்கான்..."

"நீ அவங்களோட விளையாடலியா?"

"ம்ஹூம்..."

"ஏம்ப்பா?"

சட்டென்று விசு அம்மாவின் இடுப்பில் முகத்தைப் பதித்துக்கொண்டான்.

"என்ன விசு?"

"நீங்க திட்டுவீங்க..."

"இல்லே, திட்டல... என்ன விஷயம், சொல்லு..."

"வந்து... அப்பா..."

"அப்பா...?"

"அப்பா எதுக்காகவாவது ப்ராமிஸ் பண்ணினானா அதைக் கண்டிப்பா செய்வார், இல்லே?"

"கண்டிப்பா! இதுல என்ன விசு, டௌட்டு சந்தேகம்?"

"இல்லம்மா... ஜக்கு ஒரு வாரமா என்னை ரொம்ப கேலி பண்றாம்மா..."

"ஜக்குவா? கேலியா? எதுக்கு?"

"அப்பா என் பர்த்டேக்கு ப்ராமிஸா வந்துடுவேன்னு சொல்லிட்டுப் போனார், இல்லியாம்மா? அதனால, அவர் கட்டாயம் அடுத்த வாரத்துக்குள்ள வந்துடுவார்னு நா சொன்னா, அவன், 'சத்தியமா வரேன்னு அப்பா சொல்லலை... மனசுக்குள்ள 'அ' சொல்லிட்டு அ—சத்தியமா வரேன்னுதான் சொன்னார்'னு சாதிக்கறாம்மா..."

"....."

விசு அம்மாவை அணைத்திருந்த பிடியை இறுக்கினான்.

"தன் பிறந்தநாள் சமயத்துல அப்பா இங்க இல்லேன்றதால, என் பர்த்டேக்கும் வராட்டி அவனுக்கு சந்தோஷம்தான்... ஆனா, அப்பா ப்ராமிஸ் பண்ணா நேம்மா! அப்பா ஒண்ணு சொன்னா கண்டிப்பா செஞ்சிடுவார்னு நீங்கதானே சொல்வீங்க? என் ஃப்ரெண்ட்ஸ் கிட்ட எல்லாம் ரொம்பப் பெருமையா அப்பா வாங்கிட்டு வரப்போற புது டிரஸ்ஸ போட்டுகிட்டு, ராக்கெட் விட்டுக் காமிக்கணும்னு ஆசைப்பட்டுகிட்டிருந்தேன்... இப்ப... ஆனாலும் இந்த அப்பா ரொம்ப மோசம்... ப்ராமிஸ் பண்ணிட்டு..."

துக்கத்தில் செம்மின குரலை சரிபண்ணிக்கொள்ள அவன் பிரயத்தனப்பட, இப்போது என்ன சொல்லவேண்டுமென்று புரியாத துர்கா அரைநிமிஷம் விழித்தாள்.

வருத்தப்படும் பிள்ளையைத் தேற்றுவது முக்கியமா, இல்லை, சொன்ன வார்த்தையைக் காப்பாற்றவில்லை என்கிற ஏமாற்றத்தின் காரணமாய் அப்பாவின் மேல் குட்டியாய் கசப்புணர்வு தோன்றியிருப்பதை அழிப்பது முக்கியமா?

மேற்கொண்டு அரை நிமிஷம் போவதற்குள் தான் செய்யவேண்டியது என்ன என்று புரிந்த மாதிரி, துர்கா மண்டியிட்டுக்கொண்டாள்.

விசுவின் முகத்தைக் கைகளில் ஏந்தியவாறு பேசினாள்.

"ஐம் ஸாரி, விசு... என் ஞாபகமறதியால அப்பாவுக்குக் கெட்ட பேர் வாங்கிவெச்சிட்டேன்... ரெண்டு வாரம் முன்னாலியே அப்பா உன் பர்த்டேக்குத் தான் வர முடியாதது பத்தி ரொம்ப வருத்தப்பட்டு லெட்டர் எழுதியிருந்தார். 'விசுகிட்ட சொல்லு, வரேன்னு ப்ராமிஸ் பண்ணிட்டு இப்ப நா வராதது அவனுக்கு ஏமாத்தமா இருக்கும். இங்க வேலை இப்படியப்படி நகரமுடியாம இருக்கறதுல, சொன்ன வார்த்தைய என்னால காப்பாத்த முடியல... ஐம் ரியலி ஸாரி'ன்னு எழுதியிருந்தார், விசு..."

சடக்கென்று முகந்தை நிமிர்த்தினவன், கண்கள் அகல அவளை ஏறிட்டான்.

"நிஜம்மாவாம்மா?"

"நிஜம்மா..."

"அப்பா எனக்கு ஸாரி சொல்லச்சொல்லி எழுதியிருந்தாரா?"

"ம்..."

ஓடிப் தள்ளி நின்றுகொண்ட விசு முகத்தைச் சுளித்தான்.

"போங்கம்மா... நீங்க ஆனாலும் சத்த மோசம்! பாவம் அப்பா... அத்தனை வேலை நடுவுலயும் வருத்தப்பட்டு லெட்டர் எழுதியிருக்கறதைச் சொல்ல மறந்திட்டீங்களே? வீணா அவர் மேல நா கோபகிட்டிருந்தேன்! வேலை இருந்தா எப்படி வர முடியும்? பர்த்டே முக்கியமா, இல்லே வேலை முக்கியமா? என்னடா, நமம அப்பாவாவது சொன்ன வார்த்தைய மீர்றதாவதுனனு நா அப்பவே நினைச்சேன்... தப்பு உங்க பேர்லதான்! போங்கம்மா, நீங்கதான் என்னை ஏமாத்திட்டீங்க! உங்க மேல எனக்குக் கோவம்... போங்க..."

பெரியமனுஷன் மாதிரி பேசினவனை, சட்டென்று சின்னக்குழந்தையின் குணம் ஆக்ரமித்து கலடசிவரிகளை முணுமுணுக்கச் செய்ய, முகத்தைத் தரக்கென்று திருப்பிக்கொண்டு வேகமாக அறையை விட்டு வெளியில் நடந்தான்.

அன்றும் சரி, அதற்கு அடுத்துவந்த நாட்களும் சரி, என்னவோ வானமே இடிந்து தலையில் விழுந்துவிட்ட இலுசில முகத்தை ஒன்றரை முழத்துக்கு நீட்டிவைத்துக் கொண்டு தூகாவுடன் வலியப் பேசாமல், அவள் கேட்ட கேள்விகளுக்கு மட்டும் 'சரி', 'இல்லை' என்ற ஒன்றை வார்த்தையில பதிலைக் கூறி, கோபத்தை அவன் வெளிப்படுத்தவே செய்தான்.

பிள்ளை தன்னிடம் இப்படிப் பாராமுகமாக நடந்து கொள்வது வேதனையைத் தந்தாலும், நல்லவேளையாக அப்பா மீது கசப்பு இல்லாமலிருப்பது லேசாக சமாதானம்

செய்ய, என்ன செய்து இவன் கோபத்தைத் தணிய வைக்கலாம் என்று யோசித்து துர்கா காரியத்தில் இறங்கினாள்.

முதலில், கிரிதர் என்ன வேண்டுமானாலும் நினைக் கட்டும் என்று துணிந்து, நிலைமையை விளக்கி 'நீங்கள் வரவில்லை என்கிற ஏக்கத்தை எப்படியோ சமாளித்து விட்டேன். ஆனால், மறக்காமல் அவன் பிறந்தநாளுக்கு வாழ்த்து அனுப்புங்கள்' என்று தந்தி அடித்தாள்.

அடுத்து, கிராமத்திலிருந்த அப்பாவைப் பெற்ற பாட்டி மேல் விசுவுக்கு அளவு கடந்த அன்பு என்பதால், 'உங்கள் பிள்ளை ஊரில் இல்லாததை உங்கள் வரவு நிச்சயம் ஈடுகட்டும். அவசியம் பேரனின் பிறந்தநாளுக்கு இங்கு வந்துவிட்டு, பத்து நாட்களாவது கூட இருந்துவிட்டுச் செல்லுங்கள்' என்று அழைப்பு விடுத்தாள்.

கடைசியாக, தடபுடலாய் பிறந்தநாளைக் கொண்டாடுவது பிள்ளைக்கு அளவு கடந்த சந்தோஷத்தைத் தரும் என்பதைப் புரிந்துகொண்டவளாய், சின்னவனுக்குக் கோபம் வந்தாலும் பரவாயில்லை என்று வழக்கத்தை விடச் சிறப்பாகத் திட்டம் தீட்டினாள்.

விசுவின் நண்பர்களுக்குப் பரிசாகக் கொடுப்பதற்கென விளையாட்டு சுல்லாக்கள், முகமூடிகள், பலூன்கள், உதடுகளை மூடிமார்க்கெட்டுக்குச் சென்று வாங்கினாள்.

அவன் ஆசைப்பட்ட ஐஸ்க்ரீமுக்கு ஆர்டர் கொடுத்தாள்.

பாண்டி பஜாரில் செப்பிடுவித்தை காட்டிக் கொண்டிருந்த வித்தைக்காரனுக்கு அவன் கேட்ட

பணத்தைக் கொடுக்க ஒப்புக்கொண்டு, வீட்டுக்கு வந்து பையன்களுக்குத் தவிப்பட்ட வித்தில் அன்று வித்தைகளைக் காட்ட ஏற்பாடு பண்ணினாள்.

மொத்தத்தில் துர்கா போட்ட கணக்கு, கிரிதரிட நிருந்து வாழ்த்து வராததைத் தவிர, பாக்கி எல்லாவற்றிலும் துளி தப்பவில்லைதான்.

ஊரிலிருந்து சொல்லாமல் கொள்ளாமல் இவ பண்டங்கள், புதுத் துணிகளுடன் வந்து இறங்கின பாட்டியைக் கண்டதும் விசு தலைகால் புரியாமல் குதித்தான் என்றால்,

அம்மா தன் சினேகிதர்களுக்காகச் செயதிருந்த ஏற்பாட்டைப் பார்த்த குஷியில் அசந்துதான் போனான்.

தன் மேல் உண்டாகியிருந்த கோபம் எங்கோ ஒடி ஒளிந்துகொள்ள, வாய் கொள்ளாத சிரிப்பு, துளாலுடன் பழையபடி அவன் வளையவரத் துவங்க...

துர்கா அப்பாடி என்று பெருமூச்சு விட்டாள்.

ஒருவழியாய் பிள்ளையை சமாதானம் செயதாகி விட்டது... இனி அப்பா மேலும் அலனுக்குக் கசப்பு இல்லை, என்னிடமும் கோபம் இல்லை என்ற நிம்மதியை முழுசாய் அனுபவிப்பதற்குள் கேள்வி ஒன்று நமுவென்று நெஞ்சைப் பிறாண்டியது.

ஆமாம்... இந்த கிரிக்கு வாஸ்தவத்திலேயே என்னதான் ஆகிவிட்டது?

கிணற்றில் போட்ட கல்லாக இப்படி சமமென்று இருக்குமனவிற்கு அங்கு என்ன அத்தனை தலைபோகிற வேலை!

ஏதடா, பிளைபிடம் சத்தியம் பண்ணியிருக்கிறோமே, காப்பாற்றாவிட்டாலும், 'ஸாரிப்பா..." என்ற ஒரு வார்த்தை எழுதுவோம் என்கிற பிரக்ஞைகூட இல்லாமல்...

தந்தி கிடைக்கவில்லையா?

என்ன ஆயிற்று கிரிக்கு?

அடிவயிற்றில் துவங்கி, இருதயம் பூராவும் ஹா-ஹா-வென்று காரணம் புரியாமல் பறக்கமுற்பட்டதை அதிகமாக்குகிற மாதிரி, அந்த வெள்ளிக்கிழமை கிரிதரின் எம்.டி. வீட்டிலிருந்து தூர்காவுக்கு போன் வந்தது.

(12)

அன்றைக்கே பம்பாய்க்கு அனுப்பவேண்டிய முக்கியமான கடிதத்தை ஸ்டெனோவுக்கு சொல்லிக் கொண்டிருந்த நிமிஷத்தில் தொலைபேசி கிலுகிலுத்தது.

"எம்.எம். எலக்ட்ரானிக்ஸ்லேந்து கூப்பிடறாங்க, மேடம்..."

சட்டென்று தூர்காவினுள் நீரூற்று ஒன்று பீறிட்டுக் கொண்டு கிளம்பியது.

கிரியின் கம்பெனியிலிருந்து கூப்பிடுகிறார்கள்...

'மிஸ்டர் கிரிதர் வர்ற புதன்கிழமை புறப்படறாராம்... டெலக்ஸ் மெஸேஜ் வந்திருக்கு' என்று சொல்லப் போகிறார்களோ!

ஒருகண காலத்திற்குள் சற்றுமுன் கரைபுரண்டு பிரவாகமெடுத்ததுவிட, தூர்காவுடன் பேசினாள்.

"மிஸஸ் கிரிதர் ஹியர்..."

"குட்மார்னிங் மேடம்... எப்படி இருக்கீங்க? எம்.டி. உங்ககிட்டப் பேசணும்னு சொன்னார்... கனெக்ஷன் குடுக்கவா?"

அந்தப்பக்கம் பேசின ரிசப்ஷனிஸ்ட் தொடர்பு கொடுக்க எடுத்துக்கொண்ட அவகாசத்தில் எண்ணங்கள் மறுபடி தலைதெறிக்க ஓடின.

கிரிதரின் எம்.டி. பேச விரும்புகிறார்!

அப்படியென்றால் என்ன விஷயமாக இருக்கும்!

ஒன்பதுமாச காலமாகப் பிரிந்திருக்கிறானே, பாவம், நல்ல சேதியைத் தானே சொல்லி இவளை சந்தோஷிக்க வைப்போம் என்று செயல்படுகிறாரோ?

இல்லை, 'ஸாரி, மிஸஸ் கிரிதர்... பயிற்சி இன்னும் இரண்டு மாசங்களுக்கு நீடிக்கப்போகிறது. நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். எல்லாம் கிரிதரின் நன்மைக்காகத் தான்' என்று நாசூக்காகச் சொல்வாரோ?

அதுவும் இல்லையென்றால்...

எம்.டி.யின் கனத்த குரலோ' இந்தளவையத் தாண்ட செய்ய, தூர்கா கவனத்தை நிலைப்படுத்திக்கொண்டாள்.

"குட்மார்னிங் சார்..."

"குட்மார்னிங் மிஸஸ் கிரிதர்... ரொம்ப நாளாவே உங்ககிட்ட பேசணுமணு நினைச்சிகிட்டுதான் இருக்கேன். ஆனா, அடிக்கடி வெளியூர் போயிட்டதுல முடியல. எப்படி இருக்கீங்க? பசங்க நல்லா இருக்காங்களா?"

"ஃபைன்... தேங்க்யூ சார்..."

இதற்கு மேல் என்ன பேசுவது என்று புரியாத நிலையில் கொஞ்சம் தயங்கிவிட்டு, தொண்டையைச் செருமிக் கொண்டு எம்.டி. "வந்து..." என்று தொடங்கி நிறுத்த, துர்கா, "சார்?" என்றாள்.

"வந்து... கிரிதர் கிட்டேயிருந்து அடிக்கடி லெட்டர் வருதா?"

"வருது, சார்..."

"ம்ம்... இன்னிக்கு சாயங்காலம் ஃப்ரீயா இருப்பீங்களா? உங்கிட்ட கொஞ்சம் பேசணும்... ஆபீஸ் பக்கம் வந்துட்டுப் போக முடியுமா?"

துர்கா எதுவும் புரியாமல் திகைத்தாள்.

கிரியின் அலுவலகத்துக்கா? நானா? எதற்கு?

"என்ன விஷயம், சார்?"

"போன்ல வேணாம், மிஸஸ் கிரிதர்... உங்களுக்குக் கஷ்டம்னா நா உங்க வீட்டுக்கு வரேனே?"

"ஓ... நோ! எனக்கு எந்தச் சிரமமும் இல்லே... எத்தனை மணிக்கு வரட்டும்?"

"ஸே, பை ஃபைவ் ஓ க்ளாக்..."

"கண்டிப்பா வரேன், சார்..."

நீலவேரைக் கீழே வைத்தவளுக்குக் காரணம் புரியாமல் படபடத்தது.

எம்.டி. எதற்காக என்னை அழைக்கிறார்?

இத்தனை வருஷங்களில் தேவைக்கு அதிகமாக ஒரு தரம், ஒரு தரம்கூட என்னிடம் பேசியவர் இல்லையே!

பார்ட்டி., இங்கே, அங்கே சந்தித்தாலும், ஒரு குட்டிப் புன்னகை, தலையசைப்பு, 'செளக்கியமா?', அதானே...

அப்புறம்?

எதற்காக அலுவலகத்துக்குக் கூப்பிடுகிறார்?

— உங்கிட்ட கொஞ்சம் பேசணும்... ஆபீஸ் பக்கம் வந்துட்டுப்போக முடியுமா?

— உங்கிட்ட கொஞ்சம் பேசணும்...

என்ன பேச விரும்புகிறார்?

அவருக்கும் எனக்கும் இடையில் பேச என்ன இருக்கிறது?

இருக்கும் ஒரே பொது சமாச்சாரம் கிரி...

அவரைப் பற்றியா?

அப்படியானால் என்ன?

எ...ன்...ன...?

"மேடம்..."

எதிரில் அமர்ந்து அவளுடைய முகபாவனைகளைப் பார்த்துக்கொண்டிருந்த ஸ்டெனோ மெதுவாக அழைக்க, துர்கா ஒருவித உதறலுடன் நிமிர்ந்தான்.

"டிக்டேஷனை முடிச்சிடலாமா, இல்லே, அப்பறமா வெச்சிக்கலாமா, மேடம்?"

கண்களைச் சிமிட்டி, எச்சிலை விழுங்கி தூர்கா தன்னை ஆஸ்வாசப்படுத்திக்கொண்டாள்.

கிரிதர், அவனுடைய எம்.டி. பற்றின நினைப்பை வலுக்கட்டாயமாக ஒதுக்கிவிட்டு, கலைந்திருந்த சிந்தனை களை ஒழுங்குபடுத்திக்கொண்டான்.

"இப்பவே முடிச்சிடலாம்... கடைசியா என்ன சொன்னேன், படிங்க..."

பதினைந்து நிமிஷங்கள் அதையும், இன்னும் இரண்டு கடிதங்களையும் சொல்லி, ஸ்டெனோவை அனுப்பியவள், நாற்காலியில் சரிந்து கண்களை மூடிக்கொண்டதும், விரட்டவிரட்ட காலடியில் சுற்றும் நாய்க்குட்டியாக சற்று முன் எம்.டியுடன் பேசிய பேச்சுக்கள் மீண்டும் மனசுள் எட்டிப்பார்த்தன.

நான்கரை மணிக்கு மானேஜரிடம் சொல்லிவிட்டு வெளியில் வந்து ஆட்டோ பிடித்து அண்ணா சாலையி லிருந்த எம்.எம். எலக்ட்ரானிக்ஸ் அலுவலகத்துள் அவள் நுழைந்தபோது கடிகாரம் சரியாக நான்கு ஐம்பத்தியைந்து என்றது.

காக்கவைக்கப்படாமல் உடனே அவள் எம்.டி. அறைக்கு அழைத்துச்செல்லப்பட்டாள்.

"உக்காருங்க மிஸஸ் கிரிதர்... ஒரு நிமிஷம்..."

ஃபைலில் கையெழுத்துப் போட்டுக்கொண்டிருந்தவர் வரவேற்க, ஒருபக்கமாய் போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்தாள்.

அறை மிகுந்த ரசனையுடன் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மரம் இழைக்கப்பட்ட சுவர்கள், பழுப்புநிற ஃபர்னிச்சர்களுடன் ஒன்றிப்போன மெரூன் கம்பளம், பெரிசாய் ஒரு கம்ப்யூட்டரின் படம், எலக்ட்ரானிக்ஸ் சம்பந்தப்பட்ட புத்தகங்கள், ஏஸியின் இதமான குளிர்ச்சி.

"என்ன சாப்பிடறீங்க? காபி ஆர் டீ?"

கேட்டவர் இவள் பதிலுக்குக் காத்திராமல் இண்டர்காமில், "ப்ளீஸ் சென்ட் சம் பிஸ்கெட்ஸ் அண்ட் டீ" என்று கூறிவிட்டு, எதிரில் வந்து அமர்ந்துகொண்டார்.

தேநீர் வரும்வரை குழந்தைகள், அவள் பெற்றோர், அவள் வேலை பற்றி ஏதேதோ பேசிக்கொண்டிருந்தாலும், எம்.டியை ஒருவித இருப்புக்கொள்ளாமை ஆக்ரமித்திருப்பது வெளிப்படையாகத் தெரிய, தூர்காவின் அடிவயிற்றில் மெதுமெதுவாய் சங்கடம் படர்ந்தது.

என்ன சொல்லப்போகிறார்?

நிச்சயமாய் நல்ல சேதியாகத் தோன்றவில்லை.

பிறகு?

காலிக் கோப்பையைக் கீழே வைத்ததும், இனியும் தாளமுடியாது என்று தோன்ற, "என்ன விஷயம், சார்?" என்றாள் மெல்ல.

எம்.டி. கைவிரல்களைக் கோர்த்துப் பிரித்தார்.

அவளை தீர்க்கமாகப் பார்த்துவிட்டு, நிதானமாகப் பேசினார்.

"உங்களை இங்க வரவழைச்சு, இப்படிப் பேசறதுக்காக நீங்க என்னை மன்னிக்கணும், மிஸஸ் கிரிதர். ஆனா, உங்க நலனுக்காகத்தான் நா இதைச் செய்யறேன்னு நீங்க நம்பணும்..."

பீடிகை பலமாக இருக்க, முதுகுத்தண்டில் துளிர்த்த வியர்வை, நீளமாகக் கோடுபோட்டுக்கொண்டு இறங்குவதை துர்காவால் உணர முடிந்தது.

"கிரிதர் கிட்டேயிருந்து உங்களுக்கு லெட்டராஸ் வந்துகிட்டிருக்கா? அவர் எப்பவும்போல இருக்கார்னுதான் உங்களுக்குத் தோணுதா?"

சட்டென்று அவர் இப்படிக் கேட்டுவிட, துர்கா விழித்தாள்.

"வந்து... அது வந்து..."

"ஏன் கேக்கறேன்னா, பதினைஞ்சு நாளைக்கொருதரம் அவர் எங்களுக்கு பயிற்சி பத்தின ஸ்டேட்மெண்ட் அனுப்பணும்னது கம்பெனி உத்தரவுல ஒண்ணு. முதல்லல்லாம் ரொம்ப கரெக்டா அவரும் அனுப்பிட்டிருந்தார், அங்க பயிற்சி குடுக்கற கம்பெனிலேந்தும் கிரிதரோட வேலைய புகழ்ந்து மாசாமாசம் லெட்டர்ஸ் வந்தது... ஆனா..."

உலர்ந்துவிட்ட உதடுகளை நாவால் சரப்படுத்திக் கொண்டாள் துர்கா.

"ஆனா, கிட்டத்தட்ட நாலைஞ்சு மாசமா எதுவுமே சரியா இல்லே... வேலை ஜாஸ்தியா இருந்திருக்கும்னு நாங்களும் அதைப் பொருட்படுத்தலே. ஆனா, மூணு மாசம் முன்னால அந்தக் கம்பெனிலேருந்து கிரிதர் ஒழுங்கா பயிற்சிக்கு வரதில்லேன்னு தகவல் வந்தப்போ, எனக்கு என்னடா இதுன்னு ஆச்சர்யமா இருந்தது! உடனே கிரிதருக்கு லெட்டர் போட்டேன், அவரும் 'ஸாரி சார், உடம்பு சரியில்லே, அதான் காரணம். பயிற்சிய இன்னும்

மூணு மாசம் நீடிச்சு வெச்சிருக்காங்க. நல்லவிதமா முடிச்சிட்டு வந்துடறேன்'னு ரொம்ப சாதுவா பதில் போட்டார். சரிதான்னு விட்டுட்டேன். ஆனா பாருங்க, மிஸஸ் கிரிதர், போன பதினைஞ்சாம் நான் லண்டன் தம்பெனிலேருந்து ஒரு லெட்டர் வந்தது. என்னன்னு தெரியுமா? 'மிஸ்டர் கிரிதர் ரெண்டு மாசமா பயிற்சிக்கு வரலே... உடம்பு சரியில்லே, கொஞ்சம் அவகாசம் குடுங்கன்னு கேட்டார். குடுத்தோம். அதுக்கப்பறமும் தொடர்ந்து வராததோட, அவருகிட்டேயிருந்து எந்தத் தகவலும் இல்லே... உங்களுக்கு ஏதாவது தெரியுமா? அவர் பயிற்சிய தொடரப்போறாரா இலலியா? இந்த நாட்டுல தான் இன்னும் இருக்காரா?'ன்னு அவங்க எழுதியிருந்ததைப் படிச்சதும் நா..."

அவர் முடிக்கும் முன் பதறிக்கொண்டு துர்கா குறுக்கிட்டாள்.

"கிரிக்கு உடம்பு சரியில்லையா? ரெண்டு மாசமா டிரையினிங்குக்குப் போகலியா? எ-என்ன சார், இது! நாலைஞ்சு மாசமா எனக்குக்கூட ஒழுங்கா தபால் வரதில்லே... பிஸியா இருக்கார்னு நினைச்சு சும்மா இருந்துட்டேன். கடவுளே! இப்ப நா என்ன பண்ணுவேன்? சார், ப்ளீஸ் ஹெல்ப் மி. அவருக்கு என்னன்னு உடனே விசாரிச்சு சொல்லுங்க, சார்..."

வேதனையில் குரல் செம்பிக்கொள்ள, சலசலவென ஊறிவிட்ட நீரை அவர் பார்க்காதிருக்கவேண்டி துர்கா நிலையைக் குனிந்துகொண்டாள்.

"அடடே... எதுக்காக இப்படிப் பதட்டப்படறீங்க, மிஸஸ் கிரிதர்! பூரா விஷயத்தையும் நா இன்னும் சொல்லி

முடிக்கலியே... ப்ளீஸ் பீ பேஷண்ட்! இப்படி லெட்டர் வந்ததும் உடனே, 'கிரிதர் அங்கதான் இருக்கார், வீட்டு விஷயத்துல விசாரிக்க என்ன சேதின்னு விளக்கமா தெரிவியுங்கன்னு நர அவங்க பர்ஸனல் மானேஜருக்கே போல் போட்டுப் பேசினேன்..."

நர்கா சட்டென்று முன்னால் சாய்ந்தான். கண்களும் முகமும் பரபரத்துப்போக, "பதில் வந்ததா, சார்?" என்றாள்.

"எஸ், மறுநாளே வந்தது. கிரி அந்த அறையைக் காலி பண்ணி மூணு வாரம் ஆச்சுன்னு வீட்டுக்காரம்மா சொன்னாங்களாம்..."

"எ...என்னது!"

அதிர்ச்சியுடன் இப்போது பயமும் சேர்ந்துகொள்ள, நர்கா நிதானத்தை இழந்து படபடத்தான்.

"பதினைஞ்சு நாள் முன்னால லெட்டர் வந்திருக்கு. நீங்க அவங்ககிட்ட பேசியிருக்கீங்க, கிரி வீட்டைக் காலி பண்ணிட்டார்னு சொல்லியிருக்காங்க. அப்படீன்னா ஏன் சார், உடனே எனக்கு விஷயத்தைத தெரிவிக்கலே? நர வந்து எனக்கு..."

பேச முடியாமல் வார்த்தைகள் குரல்வளையில் சிக்கிக்கொள்ள பரிதவித்தவளை அனுதாபத்துடன் எம்.டி. எடுத்தார்.

"ரிலாக்ஸ், மிஸஸ் கிரிதர்... அனாவசியமா உங்களைக் கவலைப்படுத்த வேணாம்னுதான் நர உடனே சொல்லலே... நர, அந்தக் கம்பெனிலேர்து பர்ஸனல் மானேஜர் இட்ட லெட்டரை விசாரிக்க கிரி எங்கயிருந்தாலும் கண்டு பிடிக்கணும் சொல்லி, செய்யவேண்டிய காரியங்களைச்

சொல்லிட்டுத்தான் இருந்தேன்..."

"என்ன சொல்ல என்னை சார்! இப்ப கிரி எங்க? உடம்பு சரியில்லாம எந்த ஹாஸ்பிடல்ல... எந்த நிலைல நர..."

"ப்ளீஸ், ப்ளீஸ் மிஸஸ் கிரிதர்... நர சொல்றதைப் பூரா கேட்டுட்டுப் பேசுங்க. கிரிதர் ரொம்ப நெருக்கமாப் பழகின ரண்டு பேர்களைக் கேட்டப்போ, பத்து நாள் முன்னால அவர் அமெரிக்காவுக்குப் புறப்பட்டுப் போயிருக்கறதாவும், உடம்பு நல்லா இருக்கறதாவும் சொன்னாங்களாம்... இதை ஊர்ஜிதப்படுத்தற மாதிரி நேத்து எனக்கும் கிரிதர் கிட்டேயிருந்து லெட்டர் வந்தது..."

"தேங்க் காட்... நல்லா இருக்கார், இல்லே?"

"யுஎஸ்லேர்துதான் அந்த லெட்டரை எழுதியிருக்கார்... ஹி ஈஸ் பர்ஃபெக்ட்லி ஆல்ரைட்."

அப்பாடி என்கிற பெருமூச்சு நீளமாய் வெளிப்பட நர்கா சரிந்து உட்கார்ந்தான்.

"முக்கியமான விஷயத்தை இனிமேதான் சொல்லப் போறேன், மிஸஸ் கிரிதர். 'உங்க கம்பெனிலேருந்து நர லீவுல இக்க முடிவு பண்ணிட்டேன். பயிற்சி, மத்த இதர செலவுக்காக ஏதாவது காம்பன்சேஷன் காணும்னா சொல்லுங்க, தந்துடறேன். இத்தனை வருஷமா நீங்க காட்டின பரிவுக்கு நன்றின்னு எழுதியிருக்கார். இஸ் தட் ரியலி எ ஷாக் ஃபார் மி! இடுமறு என்ன முடிவு இது' என்ன இப்படி நடந்துக்கறார்னு உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

மிகமிக சன்னமான குரலில் நிஜமான வருத்தத்துடன் எம்.டி. பேசியதும், ளைக்மளக்கென்று குடல் இறங்க

முடிச்சுப்போட்டுக்கொண்டதைத் தொடர்ந்து துர்காவின் உடம்பு உதற ஆரம்பித்தது.

(13)

எதையும் தெளிவாக சிந்திக்க முடியாதபடி மண்டையை ராட்சஸப் புழு ஒன்று விடாமல் வலிக்க வலிக்கக் குடைந்தது.

கிரி தன்னிச்சையாய் வேலையை விடத் தீர்மானித்ததும், சொல்லாமல் கொள்ளாமல் அமெரிக்காவுக்கு வேறு போய்விட்டதும், எத்தனை முயன்றும் நம்பமுடியாததாக இருந்தது.

தன் பேச்சுக்கு சாட்சியாக கிரிதரின் கடிதத்தை எம்டி அவளிடம் நீட்ட, அதைப் பத்து தரம் படித்த பின்னரும், 'இல்லை, இது கூட்டுக்கதை. வேண்டுமென்றே என்னைச் சீண்டி அழவிட யாரோ விளையாடும் விளையாட்டு' என்று குரலெடுத்துக் கத்தத் தோன்றியதே தவிரவும், ஒரு வார்த்தையைக்கூட சத்தியமாய் நம்பமுடியாமல் போனதுதான் நிஜம்.

என்ன பேதலை இது!

கிரி வேலையை விடுவதாவது, இனி பயிற்சியைத் தொடர விருப்பமில்லை என்று எழுதுவதாவது!

சரியான உளறல்!

அதுசரி, அமெரிக்காவில் அவருக்கு என்ன வேலை?

எதற்காக அந்த நாட்டுக்கு திடுதிப்பென்று சென்று விட்டு இந்த ரீதியில் ஒரு கடிதத்தையும் எழுதியிருக்கிறார்?

புரியவில்லை... தலையும் புரியவில்லை, வாலும் புரியவில்லை.

எம்.டி.யிடம் என்ன பேசுவது என்று தெரியாமல் திகைத்துப்போய் அமர்ந்திருந்த துர்கா, அவர் ஏதேதோ சமாதானம் கூறியதற்கும் பதில் கூறாமலிருக்க, தன் வண்டியில் தானே அவளை வீட்டில் இறக்கி, "தைரியமா இருங்க, மிஸஸ் கிரிதர். எங்களால முடிஞ்ச அளவுக்கு என்ன விஷயம்னு விசாரிக்கறோம். இடையில உங்களுக்கு விளக்கமா ஏதாவது தகவல் வந்ததுன்னா, தெரிவிக்கறோம்" என்று கூறிவிட்டு அவர் புறப்பட்டுப்போன பின்னரும், வெகு நேரத்துக்கு அதிர்ச்சியிலிருந்து மீளாமலேயே இருந்தாள்.

"உடம்புக்கு என்ன?" என்று வினவின மாமியாருக்கும், 'ஏம்மா, எப்படியோ இருக்கீங்க?" என்று தொணதொணத்த பிள்ளைகளிடமும், "காய்ச்சல் வராப்பல இருக்கு" என்று முனகலாய் பதில் கூறிவிட்டு, படுக்கையில் சுருண்டு படுத்தபோது, உடைத்துக்கொண்டு எழுந்த கம்பளியை அடக்குவதற்குள் ரொம்பவும் சிரமப்பட்டுத்தான்போனாள்.

என்னாயிற்று?

கிரிக்கு உடம்பு சரியில்லையா?

அல்லது ஏதாவது மனக்கோளாறா?

பைத்தியக்காரத்தனமாக இப்படி நடந்துகொள்ளத்தூண்டிய காரணம் என்ன?

இப்போது நான் என்ன செய்யவேண்டும்?

இந்தச் செய்தியை நம்பலாமா, வேண்டாமா?

நம்பாமல்?

லண்டன் கம்பெனியின் பர்ஸனல் மானேஜருடன் எம்டி. போனிலேயே தொடர்புகொண்டு பேசியிருக்கிறார், அவர்களும் விசாரித்துவிட்டு பதில் அனுப்பியிருக்கிறார்கள்.

முக்கியமாய், கிரிதர் தன் கைப்பட எழுதியுள்ள கடிதத்தைக் கண்ட பிறகுமா?

ஓடிச்சென்று அம்மாவின் மடியில் சின்னக் குழந்தையாய் படுத்து வாய்விட்டுக் கதறி அழ எழுந்த வேகத்தை தூர்கா அடக்கிக்கொண்டாள்.

இப்போது அம்மா அப்பாவுக்கு இந்தச் செய்தி தெரியவேண்டிய அவசியம் என்ன?

வயதானவர்கள் இடிந்துபோவார்களே தவிரவும், அவர்களால் ஆகக்கூடியது என்ன?

ம்ஹூம், ஒன்றுமில்லை.

அப்புறம்?

மாமியாரிடம் சொல்லலாமா?

அவர் மட்டும் வயதானவர் இல்லையா, உடைந்து போக மாட்டாரா?

போவார்தான்... ஆனாலும் அவர் கிரியைப் பெற்றவர். கிரி பற்றின எந்த விவரத்தையும் அறிந்துகொள்ளக் கடமைப்பட்டவர்...

தவிர, அவருக்கு விவேகம் அதிகம். அனாவசியமாய் அலட்டிக்கொள்வது, இழந்ததை நினைத்துப் புலம்புவது போன்ற பலவீனங்கள் இல்லாதவர். யதார்த்தம், நிதானம் நிறைந்தவர்.

குழம்பிப்போயிருக்கும் என்னை, தன் தெளிவான பேச்சால் சமாதானம் செய்யக்கூடியவர்.

என்ன செய்யவேண்டுமென்று புரிந்துபோக, அரைமணி நேரத்தில் குழந்தைகள் உறங்கின பிறகு மாமியாரைத் தேடிப்போனாள்.

இரண்டு பேரன்களுக்கும் நடுவில் படுத்திருந்த செல்லம்மாவின் தோளில் கை வைத்து லேசாக உலுக்கினாள்.

திடுக்கிட்டு விழித்தவரிடம் உதட்டில் விரலை வைத்து, 'இங்கே பேச வேண்டாம், வெளியில் வாருங்கள்' எனும் ஜாடை காட்டிவிட்டு, கூடத்துக்கு வந்தாள்.

இருவரும் உட்கார்ந்த பின்னர், சற்றி வளைக்காமல், பீடிகை போடாமல், காலையில் எம்டி. போன செய்தியில் துவங்கி, ஒரு வார்த்தை விடாமல் கூறிக்கொண்டே வந்தவள், சட்டென்று தானமாட்டாமல் இரண்டாக மடிந்து விசும்ப முற்பட, ஒரு வார்த்தை குறுக்கே பேசாமல் அத்தனையும் கேட்ட செல்லம்மா அதிர்ந்தாரோ, உடைந்தாரோ — எதுவானாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் இறுகிப்போன நிலையில் அப்படியே இருந்துவிட்டு, மருமகளின் முதுகை வாஞ்சையுடன் தடவிக்கொடுத்தார். "ஷ்ஷ் பசங்க முழிச்சிக்கப்போறாங்க. அடக்கிக்கம்மா... அழறதனால ஆகப்போறது எதுவுமில்லே. நடக்கற காரியத்தைப் பார்க்கறதுதான் புத்திசாலித்தனம். கண்ணைத் தொடச்சிக்கம்மா..." எனும் இனக்குரலில் தேற்றி, கவிழ்ந்திருந்தவளை எழுப்பி உட்காரவைத்தார்.

"என்னால நம்ப முடியலை, அத்தே. கிரி இப்படிக் கோணமாணான்னு நடந்துப்பார்னு கனவுலயும் நினைக்க முடியலை... ஆனா, என் கண்ணால அந்த லெட்டரப்

பார்த்தப்பறமும்... நா... எப்படி... என்ன ஆச்சு, அத்தே? எனக்கு ஒண்ணுமே புரியலியே..."

அடங்கியிருந்த கேவல்கள் அடம்பண்ணிக்கொண்டு தலைதூக்க, சில நிமிஷங்கள் யாரும் எதுவும் பேசாமல் நகர்ந்தன.

கண்களை மூடியபடி என்னவோ யோசனை பண்ணிய செல்லம்மா, மீண்டும் விழிகளைத் திறந்து மருமகளை ஏறிட்டுப் பேசியபோது, குரல் கிசுகிசுப்பாக வெளிப்பட்டது.

"நாலைஞ்சு மாசமா பயிற்சிக்கு கிரி ஒழுங்கா போகலைன்னு எம்டி சொன்னாரே, அந்த சமயத்துல கிரி கிட்டயிருந்து உனக்கு ஒழுங்கா லெட்டர் வந்துட்டிருந்ததா? இலலே, எங்கயோ ஏதோ கோளாறுன்னு தோணிச்சா?"

"அ...அது வந்து..."

"எதுவானாலும் என்னண்ட மறைக்காம சொல்லும்மா..."

துர்கா புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். மூக்கை உறிஞ்சினாள்.

"போன டிசம்பர் மாசத்துலேருந்தே அவர்கிட்டேயிருந்து கடிதாசு ஒழுங்கா வர்றதில்லே, அத்தே..."

"ஒழுங்கான்னா?"

"வாரா வாரம் எழுதிட்டிருந்தவர், மூணு, நாலு வாரம்கூட கம்முனு இருக்க ஆரம்பிச்சார்... முதல் தரம் பயந்துபோய் தந்தி அடிச்சதுக்கு, 'நா என்ன குழந்தையா?'ன்னு கோவிச்சுகிட்டு பதில் போட்டார். வேலை அதிகமா இருக்குமனு பேசாம இருந்துட்டேன்..."

"அப்பறம்?"

"ஃபிப்ரவரில வரவேண்டியவரு, கடுதலா மூணுமாசப் பயிற்சி இருக்குன்னு வர்ற தேதிய ஒதிப்போட்டார்... அதான் உங்களுக்கே தெரியுமே..."

"தெரியும்தான்... ஆனா, கம்பெனியிலயே பயிற்சி தீப்பிச்சாங்களாமா, இல்லே..."

"எம்டி பேசினதப் பார்த்தா அப்படித் தோணலே... உடம்பு சரியிலலைன்னு சொல்லி இவரா பயிற்சி நீடிக்கக் கேட்டுகிட்ட மாதிரிதான் தோணுச்சு..."

"இதப்பத்தி எம்டி கிட்டக் கேக்கலியா?"

துர்கா இல்லை என்று தலையசைத்தாள்.

"கிரியோட நடத்தை புரியாம அவங்களே நினைச்சுப் போயிருக்காங்க, அத்தே... ஏன் பயிற்சிக்குப் போகலை, ஏன் அமெரிக்கா போயிருக்கார், ஏன் வேலைய விட்டுத் தீர்மானிச்சார்னு எம்டி என்னை நூறு கேள்விகள் கேக்கறார்!"

"உடம்பு சரியில்லேன்னு சொன்னது மெய்யா, பொய்யா?"

துர்கா கொஞ்சம் தயங்கிவிட்டு பதில் கூறினாள். "சினேகிதங்கிட்ட விசாரிச்சவரைக்கும் உடம்பு சரியாதான் இருந்தார்னு சொல்றாங்களாமே!"

"அப்பறம்?"

எதுவும் புரியாமல் செல்லம்மா இவளை ஏறிட... குறைந்திருந்த படபடப்பும் பயமும் துர்காவை மறுபடியும் ஆக்ரமிக்க முற்பட்டன.

"எனக்கு ரொம்ப பயமா இருக்கு, அத்தே. அவருக்கு மனசு இனசு சரியில்லாமப் போயிட்டதோன்னு கவலையா

இருக்கு... அமெரிக்காவுல எங்க போயி அவரைத் தேடுவோம்? எனனனனு விசாரிப்போம்? ஸ்டேட்டர்லகூட அட்ரஸ் எதுவும் இல்லே. அத்தே... இப்ப... நா... நா..."

புடவைத் தலைப்பால் வாயைப் பொத்திக்கொண்டு சப்தமில்லாமல் அவள் அழத் துவங்க, செல்லம்மாவுக்கு சட்டென்று ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது.

"ஒருவேளை அவன் அம்மாள் வீட்டுக்குப் போயிருப்பானோ?"

துர்கா சரக்கென்று நிமிர்ந்தாள்.

— அடடே!

இந்தச் சமாச்சாரத்தை நான் எப்படி மறந்தே போனேன்?

லண்டனில் இருந்த நாட்களில் அண்ணாவோடு தொடர்பு கொண்டிருப்பாரோ?

ஆறுநாட்களிலிருந்தே அண்ணா என்றால் கிரக்குத் தனிப் பாசம் உண்டுதானே!

'வெள்ளைக்காரியக் கட்டிக்கிட்டா என்ன? அதுக்காக வீட்டுலேந்தே ஒதுக்கிவெக்கணுமா?' என்று சமயம் கிடைத்தபோதெல்லாம் பொருமினவர்தானே!

அவ்வப்போது அண்ணாவிடமிருந்து வரும் கடிதங்களை வரிவரியாகப் படித்து, 'ஆயிரம் சொல்லு, அமெரிக்கா அமெரிக்காதான்! என்ன வசதி, என்ன முன்னேற்றம், என்ன அருமையான வாழ்க்கை! ஹூம்! நாமளும் நாயாபேயாத்தான் உழைக்கறோம்... அந்த சௌகர்யத்துல பத்துல ஒரு பங்காவது அனுபவிக்கறோமா?

இருந்தாலும் அண்ணா கெட்டிக்காரர்தான்! சுமார் பட்டணத்துல போய அமர்க்களமா வாழ்க்கைய அமைச்சுக் குட்டார்! பத்தாபசம் இருந்தா என்ன, போனா என்ன! மனுஷனுக்கு வசதி, கௌரவ அனுபவம் இருக்கிறதேன்னு என்று பக்கமபக்கமாய் புலம்பினவர்தானே!

ஒருவேளை அண்ணனோடு தொடர்புகொண்டு, அவரும், 'வாடா இங்கே தம்பி, நான் இருக்கிறேன் எனக்கு' என்று அபயக்கரம் நீட்ட, பணக்கார சொகுசு வாழ்க்கைக்கு சப்புக்கொட்டிக்கொண்டு கிளம்பிவிட்டாரோ?

முன்கூட்டியே என்னிடம் தெரிவித்தால், 'இந்த நப்பாசைதானே வேண்டாம் என்கிறேன். இங்கே இருக்கும் வசதிகள நமக்குப் போதும்! வந்துவிடுங்கள்!' என்று எதையாவது சொல்லித் தடுத்துவிடுவேன் என்கிற பயத்தில் ஒன்றும் எழுதாமல் இருந்துவிட்டாரோ?

போய் செட்டிலாகி, எல்லாம் தெளிவான பிறகு எழுதலாம் என்று நினைத்தாரா?

இருக்கும்... இருக்கும்...

யோசித்தவரைக்கும் வேறு எந்த பதிலும் இதைவிட திருப்திகரமாக அமையாது போக, அண்ணாவைப் பார்க்கத்தான் கண்டிப்பாக இரிதர் அமெரிக்காவுக்குச் சென்றிருக்க வேண்டும், அம்மாவுக்குப் பிடிக்காததை சொல்லவேண்டாமென்று கடிதம் எழுதாமல் இருந்திருக்கவேண்டும், எப்படியாவது அப்புறம் இவர்களைச் சமாதானப்படுத்திவிடலாம் என்ற நம்பிக்கையுடன் செயல் பட்டிருக்கவேண்டும் — என்று தானாகவே ஒரு முடிவுக்கு வந்து, ஒருநிறைவாய் சமாதானமானவர்கள், அமெரிக்காவி லிருந்த மூத்தவர் எழுதியுள்ள பழைய கடிதத்திலிருந்து

போன் நம்பரைத் தெரிந்துகொண்டு நாளைக்கே ஒரு 'கால்' போட்டு, தங்கள் கனக்கு சரிதானா என்று அறிந்து கொண்டுவிட வேண்டும் என்றும் தீர்மானித்த பிறகு, இரவு ஒரு மணி அளவில் படுக்கப் போனார்கள்.

(14)

தூங்கினோம் என்று பேர்பண்ணிவிட்டு, ஐந்துக் கெல்லாம் எழுந்து, முகம் கழுவி, சமையலறைக்குள் துர்கா நுழைந்தபோது, இவளுக்கு முன்பாகவே விழித்துக்கொண்டு விட்ட செலலம்மா, ஃபில்டரில் நீர் ஊற்றி, பாலையும் காய்ச்சியிருந்தார்.

"நீங்க எதுக்காக சிரமப்பட றீங்க, அத்தே?" என்றவளின் கேள்விக்கு பதில் கூறாமல், காபியைக் கலந்து நீட்டியவர், "பழைய கடிதாசுங்களை வெச்சிருப்பீங்களா, இல்லே கிழிச்சுப் போட்டுடுவீங்களா?" என்று மனசில் தோன்றியிருந்த சந்தேகத்தைக் கேட்க, துர்கா சின்னதாகப் புன்னகைத்தாள்.

"அன்னோ லெட்டரையாவது, கிரி கிழிச்சுப் போட றதாவது! பத்து வருஷக் கடிதாசு அத்தனையும் பத்திரமா வெச்சிருக்கார்..."

"அப்ப, அதுல போன் நம்பர் நிச்சயம் இருக்குமில்லே?"

"கண்டிப்பா..."

இருந்தது.

நம்பருடன் வந்து நின்றவளிடம் அடுத்த சந்தேகத்தை செல்லம்மா வெளியிட்டார்.

"எங்கேயிருந்து போன் பேசப்போறே?"

துர்கா உதட்டைப் பிதுக்கி, புருவங்கள் முடிச்சுப்போட யோசித்தாள்.

ஆபீஸிலிருந்து? செய்யலாம்தான்... ஆனால், அதை கிரியுடன் பேச விரும்பினால்? கிரியுடன் அவர் பேசப் பிரியப்படுகிறாரோ இல்லையோ, இந்தக் காரணத்தை வைத்துக்கொண்டு முத்தவர் கதாகலாயும் பெற்றவளையும் பேசவைத்து, பதினைந்து வருஷ காலமாக அவர்களுக் கிடையில் தோன்றியிருக்கும் விரிசலைப் பூச முயற்சிக்கலாம் என்று ஆசைப்படுவது ஆபீஸிலிருந்து கால் போட்டால் இயலாது. அத்தை அங்கு வருவதும் பேசுவதும் சாத்தியமில்லாதவை.

அதனால், வேண்டாம்...

தபாலாபீஸிலிருந்து? பத்து போர்ஷன் கூடியுள்ள இடம். பல வருஷங்கள் கழித்துப் பிள்ளையுடன் பேசுமபோது அத்தை உணர்ச்சிவசப்பட்டுப்போகலாம்... மற்றவர் வேடிக்கை பார்க்க எதற்காக இடம்கொடுக்கவேண்டும்?

வேண்டாம்... அங்கும் வேண்டாம்.

"என்னம்மா யோசனை?"

"இலலே அத்தே, எங்கேயிருந்து பண்ணினா நாம மனசுவிட்டுப் பேச வசதியா இருக்கும்னு யோசித்துக் கிட்டிருந்தேன்.. உங்களுக்குக் கல்பனாவைத் தெரியுமில்லே? அவங்க வீட்டுக்குப் போய் பேசலாமா?"

"நாராளமா பேசேன்..."

துர்கா ஒருதரம் அவரை ஏறிட்டுவிட்டுப் பார்வையைத் தழைத்துக்கொண்டாள்.

"நீங்களும் வந்திங்கன்னா..."

"நானா? எதுக்கு?"

"உங்க மூத்த பிள்ளைகிட்ட முன்னபின்ன நா பேசினதில்லே.. துர்கான்னு சொன்னா சட்டுனு புரியுமோ புரியாதோ... நீங்க முதல்ல பேசிட்டீங்கன்னா தொடர்ந்து நா பேசிடுவேன்..."

செல்லம்மா டம்ளர்களைக் கழுவிக் கவிழ்க்கும் பாவனையில் பேசாமல் இருந்துவிட்டு, திரும்பாமலேயே பேசினார்.

"கிரி அங்க இருக்கறப்ப கூடவா நீ யாருன்னு சுதாகர் புரிஞ்சிக்க மாட்டான்?"

"ஒருவேளை கிரி எங்கயாவது வெளிய போயிருந்தா? நா யாருன்னு விளக்கறதுலியே மூணு நிமிஷம் ஓடிடும், அதேதே- ப்ளீஸ்..."

செல்லம்மாவின் மௌனத்தை சம்மதமாக எடுத்துக் கொண்டு எட்டு மணிக்கெல்லாம் அருகிலிருந்த மருந்துக் கடைக்குச் சென்று சினேகிதி கல்பனாவுடன் தொடர்பு கொண்டாள்.

"ஏய் ஹேப்பண்ட் அமெரிக்காவுக்குப் போயிருக்கார், கல்பனா இந்நேச காக்கை வெச்சுகிட்டு அத்தையையும், மூக்குவா சுதாவையும பேசவெச்சிடணும்னு விரும்பறேன்" என்று நாலுக்கும் விஷயத்தை, தேவையான அளவு மட்டும்

தெரிவித்து, கல்பனா வேலைக்குப் போன பிறகு அவள் வீட்டுக்கு வந்து 'கால்' போடுவதற்கு அனுமதி பெற்றுடன், அதற்குண்டான தொகையைக் கொடுத்துவிடுவதாகவும் சொல்லிவிட்டு வந்தாள்.

குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பின கையோடு, அலுவலகத்துக்கு போன செய்து தான் அன்று வருவதற்கில்லை எனபதைத் தெரிவித்துவிட்டு, அத்தையுடன் இளம்பினாள்.

அமெரிக்காவுக்கும் தங்களுக்கும் சுமார் பத்தரை மணிநேர வித்தியாசம் உண்டு என்பதை நினைவில் கொண்டு, இங்கு காலை பதினோரு மணி என்றால் அங்கு இரவு ஒன்பதரையாக இருந்து, படுக்கப் போகும் முன் பேச சரியான சமயம் எனறு திட்டமிட்டு 'காலை' பதிவு செய்தாள்.

மூன்று நிமிஷங்களுக்குக் கட்டணம் தொண்ணூற்று ஆறு ரூபாய் என்பதால், ஆறு நிமிஷங்களுக்கு மேல் பேச வேண்டாம் என்று தீர்மானித்து, சுப்பரேட்டர் தொடர்பு கொடுத்ததும், "முதல்ல நீங்க பேசுங்க, அத்தே.." என்று செல்லம்மாவிடம் ரிஸீவரை நீட்டினாள்.

முதல் மூன்று நிமிஷங்களுக்கு அத்தைக்கு, பின்னர் கிரியுடன் பேச தனக்கு மூன்று நிமிஷங்கள் என்று அவள் கணக்குப் போட்டது நடக்காதபடி செல்லம்மாவின் பேச்சுக்கள் அமைய, துர்கா பரபரக்க ஆரம்பித்தாள்.

உணர்ச்சிவசப்பட்டுப்போனாலும், அதிகமாக உடைந்து போகாமல் நிதானமாகப் பேசி, சுதாகர் மற்றவர்களின் நலனை விசாரித்து முடித்து, "கிரி அங்க வந்திருக்கானா?" என்று வினவியவளின் முகத்தில் சட்டென்று ஏமாற்றம் படர, துர்கா நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"வரலியா? அங்க வந்திருக்கறதா தகவல் வந்துதே!"

"....."

"ஓ! அப்படியா!"

"....."

'வந்தான்னா, உடனே துர்காவ அவ ஆபீஸல கூப்பிடச் சொல்றியா?"

மேற்கொண்டு ஒரு நிமிஷம் பின்னையுடன் பேசிவிட்டுத் தொடர்பைத் துண்டித்தபோது, செல்லம்மாவின் முகத்தில் கவலை வெளிப்படையாகவே கோடுபோட்டிருந்தது.

"எ...என்ன, அத்தே?"

"அங்க வரலியாமே... லண்டனுக்குப் போன புதுசுலே, 'நா பயிற்சிக்கு வந்திருக்கேன்'னு லெட்டர் போட்டவன் தானாம்... அப்பறம் தகவல் ஏதும் இல்லியாம்... என்ன விஷயம்னு அவனும் சேர்ந்துகிட்டுப் பதர்றான்... இப்ப கிரி எங்க? ஒண்ணும் புரியலியே! என்னம்மா ஆச்சு இந்தப் பிள்ளைக்கு!"

அமெரிக்கா சென்றிருக்கும் கிரி அண்ணன் வீட்டுக்குச் செலவவில்லையென்றால, வேறு எங்குதான் சென்றிருக்கிறார்?

அமெரிக்காவில் அவருக்குத் தெரிந்தவர் வேறு யார் இருக்கிறார்கள்?

திடீரென்று ரொம்ப பயமாக இருந்தது.

எங்கோ என்னவோ பெரிசாய் தவறு நடக்கிறது. நம்மால புரிந்துகொள்ள முடியவில்லை என்கிற கலவரம் எழுந்தது.

மார்புக்கூட்டுக்குள் ஓராயிரம் பறவைகள் ஒரே சமயத்தில் இறக்கைகளை அசைத்துப் படபடத்தன.

அத்தை கேட்பதுபோல, கிரி எங்கே?

என்ன ஆயிற்று அவருக்கு?

இதுவாக இருக்கும், அதுவாக இருக்கும் என்று நம்பியதெல்லாம் இல்லையில்லை என்று அடிபட்டுவிடுவதற்கு அர்த்தமென்ன?

என்ன பேசுவது என்று புரியாத குழப்பம் புரட்டியெடுக்க, இருவரும் மௌனமாக வெளியில் வந்தார்கள். ஆட்டோ பிடித்து வீட்டை அடைந்தார்கள்.

மீண்டும் எம்.டி.யை சந்திக்கலாமா?

'கிரி அவர் அண்ணன் வீட்டிலும் இல்லை, எங்கு போயிருக்கிறார் என்று விசாரியுங்கள்... லண்டன் கம்பெனியுடன் தொடர்புகொண்டு இளைஞரின் பழைய வீட்டுக்காரியையும் நண்பர்களையும் சந்திக்கச்சொல்லி ஆழமாகத் துருவி விவரத்தை எப்படியாவது தெரிந்து கொண்டு எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்... ப்ளீஸ், ப்ளீஸ்... உங்களை விட்டால் தற்சமயம் எங்களுக்கு உதவ யாருமில்லை. கடைசியாக கிரி தொடர்புகொண்டிருப்பது உங்களிடமும், லண்டன் கம்பெனியிடமும்தான். அதனால் தாமதிக்காமல் உடனே, உடனே செயலில் இறங்குங்கள். நிச்சயமாய் எங்கோ, எதுவோ சரியாக இல்லை எனபது மனசைப் பிறாண்டலாய்ப் பிறாண்டியெடுக்கிறது. ப்ளீஸ் ஹெல்ப் மீ...' என்று அவரைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளலாமா?

சரி, எத்தனை கேட்டும் எதிர்பார்த்த விதத்தில் எம்டி ஒத்துழைக்காவிடில்...?

'அவரைப் பயிற்சிக்கு அனுப்பியது உங்கள் கம்பெனிதான்... ஓக. அவரைப் பத்திரமாகக் கொண்டு சேர்க்கும் பொறுப்பும் உங்களைச் சார்ந்ததுதான்' என்று அடாவடித்தனம் செய்யலாமா?

இதுவும் சரிப்பட்டுவராவிட்டால்...?

தீவிரமான யோசனை இளப்பிய பயம், பதட்டம், தவிப்புடன் படியேறி, பூட்டைத் திறக்க...

பளிச்சென்று தரையில் கிடந்த அந்த நீலமும் சிவப்பும் கூரையிட்ட கவர் கண்களில் விழுந்தது.

இதுநாழிகை பட்ட வேதனையெல்லாம் ஒரு நொடியில் இருந்த இடம் தெரியாமல் மறைய, "லெட்டர் வந்திருக்கு, அத்தே!" என்று உரக்கக் கூவியவண்ணம் துர்கா தாவிச் சென்று அந்தக் கவரை எடுத்தாள்.

கடிதம் இரியிடமிருந்துதான்...

அமெரிக்காவிலிருந்துதான்...

இரி தன் நிலைமையை விளக்கிச்சொல்ல அவகாசம் கொடுக்காமல் தலைகால்புரியாத விதத்தில அவசரப்பட்டு பயந்துவிட்டோமோ என்கிற குற்றஉணர்வு குட்டியாய் மலர, எகிறிக்குதிக்கும் இருதயத்தை அடக்கத் தெரியாதவளாய் துர்கா கவரைப் பிரித்தாள்.

"என்னப்பவே முருகா... ஒரு நாளுக்குள்ள என்னென்னமோ நினைக்கப்பண்ணி அம்பலத்துல நிக்கவெச்சிட்டியேப்பா!" என்று முனகலாய்ப் பேசி, இவள் கடிதத்தைப் படித்து செய்தி சொலவதை எதிர்பார்த்து செவ்வம்மா நாற்காலியில் அமர, அவரை ஏறிட்டு

அசட்டுச்சிரிப்பொன்றை சிந்திய துர்கா கண்களை கடிதத்தில் மேயவிட்டாள்.

'அன்புள்ள துர்கா,

இந்தக் கடிதத்தை நான் அமெரிக்காவிலிருந்து எழுதுவது உனக்கு ஆச்சர்யத்தைத் தரலாம். இது கடிதலாது. தொடர்ந்து நான் எழுதப்போகும் சமாச்சாரமும் உனக்கு வியப்பை, ஏன் கொஞ்சம் அதிர்ச்சியையும் தரலாம். ஆனால் நீ விவேகி. படித்தவள். எதையும் அறிவுபூர்வமாக அணுகுபவள் என்கிற நம்பிக்கை எனக்கிருப்பதால், தைரியமாக உனக்கு இக்கடிதத்தை எழுதுகிறேன்.'

முதுகுத்தண்டில் பூரான் ஒன்று ஊறும் பயத்துடன் துர்கா தன்னை உதறிக்கொண்டாள்.

எதற்காக இத்தனாம்பெரிய பீடிகை?

"என்னம்மா எழுதிவிருக்கான்?" என்று விளவிய மாமியாருக்கு பதில் கூறாமல் மேலே படித்தாள்.

'... கதறிவனைக்க விரும்பவில்லை துர்கா. அப்படி வழவழாவென்று பேசினாலும் உனக்குப் பிடிக்காது என்று எனக்குத் தெரியும். நீ வருடிக்கொடுக்கையே எனக்குள் ஒளிந்திருப்பதைத் தெரிந்துகொள்ளாமை தோன்றியிருப்பதை நீ அறிவாயோ, மாட்டாயோ! உப்புசப்பில்லாத அர்த்தமில்லாத மொன்ன வாழ்க்கையை வாழ்வதாக ஒரு பிரமை. இந்த உணர்வு தோன்றும்போதெல்லாம் இதை அடக்க நான் படாபாடு எனக்கு மட்டும்தான் தெரியும். இந்த நிலையில்தான் லண்டனுக்கு வந்தேன். அங்கும் மனக விருப்பினைத் செயலாக்கம் போலியாய் வாழ்வது மாறிதான ஒரு ஏக்கம். ஆனால், இந்தத் தவிப்பு வின்டாலை நான் சந்தித்த பிறகு மறைந்துவிட்டது என்றால் நம்புவாயா? வின்டர் ஒரு அமெரிக்கன் வீதலை போல வருடம் பிறந்து ஒளிர்

கணவனை இழந்தவள், உறவு என்று சொல்லிக்கொள்ள யாருமே இல்லாதவள், கோடிக்கணக்கில் பணம் இருந்தும், பாவம், அனாதை போல் வாழ்ந்தவள், ஐரோப்பா, லண்டன் எல்லாம் சுற்றிப்பார்க்க வந்தவளை, சென்ற டிசம்பரில் நான் சந்தித்தேன். இருவருமே ஒருவர்பால் ஒருவர் அழுத்தமான அன்பு, பரிவுடன் இழுக்கப்பட்டோம் என்பதுதான் நிஜம். அதன் பிறகு நடந்த விவரங்களை இங்கு நான் எழுதுவது அனாவசியம், நாகரிகமும் இல்லை.

லண்டனில் பத்து நாட்கள் தங்கிவிட்டுக் கிளம்பவிருந்த வினடா, மேலும் மூன்று மாசங்கள் தங்கினபோது, எதிர்காலத்தில் நாங்கள் ஒருவருடன் ஒருவர் சேர்ந்து வாழவேண்டியது எவ்வளவு அவசியம் என்பது புரிந்தது.

உன்னிடமிருந்து எதையும் நான் மறைக்க விரும்பவில்லை. வின்டாவோடு வாழ நினைக்கும் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக இருக்கும் என்றே தோன்றுகிறது.

இதற்கு மேல் வேறு நான் என்ன எழுத, துர்கா?

அமெரிக்காவிலிருக்கும் தொழிற்சாலைகளை நிர்வகிக்கும் பொறுப்பை நான்தான் ஏற்கவேண்டுமென்று வின்டா வேண்டியதால், என் தெளிவான நிர்மாணத்தின் முதல் கட்டமாக, வேலையை விட்டுவிட்டேன்.

ஒரு அமெரிக்கப் பெண்ணை மணப்பதன் மூலம் எந்த நாட்டுப் பிரஜைக்கும் இங்கு வசிக்கத் தகுதி கொடுக்கும் 'க்ரீன் கார்ட்' நானைக்கே வின்டாவை மணந்து நானும் வாங்கிவிட முடியும்.. ஆனால், அப்படி அவசரப்பட நான் விரும்பவில்லை. விவாகரத்துக்கு சம்மதிக்கும் உள் கடிதத்தைப் பெற்று, செய்யவேண்டிய விதிமுறைகளைச் செய்த பிறகே திருமணம் நடக்கவேண்டும் என்பது என் ஆசை.

நம்மைப் பற்றின எல்லா விவரங்களும் வின்டாவுக்குத் தெரியும். நீயும் பிள்ளைகளும் எதிர்காலத்தில் வசதியாக வாழ லட்சம் டாலர் வரை — அதாவது சுமார் பதினான்கு லட்சம் ரூபாயை — உங்களுக்குக் கொடுக்க அவள் தீர்மானித்திருக்கிறாள்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி — நீ விவேகி, படித்தவள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

சாதாரணப் பெண்களைப் போல அழுது, அமர்க்களம் பண்ணாமல், என் மனசு இதைந்தான விரும்புகிறது என்ற உண்மை புரிந்து செயல்படுவாய் என்று ஆணித்தரமாக நம்புகிறேன்.

உன் பதிலை எதிர்பார்க்கும் — இரிதர்.'

கடைசி வரிகளைச் சரியாகப் படிக்க முடியாமல் கண்கள் மசமசக்க, திடுமெனத் தலையைச் சுற்ற, கால்கள் தொய்ந்துவிட்ட அயர்ச்சியுடன் அப்படியே தரையில் இரண்டாக மடிந்து சரிந்தாள் துர்கா.

(15)

கருமை... 'ஹோ'வென்ற கருமை...

விரல்களை முன்னால் நீட்டினால் புலப்படாத இருட்டு...

காதுக்குள் அருவி ஒன்று வெகு சமீபத்தில் கொட்டி ஓர்ப்பரிக்கும் சப்தம்...

வயிற்றில் வெட்டுக்கிளிகளின் ஓயாத தாவல்கள்...

முதுகுத்தண்டில் என்னேரமும் ஐஸ்கட்டி ஒன்றைக் கட்டியிருக்கும் அதீத குளிர்ச்சி...

உதறி உதறிப்போடும் உடம்பு...

வலிக்கிறது... தாளமாட்டாமல் குடைகிறது என்று சதா அலறும் நெஞ்சு...

என்ன அவஸ்தை இது! என்ன வேதனை இது!

வயிற்றில் அலாதியானதொரு சங்கடம் பரவ, அதை அடக்கும் பிரயத்தனத்தில் துர்கா புரண்டு படுத்தாள்.

கீழுதட்டை அழுந்தக் கடித்தாள் நிமிஷத்துக்கொரு பெருமூச்சை விட்டாள்.

அழுகையை அடக்கியடக்கி தொண்டை வலியெடுத்து விட்டிருந்தது.

இனிமேல் அழ எங்களுக்குத் திராணி இல்லை என்று சொல்வது போல கண்கள் வறவறத்துப்போயிருந்தன.

கிரியா? என் கிரியா?

நீயும் பிள்ளைகளும் வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளிவிட்டு, விண்டா என்கிற அமெரிக்கப் பெண்ணுடன் வாழத் தீர்மானித்துவிட்டாரா?

கிரியா? என் கிரியா?

கடவுளே... இது நிஜம்தானா?

நம்ப முடியவில்லையே... சத்தியமாய் நம்பமுடிய வில்லையே... நான் என்ன செய்வேன்!

பரிதவிப்பு அதிகமானதும், மாட்டேன் போ என்று கம்மா இருக்க முடியாத கண்கள் தன் பங்குக்குக் கண்ணீரை உற்பத்தி பண்ண, அடங்கியிருந்த நீர் கனத்தில் கோடுபோட்டுக்கொண்டு இறங்கி, தலை காணியை நனைத்தது.

"துர்கா..."

"....."

"துர்...கா..."

மூடியிருந்த விழிகளைத் திறந்தாள்.

அப்பா... அம்மா...

"என்னம்மா இது... பச்சைப்பிள்ளையாட்டம்! சேந்து வந்த ரெண்டு நாளா துளி அன்ன ஆகாரம் இல்லாம இப்படியே படுத்து அழுதிட்டிருக்கே! பசங்களை நினைச்சாவது தேத்திக்கிட்டு ஆகவேண்டியதைப் பாருமா... உங்க மாமியாரும் இடிஞ்சுபோய் ஒருபக்கமா படுத்துட்டதுல, பசங்க எதுவும் புரியாம முழிக்குதுங்க! ரொண்டு பேருக்கும் ஜ்வரம், தலைவலி தாங்கல... அதான் அழறாங்கன்னு என்னவோ சொலவி சமாளிச்சு பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிட்டோம். எழுந்திரு துர்கா... முகத்தைக் கழுவிக்கிட்டு ஏதாச்சும் சாப்பிடுமம்மா! மேற்கொண்டு என்ன செய்யணும்னு யோசிக்க வேணாமா? உடைஞ்சு போயிட்டா ஆச்சா? எழுந்திரும்மா..."

எத்தனை சமாதானம் பண்ணியும், அருகில் அமர்ந்து தலையைக் கோதி கெஞ்சியும் அவன் அசைந்து கொடுக்காமல் இருக்க, இப்போது என்ன பண்ணவேண்டும் என்று புரியாமல் சுப்ரமணியமும், அகிலாவும் கலவரப் பட்டுத்தான் போனார்கள்.

முந்தாநாள் பிற்பகல் மிகுந்த பதட்டமும், அழுது சிவந்த கண்களுமாய் செல்லம்மா இவர்கள் வீட்டுக்கு வந்து, "உடனே வாங்க..." என்று பதறியதும், எதற்கும் கலங்காத தங்கள் சம்பந்தியம்மா இப்போது எதற்காக இவ்வளவு படபடக்கிறார் என்று சுப்ரமணியமும் அகிலாவும் பயப்படவே செய்தார்கள்.

போட்டது போட்டபடி வீட்டைப் பூட்டிக்கொண்டு ஓடிவந்தால், மார்பில் சட்டி தனலைக் கொட்டுவதால் கிரியின் கடிதம்... மலங்கமலங்க விழித்தபடி தலைதிருந்த துர்கா.

யாரிடமும் ஒரு வார்த்தையும் பேசாமல் அன்று தன்னறைக்கு வந்து படுத்தவள்தான்...

பசியில்லை, தாகமில்லை, உறக்கமில்லை, தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று கவலையில்லை... அப்படியே படுத்திருக்கிறாள்.

நூறு கேள்விகள் கேட்ட பையன்களை எப்படியோ நேற்று சமாளித்துவிட்டாலும், இனியும் தொடர்ந்து துர்கா இப்படியிருப்பது ஆரோக்கியமான சமாச்சாரம் இல்லை என்பதால், காலையிலிருந்தே சுப்ரமணியம் மகளை விடாமல் தூண்டித்தான் பார்க்கிறார்... ஆனால் துர்கா அசைந்துகொடுத்தால்தானே!

ஒரு டம்ளர் காபி கலந்து எடுத்துவரச் சொல்லி, வலுக்கட்டாயமாக அவளை எழுப்பி உட்காரவைத்து, குடிக்கச் செய்தபின், இதுநாழிகை இல்லாத விதமாய் சுப்ரமணியம் குரலை லேசாகக் கடுமையாக்கிக்கொண்டார்.

"அடுத்து என்ன செய்யறதா உத்தேசம், துர்கா? இப்படி ஆடிப்போய் நீ படுத்திட்டா மேற்கொண்டு கவனிக்கவேண்டியதைப் பண்றது யாரு? உன்னால முடியலைன்னா என்னண்டை சொல்லு, நா செய்யறேன். கிரியோட ஆபீஸுக்குப் போய் எம்.டி.கிட்ட பேசட்டுமா? இந்த ரீதில லெட்டர் வந்திருக்கு, என்ன செய்யலாம்னு அவரைக் கலந்தாலோசிக்கட்டுமா? ம்...? மாப்பிள்ளைக்கு புதுசி இதசி பிசகிப்போச்சா, இல்லை யாராவது மருந்து மாயம்னு ஏதாவது வெச்சிட்டாங்களா? சொல்லும்மா... ஜடமா இருக்காம, இப்ப என்ன பண்றதுன்னு சொல்லு-"

காலி டம்ளரை அம்மாவிடம் நீட்டிய துர்கா, அப்பாவை ஏறிட்டு பலவீனமான குரலில் பேசினாள்.

"கொஞ்சம் என்னைத் தனியா விட்டுடுங்கப்பா... இப்போதைக்கு நீங்க கேக்கற எந்தக் கேள்விக்கும் பதில் சொலற நிலைல நா இலலவே... அடிபட்ட வலிதான் என்கிட்ட இருக்கு! அந்த வலி தணியறவரைக்கும் என் போக்குக்கு விட்டுடுங்க... ப்ளீஸ்"

அவ்வளவுதான்... இனி பேச ஒன்றுமில்லை — எனபது போல அவள் திரும்பிப்படுக்க, இப்படி முரண்டு பண்ணுபவளை எவ்வாறு சமாதானம் செய்யப்போகிறோமோ என்கிற மலைப்புடன் சுப்ரமணியம் மனைவி தொடர வெளியில் வந்து கூடத்திலிருந்த சம்பத்தியின் எதிரில் அமர்ந்தார்.

சூடான காபி உள்ளே போனது கொஞ்சம் நெம்பைத் தர, துர்கா படுக்கப் பிடிக்காமல் எழுந்து சுவரில் சாய்ந்தபடி உட்கார்ந்தாள்.

இந்த இரண்டு நாட்களில் எத்தனையோ முறை படித்துவிட்டதில், மனப்பாடமாக ஜூலிவிட்ட கிரியின் கடிதம் வரிவரியாய் மனசுள் பளபளத்தது.

— சில வருஷங்களாகவே எனக்குள் ஒருவித இருப்புக்கொள்ளாமை தோன்றியிருந்ததை நீ அறிவாயோ, மாட்டாயோ! உப்புசப்பில்லாத, அர்த்தமில்லாத மெஷின் வாழ்க்கையை வாழ்வதாக ஒரு பிரமை.

— ஒருவித இருப்புக்கொள்ளாமையா?

— யாருக்கு, கிரிக்கா?

அழுந்த யோசித்து, சூரபகத்தைப் புரட்டினலைலாயில, ஒருதரம்கூட அப்படியொரு தவிப்பு குறித்து கிரி பேசிய தாகவோ, வெளியிட்டதாகவோ நினைவுக்கு வாவில்லையே-

— உப்புசப்பில்லாத, அர்த்தமில்லாத மெஷின் வாழ்க்கை...

நாங்கள் வாழ்ந்த வாழ்க்கையையா இப்படிக் குறிப்பிடுகிறார்?

திடுமென தூர்காவுக்கு வாய்விட்டுச் சிரிக்கத் தோன்றியது.

சிரிப்பும், சீண்டலும், அன்பும், காதலுமான வாழ்க்கை என்று நம்பியது, சட்டென்று அர்த்தமில்லாததாக மாறுவது சாத்தியம்தானா?

— ஆனால் இந்தத் தவிப்பு வின்டாவைச் சந்தித்த பிறகு மறைந்துவிட்டது என்றால் நம்புவாயா?

எப்படி கிரி, நம்ப முடியும்! ஏழு வருஷம் அமோகமாய் வாழ்ந்ததெல்லாம் கனவு, வின்டாவைச் சந்தித்த பிறகு வாழும் வாழ்க்கைதான் நிஜம் என்று நீங்கள் கூறுவதை சத்தியமாய் என்னால் ஏற்க முடியவில்லையே கிரி!

— நாளைக்கே வின்டாவை மணந்து 'க்ரீன் கார்டை' என்னால் வாங்க முடியும்... ஆனால் அப்படி அவசரப்பட நான விரும்பவில்லை.

உங்கள் செய்கைக்கு நியாய, அநியாய விளக்கம் வேறா கிரி?

— நீ விவேகி, படித்தவள், தைரியசாலி... சாதாரணப் பெண்களைப் போல அழுது அமர்க்களம் பண்ண மாட்டாய் என்று ஆணித்தரமாய் நம்புகிறேன்.

இப்போது வருத்தத்தையும் மீறிக்கொண்டு வாஞ்சை னைவே தூர்காவுக்கு சிரிப்பு எழுந்தது.

மனசாட்சியைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, சரி—தவறு எதையும் லட்சியம் பண்ணாமல், தாம—அதர்மத்தை நினைத்துப்பாராமல், தான் — தன் சுகம் முக்கியம் என்று அடாவடித்தனமாகச் செயல்படுவதற்கு சப்பைகட்டும் விதமாய், 'நீ விவேகி, படித்தவள், தைரியசாலி' என்ற பட்டங்களா!

கடவுளே!

இத்தனை சுயநலமாக நடந்துகொள்வது கிரிக்கு எப்படி சாத்தியமாயிற்று?

நான் இத்தனை வருஷங்களாய் பழகிய கிரியின் முகம் உண்மையானதா, அல்லது, இப்போது வெளிப்படும் முகம் மெய்யானதா?

எது நிஜம், எது போலி?

யோசிக்க யோசிக்க, வருத்தம் குறைந்து கோபம் உள்ளுக்குள் தகதகக்க முற்படுவதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

என்ன சுயநலம், என்ன அனைவம், என்ன கண்ணைக் கட்டிவிட்டத்தனம்!

நான் ஆண்—இவள் பெண்- நான் சாவால் இடுகிறதை இவள் தலையால் நிறைவேற்றியே ஆகவேண்டும் என்கிற ஆண்திமிர்தானே இப்படி நடக்கவைத்திருக்கிறது!

பரம்பரை பரம்பரையாய், யுக யுகமாய் இருந்துவரும் இந்த ஆண்மமதைதானே இப்படிச் செயல்பட்டத் தூண்டியிருக்கிறது!

— பாவம் வின்டா...

அப்படியென்றால் நாங்கள பாவமில்லையா?

அவள் விதவையாக இருப்பதும், உற்றார் சுற்றார் என்று யாருமில்லாததும் கிரியின் நெஞ்சைத் தொட்டுவிட்டதா?

பரிதாபம் காதலாகுமா?

வித்தியாசம் தெரியாமல் தெரியாத்தனத்தில் கிரி மாட்டிக்கொண்டுவிட்டாரோ என்கிற நினைப்பில் சட்டென்று மனசு நெகிழ்ந்தது.

கிரி... என் கிரி... ஆழம் தெரியாமல் காலை விட்டு, அடிபட்டுப்போனால் என்ன செய்வீர்கள், கிரி...

அடங்கியிருந்த அழுகை மீண்டும் கிளம்ப, துர்கா தலைகாணியில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள்.

என்னிடமில்லாத எந்த அபூர்வத்தை அவளிடம் கண்டீர்கள், கிரி?

அழகு...? குணம்...? திறமை...?

பணம்...!

— கோடிக்கணக்கில் பணம் இருந்தும் அனாதை போல வாழ்பவள்...

— தொழிற்சாலைகளை நிர்வகிக்கும் பொறுப்பை நான்தான் ஏற்கவேண்டுமென்று விண்டா வேண்டியதால்...

ஆக, பணமா! அது கொடுக்கப்போகும் தடபுடலான அமெரிக்க வாழ்க்கையா!

இந்த ஆசைதான் எதையும் தெளிவாகக் காண முடியாமல் கண்களில் காளானாகப் படர்ந்துவிட்டதா?

— நீயும் பிள்ளைகளும் எதிர்காலத்தில் வசதியாக வாழ லட்சம் டாலர்— அதாவது சுமார் பதினான்கு லட்ச ரூபாய் — உங்களுக்குக் கொடுக்க அவன நிர்மானித்திருக்கிறாள்...

சட்டென்று ஒரு குமட்டல் வயிற்றில எழுந்து, பித்தநீரை வாய்க்குக் கொணர, துர்கா நான்கே எட்டில் பாத்ரூமுக்குள் ஓடி, வாந்தியெடுத்தாள்.

வாய் கசந்தது... மனசு கசந்தது... இதயம் எரிந்தது.

குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவிக்கொண்டபோது, 'அழுது இடிந்தது போதும். அப்பா சொல்கிற மாதிரி தெளிவாக யோசனை பண்ணி காரியத்தில் இறங்குவது அவசியம்' என்று புந்தி எலியுறுத்தியது.

குழந்தைகளின் எதிர்காலத்தைக் கருதியாவது தன்னை சமாளித்துக்கொள்வதும், நல்லவிதமாய் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணுவதும் முக்கியம் என்று தோன்றியது.

குட்டியாகப் பிரசவித்த தெளிவை கெட்டியாகப் பற்றியபடி, மெல்ல கூடத்துக்கு வந்தாள்.

"சாப்பாடு போடும்மா" என்றாள். வழக்கட்டாயமாக தயிர்சாதமாகச் சாப்பிட்டாள். யாரிடமும் எதுவும் பேசாமல் அறைக்கதவை சாற்றிக்கொண்டு படுத்திருக்காமல் யோசித்தாள்.

மாலையில் பள்ளியிலிருந்து திரும்பின விஷயம் ஜக்குவும், அவனிடம் வந்தமர்ந்து வழக்கமாகத் தாங்கள் பேசும் அப்பா பேச்சைப் பேசி, "மம்மம்மா அப்பா வருவார்? திரும்ப வேலை எக்ஸ்டென்ட் ஆகாம, சொன்னா சொன்னபடி வந்துடுவார், இல்லே? அப்பா

வர்றப்போ பெரிய்ய ரோஜா மாலையா வாங்கிட்டுப் போகணும்... ராக்கெட்டோட இன்னும் வேற என்னல்லாம் வாங்கிட்டு வருவார்? சுதீர் அப்பா மாதிரி எனக்குப் புரியாத கணக்கைச் சொல்லிக்குடுப்பார், இல்லே? நா பெரியவனானதும் அப்பா எனக்கு ஸ்கூட்டர் வாங்கித் தரேன்னு சொல்லியிருந்தாரும்மா... எனக்கு ஸ்கூட்டர் வேணாம்... புல்லட்தான் வேணும்! ஞாபகம் இருக்காம்மா, ஒருதரம் அப்பா..." என்று கிரி வரும் நாளைப் பற்றியும், அவனோடு வாழ்ந்த நாட்களின் இனிமை பற்றியும் கண்களில சந்தோஷமும், எக்கச்சக்க எதிர்பார்ப்பும் வெளிச்சம்போடப் பேசிய நாழிகையில், தான் என்ன செய்யவேண்டுமென்பது துர்காவுக்குப் புரிந்துபோயிற்று.

குழந்தைகளின் ஆரோக்கியமான எதிர்காலத்துக்காக...

என் பையன்களின் நெஞ்சில் தெளிவும், நம்பிக்கையும் என்றும் குடியிருப்பதற்காக...

குழப்பம், வேதனை, பரிதவிப்பு அத்தனையையும் ஒதுக்கிவைத்துவிட்டு, மீண்டும்மீண்டும் நிதானமாக யோசித்ததபோது, தான் எடுத்திருக்கும் முடிவுதான் சரியானது என்று புரிய, அன்றிரவு குழந்தைகள் உறங்கின பின்னர் மாமியாரையும், அங்கேயே தங்கியிருந்த பெற்றோரையும் தேடிச்சென்று,

"பசங்களைக் கூட்டிகிட்டு அமெரிக்காவுக்குப் போய் இரியை நேரிடையாவே பார்த்துப் பேசிடலாம்ன்ற தீர்மானத்துக்கு வந்திருக்கேன், அத்தே..." என்றபோது, அவள் குரல் பிசிறில்லாமல் உறுதியாக இருந்தது.

(18)

விசுவும் ஜக்குவும் தலைகால் புரியாத குஷியில் இருந்தனர்.

விமானத்தில சவாரி!

அதுவும் ஜம்போவில்!

அதுலும் அமெரிக்காவுக்கு!

இரண்டு பேரும் ஒரு இடத்தில் பொருந்தி உட்காராமல் விமானத்தின் இத்தக்கோடிக்கும் அந்தக் கோடிக்கும் போயவந்தார்கள்.

அரைமணிக்கொருதரம் பாத்ரூமுக்குச் சென்று கதவை சாற்றிக்கொண்டு, அங்கிருந்த பூடி கோலோனை மேலே தெளித்துக்கொண்டு மணக்கமணக்க நின்றார்கள்.

விமானப் பணிப்பெண், 'ஜூஸ் வேணுமா?' என்று கேட்டபோதெல்லாம், வேண்டும் என்ற தலையாட்டி வாங்கிக் குடித்தார்கள்.

பிஸ்கெட்டையும் சாக்லெட்டையும் வயிறுமுட்டத் தின்றார்கள்.

ஜன்னல் வழியாக வெளியில் வேடிக்கை பார்த்தார்கள். வெள்ளியில் பருத்தபஞ்சாய் விரிந்துகிடந்த மேகக் கூட்டங்களைப் பார்த்து வியந்தார்கள்.

பயணிகளுக்குக் காட்டப்பட்ட சினிமாவைக் கொஞ்ச நேரம் பொறுமையாய் பார்த்தார்கள்.

பின்னர் அம்மாவிடம் ஏதோ கேட்டு பதில வராது போக, அவளை மாதிரியே கண்மூடித் தூங்க முயற்சித தார்கள்.

இதனை அமர்க்களத்திலும் பாதிக்கப்படாமல் துர்கா சலனமில்லாமல் அமர்ந்திருந்தாள்.

கிரியிடமிருந்து கடிதம் வந்ததும்; இரண்டு நாட்கள் நிலைகுலைந்துபோனபின் ஒருவழியாய் தெளிந்து, செய்ய வேண்டியவற்றை வரிசையாய் புரிந்துகொண்டதும்; மாமியாரிடமும் பெற்றோரிடமும் மனம்விட்டுப் பேசியதும்; தன் முதலாளியிடம் நடந்தவற்றையும் செய்யநினைத் திருப்பதையும் கூறி பத்து நாட்கள் விடுமுறை வாங்கியதும்; அலருடைய உதவியைக் கொண்டே டிக்கெட் எடுத்து அமெரிக்கன் கான்ஸுலேட்டில் பேசவேண்டியவரிடம் பேசி, சரியாக ஒரே வாரத்தில் இளம்பிவிட்டதும்... நினைக்க நினைக்க இனமும் நம்பமுடியாத சமாச்சாரங்களாகவே அவளுக்குத் தோன்றின.

அடிபட்ட வேகத்தில் மனசு மரத்திருந்தது. வலியில் இருதயம் கசந்திருந்தது.

ஆனாலும் செய்யவேண்டியது மாத்திரம் ஆணியடித்த மாதிரி உள்ளுக்குள் பதிந்துபோயிருந்தது.

கைப்பையிலிருந்து கிரியின் கடிதத்தை எடுத்து இன்னொரு தரம் படித்துப்பார்த்தாள்.

விலாசத்தை மனப்பாடம் செய்துகொண்டாள்.

ஒருவேளை இதைத் தவறவிட்டுவிட்டாலும் முழிக்க வேண்டாமே!

டெலிபோன் எண்ணையும் நான்கு தரம் மனசுக்குள் சொல்லிப்பார்த்துக்கொண்ட பின், கடிதத்தை மறுபடி பைக்குள் வைத்துக்கொண்டாள்.

ஏர் இந்தியா விமானம் லண்டனை அடைந்ததும், அதற்கொரு பிள்ளையைப் பிடித்துக்கொண்டு ட்ரான்ஸிட் லவுஞ்சுக்குச் சென்று உட்கார்ந்தாள்.

இங்கே விமானம் மாற வேண்டும்.

லண்டனிலிருந்து நல்லவேளையாய் பாஸ்டனுக்கு நேர் விமானம் இருக்கிறது.

இல்லாவிட்டால் நியூயார்க் சென்று அங்கிருந்து மீண்டும் விமானம் மாறி பாஸ்டனுக்குச் செல்லவேண்டும். இப்போது அந்தத் தொல்லை இல்லை.

பாஸ்டனில் இறங்கி ஒரு டாக்ஸி பிடித்தால் நேராக கிரி இருக்கும் வீட்டுக்குச் சென்றுவிடலாம். விசாரித்த வரைக்கும அந்தக் குறிப்பிட்ட விலாசம், பாஸ்டன் நகரிலிருந்து அறுபது மைல்கள் தொலைவில் இருக்கிறது என்று தெரியவந்தது.

லண்டனிலிருந்து புறப்படும் விமானம் மாலை ஆறுமணி அளவில் பாஸ்டனுக்குப் போய்ச்சேரும் என்றார்கள். இறங்கி, கஸ்டமஸ், இமிக்ரேஷனைக் கடக்க அரைமணி, டாக்ஸி பிடித்து குறிப்பிட்ட விலாசத்துக்குச் செல்ல மேற்கொண்டு ஒருமணி ஆக, எப்படியும் இரவு எட்டு மணிக்குள் போய்விடலாம்.

கிரி வீட்டில் இருந்தால் தேவலை... எங்காவது வெளியில் போயிருந்தால் கஷ்டம்.

அது லின்டாவின் வீடாகத்தான் இருக்கவேண்டும். அவளும் இருப்பாளோ?

தொடர்ந்து எதையும் துர்கா எண்ணமுடியாதபடி விசுவும் ஜகுவும் அவளைத் தொணதொணத்தார்கள்.

"இந்த லண்டன்லதான அப்பா இருந்தாராம்மா?"

"ஊருக்குள்ள போய் லண்டன் பிரிட்ஜையும் பக்கிங்ஹாம் பாலஸ்ஸையும் பார்க்க முடியாதாம்மா?"

"இருமம்மி வர்றப்போ பார்க்கலாமா? வர்றப்போ அப்பாவும் நம்மகூட வருவார்தானேம்மா? டே ஜக்கு- நா இப்பவே சொல்லிட்டேன், நாந்தான் அப்பா பக்கத்துல உக்காந்துப்பேன்! அப்பறம் வீணா சண்டை பிடிக்கப்படாது, ஆமா!"

"நீ ஒரு பக்கம் உக்காரு, நா இன்னொரு பக்கம் உக்காரேன்..."

"அம்மா எங்கடா உக்காருவாங்க?"

"என் பக்கத்துல..."

"ஆசை, ஆசை! அப்பாவுக்கு ஒரு பக்கம் நானு, இன்னொரு பக்கம் அம்மா!"

"பாருங்கம்மா இவனை..."

"நாந்தானேடா முதல்ல அப்பா பக்கத்துல உக்காரு வேன்னு சொன்னேன்? தூங்கிட்டு இருந்துட்டு, இப்ப 'பாருங்கம்மா இவனை'ன்னு அழுதா ஆச்சா! ஜக்கு, மக்கு..."

"அ-ம்மா..."

"கொஞ்சம் சும்மா இருக்கமாட்டியா, விசு?"

"இல்லேம்மா... இவன்தான்..."

"ப்ளீஸ் விசு... இது ஏர்போர்ட் நாலு பேர் நம்மளைப் பார்த்து சிரிக்கற மாதிரி நடந்துக்கலாமாப்பா?"

"சாரிம்மா... இனிமே அப்படி நடந்துக்கமாட்டேன். இவனைச் சின்டினா அப்பாவுக்குப் பிடிக்காது, இல்லே? சாரி ஜக்கு, நீயே அப்பா பக்கத்துல உக்காந்துக்கோ... ஓ.கே.வா?"

"ஏம்மா, நாம இப்போ அமெரிக்காவுல எங்க போறோம்?"

"பாஸ்டன்..."

"அங்கதான் அப்பா இருக்காரா?"

"ம்..."

"அப்பாவுக்கு நாம வர்றது தெரியுமாம்மா?"

"....."

"சர்ப்ரைஸாம்மா?"

"ம."

"அப்படியே திகைச்சுப்போயிடுவார், இல்லே?"

"ம்."

"அப்பா ஏர்போர்ட்டுக்கு வரமாட்டாரா?"

"எனக்குத் தலைய வலிக்கறது, ஜக்கு... கொஞ்சம் சும்மா இரேன்! விசு, இவனை அழைச்சிட்டு அந்தக் கடை யெலலாம் வேடிக்கை காட்டிட்டு வாயேன்..."

பிள்ளைகள் அந்தப்பக்கம் நகர, தான் இவர்களுடன் இரவுநேரத்தில் போய் நின்றதும் கிரி எப்படி அதிர்ந்து போவான் என்பதைக் கற்பனை பண்ணிப்பார்த்தாள்.

சர்ப்ரைஸ்தான்... நிச்சயம்.

— பாஸ்டனுக்குப் பிளேன் போறப்போ ஆறுமணி ஆயிடும்னு சொல்றே... ஃபார்மாலிட்டீஸ் முடிஞ்ச, கிரி இருக்கற இடத்துக்குப் போறப்போ இருட்டிடும் போல இருக்கே, துர்கா? அயல்நாட்டுல, முன்னபின்ன தெரியாத சூழ்நிலைல குழந்தைகளோட நீ போய் நிக்கறது எனக்கு அத்தனை சரியானதா படலைம்மா.. வேணா, கிரிகிட்டத் தந்தியடிச்சு உங்களை வந்து கூட்டிக்கச் சொல்லியா?

— வேணாம்ப்பா...

— என்னம்மா பிடிவாதம் இது!

— ப்ளீஸ், என்னை என் போக்குக்கே விட்டுடுங்கப்பா. சமாளிச்சிடுவேன்ற தைரியம் எனக்கு இருக்கு.

— எதுக்கும் கதாகருக்கு ஒரு போன் போட்டுப் பேசி, விஷயம் இப்படின்னு சொல்லலாமா, துர்கா?

— வேணாம் அத்தே... ரெண்டாம் பேருக்குத் தெரியாம போயிட்டுத் திரும்பிடணும்னு நினைக்கறேன்.. ப்ளீஸ், புரிஞ்சிக்கங்க...

— ஒருவேளை நீ போறப்ப கிரி உன்ன இல்லாம இருந்தான்னா, என்ன பண்ணுவே? அவசரத்துக்கு உதவி பண்ணத் தெரிஞ்சவரா ஒருத்தர் இருக்கறது நல்லதுதானே?

— உங்க மூத்த பிள்ளை விலாசம், போன் நம்பர் எல்லாம் வெச்சிகிட்டிருக்கேன்... தேவைப்பட்டா கண்டிப்பா நானே அவருக்கு போன் பண்றேன்.

அழுத்தமாகப் பேசி, அத்தனை பேரின் வாயையும் அடைத்தாகிவிட்டது.

வெறி மாதிரி ஒரேவித சிந்தனையுடன் செயல்பட்டு, இதோ இப்போது லண்டன் வரைக்கும் வந்தாயிற்று.

அரைக்கினறு தாண்டிவிட்டேன்.

முழுசையும் தாண்டுவேனா?

என் குழந்தைகளுக்கு நல்லவிதமாக எதிர்காலத்தை அமைத்துத் தருவேனா?

கிரி ஊரில் இருக்கவேண்டுமே... இருப்பாரா? இலலாதுபோனால்...?

நினைக்கக்கூடாது என்ற தடை விதித்திருந்த எண்ணம் பரபரவென்று பொங்கிகொண்டு இளம்பிறையில், கண்கள் கலங்க முற்பட்டன. உளளங்கையில் விபூதியை கசித்து விரல்கள் சன்னமாக நடுங்கின.

கூடாது... இந்த பயமும் பலவீனமும் இந்த நிமிஷம் எனக்குக் கூடவே கூடாது.

இடம்கொடுக்க மாட்டேன்...

கிரி குறிப்பிட்டுளளது போல நான் சாதாரணப் பெண இல்லை. அழுது சிரித்து ஆர்ப்பாட்டம் செய்யும் பெண இல்லை என்பதை நிரூபிக்க வேண்டும்.

நிரூபிப்பேன்.

தாடையை இறுக்கி, தன்னை விரைப்படுத்திக் கொண்டவள், விமானம் புறப்படப்போகும் அறிவிப்பைக் கேட்டுவிட்டு எழுந்தாள்.

விமானம் பாஸ்டன் நகரில் இறங்கும்போது சரியாக அந்த உனர்ப்படி மணி ஆறு பத்து என்றது.

கிட்டத்தட்ட ஒன்றரை நாட்களாகப் பயணம் செய்திருந்ததில், உற்சாகம் குறைந்து சோர்ந்துபோயிருந்த பிளளைகளுடன் வெளியில் வந்து டாக்ஸி ஒன்றில் ஏறி, விலாசத்தைச் சொல்லிவிட்டு இருக்கையில் சாய்ந்தபோது, இனம்புரியாத ஒரு தவிப்பு அவளிடம் காணப்பட்டது.

ஏழு ஐம்பது.

டாக்ஸி நின்றது.

கண்ணாடி வழியாகக் கண்முன் பிரும்மாண்டமாய் தெரிந்த வீட்டைப் பார்த்தவள், பயந்துபோனாள்.

இதுவா! இந்த மாளிகையா!

கதவைத் திறந்து, வெலவெலத்த கால்களை வலுக் கட்டாயமாக இழுத்துத் தரையில் ஊன்றினாள்.

ஒருவேளை கிரிதர் இல்லாமல்போனால் என்ன பண்ணுவது என்கிற ஐயத்துடன், டாக்ஸியை இருக்கச் சொல்லிவிட்டு, படிகளில் பின்னைகளுடன் ஏறி, வாசல் மணியை அழுத்தினாள்.

குண்டான நீக்ரோ பணிப்பெண் கதவைத் திறந்தாள்.

அவளிடம் கிரிதரைப் பார்க்கவேண்டுமென்று இவள் கூற, ஒரு நிமிஷம் அப்படியே நின்றுவிட்டு, "யார் வந்திருப்பதாகச் சொல்லட்டும்?" என்று பதில்கேள்வி கேட்டதும், துர்கா யோசித்தாள்.

'மிஸஸ் கிரிதர்' எனலாமா? அல்லது...

"துர்கா..."

தூக்கத்தில் தள்ளாடும் குழந்தைகளையும் அவளையும் உள்ளே வரச் சொல்லி, மிகப்பெரியதாய் இருந்த வரவேற்பறையில் அமரச் செய்தபின் அவள் உள்ளே போனாள்.

என்னை நான்கே நிமிஷங்களில் கிரிதர் அந்த அறையில் இருந்தான்.

வேகமாக ஓடிவந்திருக்க வேண்டும்... மூச்சிரைத்தது.

பருத்திருந்தான்... சிவந்திருந்தான்... மேலைநாட்டு வாசம் அவனுக்கு நன்றாகவே ஒத்துக்கொண்டிருந்தது.

"து...ர்...கா..."

பத்து மாசங்கள் கழித்து சந்திக்கும் மூலமோ, சந்தோஷமோ குரலில் துளி இல்லாமல், கிளர்ப்பும் கொஞ்சம் கோபமுமாகப் பேசினவனை, ஓடிச்சென்று கட்டிக்கொள்ளலாமா வேண்டாமா என்று விகலும் ஜக்குவும் மிரண்டுவிட்டதை துர்காவால் புரிந்துகொள்ள முடிந்தது.

"எங்கே வந்தே, துர்கா? இவங்களையும் கூட்டிகிட்டு? ஓ, ஸம் காட்! இந்த மாதிரி பிச்சைக்காரக் கோலத்துல லிண்டா உங்களைப் பார்த்தா என்ன நினைப்பா? தாங்க் காட்... அவ அம்மாவுக்கு உடம்பு சரியில்லேன்னு ஊருக்குப் போயிருக்கா! எங்க வந்தீங்க? வாய்போறதா தகவல் குடுத்திருக்கக் கூடாதா? இப்படி மரியாவத தெரியாம முந்திரிக்கொட்டை மாதிரி வந்து நின்னு... கடவுளே! என்னாச்சு துர்கா, உனக்கு?"

தன்னைக் கவனிக்க வேண்டாம், அன்பு கசிய பேசவேண்டாம்... ஆனால், அப்பா அப்பா என்று உருகிக்கொண்டு வந்திருக்கும் குழந்தைகளைக்கூட லட்சியம் பண்ணாமல், 'பிச்சைக்காரக் கோலம், மரியாதை தெரியாதவர்கள்' என்று அவன் கண்முடித்தனமாய் பேசுவது மிகுந்த வருத்தத்தை உண்டாக்க... இருநாழிகை இருந்த கட்டுப்பாட்டை இழந்து மெதுவாக துர்கா விசும்ப ஆரம்பித்தாள்.

கிரிதர் கத்துவதை சில நொடிகளுக்கு நிறுத்திவிட்டு, கண்களை இடுக்கிக்கொண்டு அவளை வெறித்தான்.

"ஓ, நீ ஐடியாவோடதான் வந்திருக்கே! பிள்ளைங்களைக் காட்டி, அழுது மாய்மாலம் பண்ணி என் மனசை மாத்திடலாம்னுதானே உன் திட்டம்! ஓ, ஹெல்! பண்டி ஹெல்! லாரி துர்கா, அந்த நாடகமெல்லம் என்கிட்ட

நடக்காது! நா எடுத்த முடிவு எடுத்ததுதான்! உனனைக் கெடடிக்காரி, புத்திசாலினனு நமபினேன்... ஷிட்! யூ ஆர் கதடிங! புருஷன் வேணுன்றதுக்காக அழுது சிரிச்சு, ஆர்பபாட்டம் பண்ணி, விவேகமில்லாம நடந்துக்கற நம்ம நாட்டுப பொண்கள்ல நீயும் ஒருத்தின்னு புரிஞ்சுபோச்சு! ஒனனு சொல்றேனே, கேட்டுக்கோ துர்கா... நீயோ, உன் பிளனைங்களோ என்ன அழுது கெஞ்சினாலும் நா அங்க வரப்போறதில்லே! இனிமே என் லைஃப் விடடாவேறாட்தான்! உங்களுக்கு ஏராளமான பணம் குடுக்க வேண்டாரெடியா இருக்கா, அதனால..."

அவனை முடிக்க விடாமல துர்கா குலுங்கி அழுதாள்.

"ஷட் அப், ஐ ஸே! ஸ்டாப் தட நான்சென்ஸ் ரைட் நௌ! பணமாம் பணம்... யாருக்கு வேணும் உங்க பிளடி பணம்? அதுதானே உங்க கண்ணை மறைச்சு இங்க இழுத்திருக்கு? நீங்களே அதைக் கட்டி கிட்டு அழுங்க! எனக்கோ என பிள்ளைங்களுக்கோ அதிலேருந்து சத்தியமா ஒத்தைப்பைசாகூட வேணாம்! என்ன சொன்னீங்க... அழுது மாயமாவம் பண்ணி, பிள்ளைங்களைக் காட்டி, கெஞ்சிக் கூத்தாடி உங்களை அழைச்சிட்டுப் போக வந்திருக்கேன்னு தானே? அதை நா செஞ்சிட்டா, அப்பறம் என்னைவிடத் தன்மானமில்லாத, ரோஷமில்லாத பெண் எவளுமே இருக்கமாட்டா, தெரியுமா? உங்கம்மா எத்தனை கெஞ்சியும் அவா பணத்தைத் தொடாம, எங்கூடவாகிட்ட கடன் வாங்கி என பிள்ளைங்களை இங்க கூட்டிட்டு வந்திருக்கற நானா, எனகோட வாழ வாங்க்ன்னு உங்களைக் கெஞ்சவேன்னு நினைச்சீங்க? ஹௌ அர்ரகெண்ட்! யூ ஆர், கிரி! ஆமபிள்ளைங்கற திமிர்ல எதை வேணா செய்யலாம், பேசலாம்னு இனியும் கனவு காணாதீங்க! ஆறு மாசத்துல வரேன்னு சத்தியம பண்ணிட்டுப் போன நீங்க, சொன்னபடி திரும்பி வராததுல பசங்க ரெண்டு பேரும் எப்படி ஏமாந்துபோயிருக்காங்கன்னு எனக்குதான் தெரியும்... இந்த நிலைல, இனிமே நீங்க வரவே மாட்டீங்கன்னு நா சொன்னா, உடனே ஓடோடி வந்துடுவீங்கன்னு நினைச்சீங்களா? நா பொய் சொல்றதாதான இவங்க நினைப்பாங்க... உங்க மேல அததனை நமபிக்கை! நோ, கிரி... ஆயுசுபூராயந்தம் எனகூட வேற மெசகிட்டு, என் சமபாத்தியத்துல என்னால முடிஞ்சவரைக்கும் நலலவிதமா வளர்க்க நினைக்கற இவங்க மனசுல 'அம்மா பொய் சொல்றா'ன்ற எணணம பதிஞ்சிட்டா, அப்பறம் என்னிக்குமே என்னை மன்னிக்க மாட்டாங்க... என்னை மனசால நெருங்கவும மாட்டாங்க! நோ, எனக்கு அந்த நிலை கூடாது! உங்க பிள்ளைங்களை எதுக்காக பத்தாயிரம் மைல் தாண்டி கூட்டிட்டு வந்திருக்கேன், தெரியுமா? 'தைரியமா, ஆம்பிளையா, 'விக, ஜக்கு, உங்கம்மா பொய் சொலலலை... எனக்கு உங்களோட வாழப் பிடிக்கலை... இனிமே அங்க வரமாட்டேன்'னு ஒருதரம் உங்க வாயால சொல்லிடுங்கன்னு உங்களைக் கேட்டுக்கத்தான... ஆனா, அதுக்கு அவசியமே இல்லே! என்னா, கொஞ்சம் முன்னால நா எதிர்பார்த்ததுக்கும் அதிகமாவே பேசிட்டீங்க! போதும், நா வந்த வேலை முடிச்சிட்டுது... இனி இந்த மண்ணுல நானோ, என் பிள்ளைங்களோ, அனாவசியமா ஒரு நிமிஷம்கூட நிக்கமாட்டோம்..."

மூச்சிரைக்கப் பேசியவள், வேகமாய திரும்பினாள்.

"விக, ஜக்கு... கிளம்புங்க..." என்றபடி அவர்கள் கைகளைப் பற்றிக்கொண்டு வெளியில் வந்து, படிகளில்

இறங்கி, காத்திருந்த டாக்ஸியில் அமர்ந்து, 'ஏர்போர்ட்' என்ற கூறின நிமிஷத்தில்,

'அமிழ்ந்து பேரிரு ளாமறியா மையில்
அவலமெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணறமாகுமாம்
உதய கன்னி உரைப்பது கேட்டிரோ!
... போற்றி! போற்றி! ஜயஜய போற்றி! இப்
புதுமைப் பெண்ணொளி வாழிபல் லாண்டிங்கே!

– என்று தன் வெண்கலக் குரலில் மகாகவி பாரதி பாடுவது போன்ற பிரமை எழுந்து சிலிர்ப்பை ஏற்படுத்த, ஒருவித கம்பீரத்தோடு கண்களில் பெருகிய நீர் கன்னத்தில் வழிந்து மார்பில் சிதற துர்கா அனுமதித்தாள்.

P.W.A. 1416
1/3/07